
கல்கி
KALKI 2.2.2003
ரூ. 6.00
பகல் கனவு?




# Rs. 30/- per gm OFF

*This discount is for ready stock items only*

We are completing 2 years of successful service by the end of this month. To celebrate this and to express our gratitude to your patronage - we are going to sell with an offer of Rs. 30/- per gram off. This is the first time in gold jewellery trade in India...

This is only to show our "THANKS" to you who made us a success in the market.

**This offer is for 4 days only**

## Special Discounts

- **Rs. 30/- per gm off**
- No Making Charges
- Reduced Wastage
- No charge for ordinary stones
- 10% off on Ruby, etc.
- Rs. 2000/- per carat off on Diamonds
- Gifts
- Usual Service with a Smile

SWARNALAYA
Jewellery

5, Bazulla Road, T.Nagar, Chennai - 600 017. Tel : 28156386, 28157787, 28158144.
e-mail : asukumaran@eth.net www.swarnalayajewellery.com

# கல்கி

2.2.2003






சினிமாவில் பாட்டு அவசியமா?
- பக். 82



நித்தம் ஒரு கலாட்டா
- பக். 96



தரணி பேட்டி
- பக். 4



பலாத்காரத்துக்கு மரண தண்டனையா?
- பக். 24



தமிழன்பன் கவிதை
- பக்.17



நட்சத்திர சந்திப்பு
- பக்.8

**சா**த்தான்குளம் தேர்தலை புறக்கணிப்பதாக தி.மு.க. அறிவித்திருக்கிறது. இந்த முடிவைப் பற்றி அரசியல் உலகம் என்ன சொல்கிறது?

**எஸ். கிருபாநிதி, (மாநிலத் தலைவர், பா.ஜ.க.)**

**பா.**ஜ.க.வுக்குச் சென்ற முறை ஒதுக்கப்பட்ட இந்தத் தொகுதியில் நின்று எங்களைச் சங்கடப்படுத்த தி.மு.க. விரும்பவில்லை என்பது என் கருத்து. மாறி வந்திருக்கும் அரசியல் சூழல் காரணமாக அப்பட்டமாக எங்களை ஆதரிக்க முடியாத நிலையிலும் அவர்கள் இருக்கிறார்கள். போட்டியிடப் போவதில்லை என்று அறிவித்து விட்டால், இரு கட்சிகளிடையேயான இடைவெளி இன்னமும் அதிகமாகாமல் இருக்கக் கூடும் என்று இப்படி முடிவெடுத்திருக்கலாம்.

தேசிய அளவில் பா.ஜ.க.வுடன் கூட்டணியில் இருப்பதால் சிறுபான்மை மக்கள் தி.மு.க.வுக்கு எதிராக இருகிறார்கள். சாத்தான் குளத்தில் தி.மு.க. நின்றால் அங்கு 36 சதம் உள்ள கிறிஸ்துவர்களின் ஆதரவு தி.மு.க.வுக்குக் கிடைக்காது. இந்தக் கருத்தை மனத்தில் கொண்டும் முடிவை எடுத்திருக்கலாம்.

• சி. விஜயபாஸ்கர்



# சாத்தான்குளம் புறக்கணிப்பு சரிதானா?



• எஸ். கிருபாநிதி



• சோ. பாலகிருஷ்ணன்

**இ. வேல்முருகன், (மாநில பா.ம.க. துணைச் செயலாளர்)**

**தி.**மு.க. எடுத்த முடிவு சரியானதுதான். கடந்த முறை நடந்த மூன்று தொகுதி இடைத் தேர்தல்களில், ஆளும் கட்சியின் அமைச்சர்களும், சட்டமன்ற உறுப்பினர்களும், அராஜகமான முறையில் செயல்பட்டனர். காவல் துறையைக் கையில் வைத்துக் கொண்டு பல்வேறு பகுதிகளில் வாக்குச் சாவடிகளைக் கைப்பற்றினர். வாக்கு எண்ணிக்கையின் போது எதிர்க்கட்சி ஏஜெண்டுகளை மிரட்டி வெளியில் அனுப்பியதும் நடந்தது. இப்போதைய நிலையிலும் ஆளும் கட்சி அதே நடைமுறையைத்தான் கையாளும். பதினைந்து அமைச்சர்கள் சாத்தான்குளம் தொகுதியில் இப்போதே முகாமிட்டு பணிகளைத் துவக்கியிருக்கிறார்களே!

இவற்றை மீறி தேர்தல் கமிஷன் சுதந்திரமான முறையில் தேர்தலை நடத்தி, பொதுமக்கள் எந்தவிதத்தடையுமின்றி வாக்களிக்க வழி செய்தால், தமிழக மக்களை தட்டேந்துநிற அவலத்துக்கு ஆளாக்கிய இந்த அரசுக்கு மக்கள் சரியான பாடத்தைப் புகட்டுவார்கள் என்பதில் சந்தேகமில்லை.

**சோ. பாலகிருஷ்ணன், (தலைவர், தமிழ்நாடு காங்கிரஸ்)**

இது ஜனநாயகத்துக்கு நல்ல அறிகுறி. தி.மு.க. புறக்கணிப்பதால் மக்கள் அ.தி.மு.க. ஆட்சியின் செயல்பாடு பற்றி யோசிப்பார்கள். இந்த நிலையில் சாத்தான் குளம் தேர்தல், முறையாக நடக்க, ஓய்வு பெற்ற உயர்நீதி மன்ற நீதிபதிகள், ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரிகள், பத்திரிகையாளர்கள், எழுத்தாளர்களைக் கொண்ட ஒரு குழுவை நியமித்து, தேர்தல் நியாயமாகவும், நேர்மையாகவும் நடத்தப்படுகிறதா என்று கண்காணிக்க வேண்டும்.


• தி. வேல்முருகன்

ஒரு இடைத் தேர்தல் முடிவு ஆளும் கட்சியை எந்த விதத்திலும் பாதிக்காது என்ற அடிப்படையிலும், புறக்கணிப்பில் இறங்கியிருக்கலாம். ஆனால் ஆளும் கட்சிக்கு ஓர் அதிர்ச்சி வைத்தியம் கொடுப்பதன் மூலம் அவர்கள் திருந்த ஒரு வாய்ப்பு கிடைக்கும். அந்த அடிப்படையில் ஜனநாயகக் கடமையை நிறைவேற்ற களத்தில் நிற்கும் காங்கிரஸ், அனைவரது ஆதரவையும் கோருகிறது.

**டாக்டர் சி. விஜயபாஸ்கர் (அ.தி.மு.க. மாநில மாணவரணிச் செயலாளர், சட்டமன்ற உறுப்பினர்)**

தமிழகத்தின் மூத்த தலைவர் என்று சொல்லிக் கொள்ளும் கருணாநிதி, ஜனநாயகக் கடமையைப் புறந்தள்ளிவிட்டுத் தேர்தல் களத்தை விட்டு ஓடுவது கண்டு தமிழக மக்கள் சிரிக்கிறார்கள். ஆளும் கட்சி அதிகார துஷ்பிரயோகத்தில் ஈடுபடுமாம். தி.மு.க. ஆட்சியில் இடைத்தேர்தல்களில் நடந்த முறைகேடுகளைப் பட்டியலிட்டால் தாளாது.

சாத்தான்குளம் தொகுதியில் தி.மு.க. நின்றால் தோற்று விடும் என்பதே உண்மை. பெரும்பான்மை மக்களை இழிவுபடுத்தும்படி பேசிய இவரது பேச்சு, பட்டி தொட்டிகளுக்கு எடுத்துச் செல்லப்படும் வாய்ப்பு இருப்பதால், தேர்தல் களத்தையே புறக்கணித்து ஓடுகிறார் கருணாநிதி. வழக்கம்போல் இந்த இடைத் தேர்தல்களிலும் மக்கள் இரட்டை இலைக்கே வாக்களித்து முதல்வரின் கரங்களை வலுப்படுத்துவார்கள்.

சந்திப்பு: ப்ரியன்
படங்கள்: ராஜன்


# கல்கி

பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டிற்காக பரதன் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடுபவர் :
கி.ராஜேந்திரன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 97

ஆசிரியர் :
சீதா ரவி

ஆசிரியர் குழு :
செ. ஏக்நாத் ராஜ்
அனுராதா சேகர்
ஆர்.சி. ஜெயந்தன்

வடிவமைப்பு :
எஸ். ஸ்டீஃபன்
பி.ஆர். ராஜன்

தொலைபேசி :
2234 5622, 23, 24
தொலைநகல் :
044 - 2234 5621

மின்னஞ்சல் :
ஆசிரியர் குழு :
kalki@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com
கல்கி இன்டர்நெட் முகவரி :
www.kalkiweekly.com

சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.330/-
ஆறு மாதம் : ரூ.165/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 62 யு.எஸ். டாலர்
இலங்கை : ரூ.2000/-

Bharathan Publications Private Limited, Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 097.

ஒவ்வொரு இதழும் உங்கள் மேன்மைக்கு

# "சுய பரிசோதனை வேணும்!"

**பொ**ங்கல் ஓட்டப் பந்தயத்தில் காட்டமான மசாலாவாகக் களமிறங்கி, வசூலில் கலக்கும் படம்



தரணி பேட்டி

தூள்! தில் படத்தை இயக்கிய தரணிதான் இப்போதும் 'தூள்' கிளப்பியிருக்கிறார். அவரது படங்களில், ஆரம்பக் காட்சிகளிலேயே டெம்போ தொடங்கி விடும். பேட்டியிலும் அதே டெம்போ!

"**சொ**ர்ணம் அக்கா கேரக்டர் தமிழ் சினிமாவுக்கு ரொம்பப் புதுசா இருக்கு. அது மாதிரியொரு ரவுடிப் பொம்பளையை எங்கே பார்த்தீங்கன்னு எல்லோரும் ஆர்வமாகக் கேட்கறாங்க?'' என்று தொடங்கினோம்.

''சொன்னா நம்ப மாட்டீங்க! கள்ளச்சாராயம், கட்டைப் பஞ்சாயத்து, கால் எடுப்பது, கை எடுப்பது மாதிரியான மொள்ளமாறித்தனங்களைத் தில்லா ஒரு லேடி செஞ்சுகிட்டு இருக்கிறதைப் பத்தி நாலு வருஷத்துக்கு முன்னாடி கேள்விப்பட்டப்போ நம்ப முடியலே. வட சென்னை ராயபுரம் பகுதியிலேதான் அந்த அம்மணிக்கு ஜாகைன்னு கேள்விப்பட்டு, தூரமா நின்னு, அவங்க நிஜ மேனரிஸத்தைக் கவனிச்சு பிரமிச்சுப் போனேன். அப்படியொரு சண்டிராணித்தனம். இந்தக் கேரக்டரை சினிமாவுக்கு கன்வர்ட் பண்ணும்போது யாரை நடிக்க வைக்கலாம்ன்னு போன வருஷமே முடிவு பண்ணிட்டேன். அவங்கதான் 'அந்தப்புரம்' படத்தில் நடிச்சு அசத்தின அந்த 'தெலுங்கு சகுந்தலா' என்று பிரமிப்போடு பேசினார் தரணி.

"தூள் படத்தில் நாயகனின் கிராமத்துக் குடிநீர்க் குளம், அங்குள்ள ஒரு தொழிற்சாலைக் கழிவு நீரால் மாசு படுவதாகக் காட்டியிருக்கிறீர்கள். பாதிப்பை உங்களுக்கு உண்டு பண்ணிய அந்தக் குளம் எந்த ஊரில் இருக்கிறது? அந்தத் தொழிற்சாலை யாருக்குச் சொந்தமானது...?"

"அந்தத் தொழிற்சாலையின் பெயரைச் சொல்ல வேண்டாம் என்று நினைக்கிறேன். தூத்துக்குடி மாவட்டத்தில் மக்கள் எதிர்ப்புக்கு மத்தியில், கண்ணாடி இழை தயாரிக்கும் ஒரு நிறுவனம் என்று மட்டும் க்ளூ தர முடியும்'' என்று பின்வாங்கிய தரணியிடம்... "அது 'ஸ்டெர்லைட்' தானே?" என்றோம்."



"அய்யய்யோ நான் அப்படிச் சொல்லவில்லை... என்னை வம்பில் மாட்டி விடாதீர்கள்" என்று மறுத்தார் தரணி. 'சரி போகட்டும்... இவரது எல்லாப் படங்களிலும் ஒரு நாட்டுப்புறப் பாடல் ஹிட்டாகி விடுகிறதே எப்படி?"

"நாட்டுப்புறக் கலைஞர்கள் வாழ வேண்டும், அவர்களுக்காக சினிமாவில் ஏதாவது செய்து கொண்டே இருக்க வேண்டும் என்று விரும்புகிறேன். 'தூள்' படத்தில் பரவை முனியம்மாவின் நடிப்புக்கு, அவர் பாடியிருக்கும் 'மதுரை வீரன்தானே' பாடலுக்கு, தியேட்டரில் கிடைக்கும் மரியாதையை எல்லா கிராமத்துக் கலைஞர்களுக்கும் கிடைக்கும் ஒன்றாகவே நான் பார்க்கிறேன்" என்று பெருமிதப்பட்டவரிடம்,

"உங்கள் படங்களில் ஏன் இத்தனை யுத்தச் சத்தமும், இரத்தக் களறியும்?" என்று வம்புக்கிழுத்தால்..

"தில் படத்தைவிட இதில் கொலைகள் குறைவு. கத்தியால் குத்துவது குறைவு" என்று கணக்கு கொடுக்கிறார். தேசிய விருதையும் வாங்கி, தியேட்டர்களில் வசூலையும் அள்ளிய 'காதல் கோட்டை' மாதிரி, டூ இன் ஒன்னாகப் படமெடுக்க வேண்டும் என்பது தான் தமது விருப்பம், எனும் தரணிக்குச் சொந்த ஊர் நெல்லைச் சீமை.

சென்னை குருநானக் கல்லூரியில் பேராசிரியராகப் பணியாற்றிய தந்தையின் பொருட்டு சென்னைக்குக் குடிபெயர்ந்த குடும்பம்.

"ஏழு வயதிலேயே சினிமா ஆர்வம். ஆனால் சினிமாவோடு சம்பந்தப்பட்ட கலைகளையும் முழுவதுமாய்த் தெரிந்து கொண்டு அதில் இறங்கவேண்டும் என்று முடிவு செய்தேன். முதலில் ஓவியம் கற்றேன். அடுத்து இசை... திலிப் ரமணி என்ற இசைக் குழுவைத் தொடங்கி, அதில் பாடுவது, கீ போர்டு வாசிப்பது என்று தொடர்ந்தது. கதையறிவுக்காக லயோலாவில் ஆங்கில இலக்கியம், அதன் பிறகு திரைப்படக் கல்லூரியில் படத்தொகுப்பைப் பயின்றேன்" என்று அதிரவைக்கும் இவர், டி.எப்.டி. படிப்பிற்குப் பிறகு பதினாறு வருடங்கள் ஆறு இயக்குனர்களிடம் பயிற்சி எடுத்துக் கொண்டாராம்... விடைபெறும் முன் தரணி உதிர்த்த அனுபவத் தத்துவம்:

"எந்தத் தொழிலைத் தேர்ந்து கொண்டாலும்... அதுக்கான தகுதி இருக்கான்னு சுய பரிசோதனை பண்ணிக்கணும்... திறமை இருந்தா உழைக்கணும். இல்லேன்னா அதைக் கத்துக்கிட்டு உழைக்கணும். உழைக்க ஆரம்பிச்சா, அதிர்ஷ்ட தேவதை உங்க கிட்டே வருவா... உழைக்கிறத நிறுத்திட்டா, தனக்குத் தகுதியான உழைப்பாளியைத் தேடி அவள் போய்க் கிட்டே இருப்பா.. கேர்ஃபுல்!"

— ஜெய்

படம்: டிஜிட்டல் சண்முகம்

"நாட்டுப்புறக் கலைஞர்கள் வாழ வேண்டும், அவர்களுக்காக சினிமாவில் ஏதாவது செய்து கொண்டே இருக்க வேண்டும் என்று விரும்புகிறேன்."

# ரிமோட்

'படப்பிடிப்பில் யாராவது சரியா வேலை செய்யலேன்னா அவருக்கு ரொம் பக் கோவம் வரும். அதே சமயம் நேரடியா சம்பந்தப்பட்டவங்ககிட்ட அதைக் காண பிக்கவும் தயக்கம். உடனே என்னைத் திட்டித் தீர்ப்பார். சம்பந்தப்பட்டவங்க அதைப் புரிஞ்சுக்கிட்டு தப்பைத் திருத்திக்கு வாங்க. ஆனா இதனாலே எங்களுக்குள்ளே சண்டை வரும்'.


இப்படி ஜெயா டி.வி.யில் கூறிய நடிகை யார்?

குழந்தைகளின் மூக்கையும் வாயையும் நன்கு ஊதுவது கிராமப் பழக்கம். ஐயோ இது கூடாதாம்! சளி உள்ளே செல்வதோடு அம்மாவின் வாயில் உள்ள பாக்டீரியாவும் உள்ளே சென்று நிமோனியா உண்டாகலா மாம். சன் டி.வி.யில் இதைக் கூறிய ஒரு குழந்தை நல மருத்துவர் 'குழந்தைக்கு நிமோனியா என்று சந்தேகப்பட்டால், உடனே 'நேத்தி தலைக்குக் குளிப்பாட் டினீங்களா?' என்று கேட்பேன். ஆமாம் என்று கூறும் அம்மா, மேற்படி பழக்கத்தை மேற்கொண்டதையும் கூறுவார். குழந்தைக்கு மூன்று வயதாகும்வரை இதைச் செய்து வந்ததாக ஓர் அம்மா பெருமையாகக் குறிப் பிட்டார். அதற்குப் பிறகு ஏன் நிறுத்தி விட்டீர்கள் என்று கொஞ்சம் எரிச்சலுடன் கேட்டேன். 'கிட்ட போனாலே என் மூக்கைக் கடிக்க ஆரம்பிச்சிட்டான் பையன்' என்று பதில் வந்தது' என்றார். வாழ்க அந்தக் குழந்தையின் தற்காப்பு உணர்வு.

ஜெயா டி.வி.யின் காலை மலர் நிகழ்ச்சியில் தவறாது இடம் பெறும் முரளி ப்ளஸன்ட்டாக இருக்கிறார். கேள்விகளை யும் ஆர்வம் பொங்கக் கேட்கிறார். ஆனால் வாய்ஸ் கல்ச்சர் என்பார்களே, அதுபோல ஏதாவது பயிற்சி எடுத்துக் கொண்டால் நன்றாக இருக்கும். பாதி வார்த்தைகள் அவர் தொண்டைக்குள் போய் விடுவதால் மிக மிக உன்னிப்பாக கவனிக்க வேண்டியிருக்கிறது.

'அகடவிகடத்தை' நடத்தும் பாஸ்கர ராவ் உணர்ச்சிப் பிரவாகமாக மாறித் தன் கண்களை அடிக்கடித் துடைத்து விட்டுக் கொள்வதில்லை. இயல்பாகவும் மனத்தில்

# ஐஸ்வர்யா ராய் வாவா!



பதியும் வகையிலும் பேசுகிறார். என்றா லும், 'உழைத்துக் கருத்தவர் திருமால். அந்தக் காரணத்தினால்தான், உழைத்துச் சிவந்த கரத்தை ஒத்த செந்தாமரையில் அமர்ந்த லட்சுமிதேவி அவரை அடைந் தாள்' என்றது அகடவிகடம்.

'வி' சானலில் ஒரு பாட்டு. 'மகாத்மா காந்தி வாவா, நேரு சாச்சா, வாவா, தூர்தர்ஷன் வாவா' என்று ஒரு பட்டியல். தேச பக்திப் பாடலோ என்று பார்த்தால், கொஞ்சம் கழித்து 'தாஜ் மகால் வாவா, ஐஸ்வர்யா ராய் வாவா' என்று தொடர்ந்தது பாடல். பாடிய வரைச் சொல்லாமல் விடுவது தர்ம மில்லை. சல்மான்கான்!

தொடக்கத்தில் தன் கணவர் செல்வமணியைப் பற்றி அங்கலாய்த் திருப்பவர் ரோஜா!

- சேனல் பாய்

பல நூற்றுக் கணக்கான வெற்றிகரமான ஏற்றுமதியாளர்களை உருவாக்கிய ஒரு உயர்ந்த பயிற்சியகம் : அகிலம் - எங்களது விரிவான

# ஏற்றுமதிப் பயிற்சி

... வகுப்புகளை மதுரையிலும், கோவையிலும் நடத்துகிறோம். இப்பயிற்சியின் மூலமாக நீங்கள்...

ஜவுளிப் பொருட்கள், ஆயத்த ஆடைகள், கைத்தறி மற்றும் விசைத்தறி உற்பத்திப் பொருட்கள், என்ஜினியரிங் பொருட்கள், கைவினைப் பொருட்கள், ஸ்பைசஸ், மூலிகை மற்றும் விவசாய உற்பத்திப் பொருட்கள் ஆகிய பொருட்களை 'உற்பத்தி செய்யும் ஏற்றுமதியாளராகவோ' அல்லது 'வணிக ஏற்றுமதியாளராகவோ' ஏற்றுமதி வணிகம் செய்யலாம். நீங்கள் வெற்றிகரமாக ஏற்றுமதி வியாபாரம் செய்வதற்கு புதிய முறையில் பயிற்சியும், வழிகாட்டுதலும் வழங்குகிறோம். நம் நாட்டில் ஏற்றுமதிக்கு வரம்பில்லா வாய்ப்பு உள்ளது. பெண்களும் ஏற்றுமதியில் ஈடுபட்டு வெற்றி பெறலாம். எங்களது ஒப்பற்ற பயிற்சியின் மூலமாக :

**ஏற்றுமதி செய்வதற்கு :** உதவும் அரசுத் திட்டங்கள், நிறுவனங்கள், நிறுவனம் தொடங்கும் வழிமுறைகள், சரியான பொருளைத் தேர்ந்தெடுத்தல், நாடுகளையும், இறக்குமதியாளர்களையும் அறிதல், விலையை நிர்ணயிப்பதும், பணம் பெறுவதும், பிரச்னையில்லாமல் வெற்றிகரமாகச் செய்தல், சரக்கு அனுப்புவதில் உள்ள வழிமுறைகள், வெற்றிக்கு உதவும் பல்வேறு இலவச சேவைகள், வெற்றிக்கு நடைமுறை யோசனைகள், படிப்படியாக வெற்றிக்கு வழி காட்டுதல்.

**- ஆகியவை பற்றி விரிவாகக் கற்றுத் தருகிறோம். வகுப்புகள் நடைபெறும் இடங்கள் :**

**மதுரை :** 23, கற்பக நகர் 9வது கிராஸ், கோ.புதூர், மதுரை - 625 007.
போன் : 0452 - 2560778/2566987/2560184 செல் : 98431 56077

**கோவை:** ஸ்ரீ ஆர்வி ஹோட்டல்ஸ், காந்திபுரம் டவுன் பஸ் நிலையம் அருகில், பாரதியார் ரோடு.
கோவை - 641 044. செல் : 98431 56077

# அகிலம் ஏற்றுமதிப் பயிற்சியகம்

034, கற்பகவிநாயகர் காலனி, கோ.புதூர், மதுரை - 625 007.
போன் : 0452 - 2560778/2566987/2560184 செல் : 98431 56077



# அமர்நாத் - திருக்கயிலாயம் - 12 சோதிர்லிங்கம்



**திருக்கயிலாயம் - மானஸரோவர் - முக்திநாத் - காசி 27 நாட்கள் (நேபாள் வழி) மே முதல் செப்டம்பர் வரை பிரதி மாதம்தோறும் புறப்படுகிறது.**

12 சோதிர்லிங்க திருப்பயணம் 05.05.2003 மற்றும் 05.06.2003 முதல் 25 நாட்கள் தூங்கும் வசதி ரயில் ரூ. 11993/-

மஹா சிவராத்திரி காசி-அலகாபாத் 27.02.2003 முதல் 7 நாட்கள் ரூ. 2993/-

சோழநாட்டு தேவார திருவாசக பாடல் பெற்ற தலங்கள் 90, 14.02.2003 முதல் 10 நாட்கள் ரூ. 2993/-

கேதார் - பத்ரிநாத் - டெல்லி - ஆக்ரா 11.05.2003 முதல் 14 நாட்கள் தூங்கும் வசதி ரயில் ரூ. 5504/-

அமர்நாத் வைஷ்ணவிதேவி - டெல்லி தூங்கும் வசதி ரயில் 01.08.2003 முதல் 15 நாட்கள் ரூ. 5999/-

காசி, திரிவேணி - ஹரித்துவார் - டெல்லி, ஆக்ரா - ஜெய்ப்பூர் 13 நாட்கள் தூங்கும்வசதி ரயில் திருப்பயணம் 27.02.2003, மற்றும் 05.05.2003 ரூ. 5000/-

அந்தமான் டூர் - பிரதி மாதம்தோறும் புறப்படுகிறது. இருவழி A/c கப்பல் 10 நாட்கள் ரூ. 6494/- ஒருவழி A/c கப்பல், ஒருவழி விமானம் 8 நாட்கள் ரூ. 11993/-

இலங்கை டூர் - 8 நாட்கள் இருவழி கப்பல் ரூ. 8995/- ஒருவழி கப்பல் ஒரு வழி விமானம் ரூ. 12497/-

முக்திநாத் - நேப்பாள் - காசி 13.04.2003 மற்றும் 13.09.2003 முதல் - ரயிலில் 14 நாட்கள் ரூ. 7493/-

டெல்லி - ஆக்ரா - சிம்லா - குல்லு - மணாலி 14 நாட்கள் தூங்கும் வசதி ரயில் 13.04.2003 மற்றும் 14.05.2003 ரூ. 6998/-

குரூப்பாக வருபவர்களுக்கு கட்டணச் சலுகை உண்டு. 30 நபர்கள் இருந்தால் தனியாகவும் சுற்றுலா நடத்தி தருகின்றோம்.



முன்பதிவிற்கு அணுகவும் : கயிலை புனிதர் அரிமா மனோகர்

# மனோகர் டிராவல்ஸ்

1433, ஸ்வஸ்திக் காம்ப்ளக்ஸ், அபிராமி தியேட்டர் அருகில், ஈரோடு-638 011.
போன் : (O)2216019; 2223580, (R)2253207 செல் :98430-98898
E-mail : manohartravvels@rediffmail.com ; Fax : 0424 - 2217159.



கழுகுக் கண்களும், பாம்புச் செவிகளுமாய் பயமுறுத்தும் தணிக்கைக் குழுவின் தாக்குதலுக்கு இலக்காகி விடாமல், ஓரிடத்தில் கூட 'சவுண்ட் கட்' பெறாத வசீகரத்துடன், 'அன்பே சிவம்' படத்திற்கு வசனம் எழுதியிருக்கும் மதனை, அவரது அலுவலகத்தில் 'ஹாய்' சொல்லியபடி சந்தித்தார்கள், தமிழ்நாடு திரைப்படக் கல்லூரி மாணவர்களான பிரபு, பிரவீனா, கயல்விழி, இரவிக்குமார் நால்வரும்.

வழக்கம்போல அசத்தல் மேற்கோள்களை சுவாரஸ்யமாய் அடுக்கியபடி, சினிமாத் துறை மாணவர்களோடு இனிமையாய் உரையாடினார் மதன்.

யைப் பயன்படுத்தியிருக்கிங்க. இதைத் தப்பா புரிஞ்சுக்கிட்டு பல வாசகர்கள் நான் ஏதோ பெரிய சினிமா நடிகனாகிட்டேன்னு நினைச் சுடப் போறாங்க... ஐஸ்வர்யாராய்க்கு அப்பாவாக நடிக்கக்



• ரவிக்குமார், கயல்விழி, பிரபு, பிரவீனா

**பிரபு:** கார்டூனிஸ்ட் மதன் பத்திரிகையாளர் ஆனதில் ஆச்சர்ய


கூப்பிட்டால்கூட போற மாதிரி இல்லை. சில சமயம் ஹீரோவால கூட ஐஸ்வர்யாராயைத்

# சினிமாவைச் சொல்லிக்

மில்லை. ஆனால் உங்க சினிமா பிரவேசம்... ரொம்ப நாட்களாக உங்களுக்குள் இருந்த ஆசையா?

**மதன்:** சினிமா பிரவேசம் என்ற வார்த்தை

தொட முடியாதபடி கதை நகரலாம். ஆனால் அப்பான்னு வெச்சுக்கோங்க, என்னம்மா டல்லா இருக்கேன்னு நெஞ்சுலே சாய்ச்சுக்கலாம். (மதன் பிராண்ட் குறும்புக்கு டிஎப்டியும் ரீல் இல்லாமல் ரியலாகவே சிரிக்கிறது!) வசனகர்த்தா அவதாரம் ஏதோ திடுதிப்புன்னு எடுத்ததில்லே. பத்திரிகை உலகில் முப்பது வருஷமாக இருந்து விட்டேன். சினிமாவில் நான் எட்டிப் பார்த்ததற்கு ஒரே காரணம், வாழ்க்கை ரொம்ப



டல்லடிச்சு, சுவையில்லாமல் சாகக் கூடாது. வாழ்க்கை ஒருமுறைதான். அதுவும் ரொம்ப ஷார்ட். வாழ்க்கையின் இன்னொரு பக்கத்தை, அல்லது, சுவாரஸ்யமான வெவ்வேறு பக்கங்களைப் பார்க்க விரும்புகிறேன்.

**பிரவீணா:** பத்திரிகையில் இருந்து விட்டு சினிமாவுக்குப் போன பிறகு, ஏண்டா இந்தக் கூட்டத்தில் போய் மாட்டினோம்னு நினைக்கிறீங்கதானே? மனசைத் திறந்து உங்களாலே உண்மையைச் சொல்ல முடியுமா?

**மதன்:** அப்படிச் சங்கடமா நான் நினைக்கவேயில்லை. ஏன்னா சேருமிடம் என்றொரு முக்கியமான வஸ்து இருக்கு. 'உன் நண்பர்கள் யாரென்று சொல், நீ யாரென்று நான் சொல்கிறேன்' என்ற பழமொழி கேள்விப்பட்டிருப்பீங்க. குறைந்த பட்சம், சினிமாவை ஒரு கலை என்று நம்புகிற, அதன் சாத்தியங்களையும், சாதகங்களையும் புரிந்து கொள்கிற கூட்டத்தில் நான் இருக்க விரும்பினேன். நாளைக்கு உங்களோடு கூட நான் பணியாற்றலாம். ஆனால் நீங்கள் சினிமாவை நேசிக்கிற மனிதனாக, சினிமாவைப் புதிய கோணத்தில் சிந்திக்கிற ஆளாக இருக்க வேண்டும். கமல் டீமில் ஒவ்வொரு நிமிஷத்தையும் சந்தோஷமாக, சுதந்திரமாக, கற்றுக் கொள்ளும் பள்ளிக் கூடமாக உணர்ந்தேன்.

**இரவி:** 'அன்பே சிவ'த்திற்கு வசனம் எழுதுவதற்கு முன்பு நிறைய படித்துப் பயிற்சி எடுத்துக் கொண்டீர்களா?

மதன்: எந்தப் பயிற்சியும் கிடையாது. ரசனையும், விழிப்புணர்ச்சியும் தான் தேவைப்பட்டது. கமலின் திரைக் கதையை முதலில் வாங்கிக் கொண்டேன். அதிலிருந்து ஒரு காட்சியை மட்டும் எடுத்து வசனம் எழுதிப் பார்த்த போது, எனக்கே சிரிப்பு வந்துவிட்டது. நிறைய பார்முலா தமிழ்ப்படங்கள் பார்த்த போதையின் விளைவாக, என்னையுமறியாமல் பாடாவதியாக எழுதியிருந்தேன். அந்தக்கணமே அதைக் கிழித்துப் போட்டு விட்டு வேறொன்றை எழுதி கமலிடம் காண்பித்தேன். "ஒரு காட்சியை எடுத்துக் கொண்டு



# கொடுங்கள்!

## - நட்சத்திரச் சந்திப்பு



• இரவிக்குமார்

ஆரம்பம், நடுப்பகுதி, முடிவு என்று டெவலப் செய்து எழுதியிருக்கிங்க... இந்தக் காட்சியை வானொலியில் போட்டால் ரொம்ப நல்லா புரியும்... சினிமா அது போன்றதல்ல...' என்றார். ஒரு காட்சியில் விஷுவலாகக் காட்ட முடியாத விஷயங்களுக்குத்தான் சினிமா வசனத்தில் முதலிடம் என்றார். ஒரு உதாரணம் பாருங்கள். ஒரு மகள் தனது வில்லன் அப்பாவை அவமானப்படுத்துகிற மாதிரி பேசுகிறாள். அதற்கு எதிரொலியாக அந்த அப்பா, ஒரு அர்த்தம் பொதிந்த பார்வை பார்க்கிறார். இதை 'அந்தக் குள்ள நரியின் புருவம் ரகசியமாய் நெறிந்தது. கண்கள் குங்குமச் சிவப்பை பட்டென்று இட்டுக் கொண்டன. இருந்தாலும் மகள் ஆயிற்றே! ஒரு மெல்லிய புன்னகையை மென்று விழுங்கிவிட்டு, இவளை வேறு மாதிரியாகத்தான் சமாளிக்க வேண்டும் என்று எண்ணிக் கொண்டார்' இப்படிக் கதையில் எழுத முடியும். ஆனால் இதை நாசர் ஒரே ஒரு பார்வையில் சொல்லிவிட்டுப் போய்விட முடியும். இங்கே வசனத்திற்கு என்ன வேலை?

**கயல்விழி:** *நீங்க பத்திரிகையிலே ரொம்ப வருஷமா எழுதிப் பழக்கப்பட்டு வசனம் எழுத வந்திருக்கிங்க. சரி... ஆனால் கொஞ்சம் உள்ளே பொறி இருக்கிற ஒரு புது ஆள், புத்தகத்தைப் படிச்சு உத்திகளைத் தெரிஞ்சுக்கிட்டு வசனம் எழுத வந்தால், அதுக்கு வழி காட்ட இங்கே எந்தப் புத்தகமும் இல்லை. குறிப்பா சினிமா பத்தி சுத்தமா இல்லை... ஏன் இங்கே இப்படியொரு வெற்றிடம்?*

**மதன்:** ரொம்பக் கோபமாகவே கேட்கறீங்க! பாராட்டுறேன். இப்போதான் திரைக்கதை எழுதுவது எப்படின்னு சுஜாதா தமிழ்லே ஒரு புத்தகம் எழுதியிருக்கார். இதுவே அமெரிக்காவில் இருக்கிற ஒரு பெரிய புத்தகச் சிறப்பங்காடிக்குப் போனால், 'சினிமா பத்தின பிரிவில் ஒரு கிலோமீட்டர் தூரத்துக்கு புத்தகங்கள் இருக்கு. அந்தோனியோ பாந்தராஸ் என்று ஹாலிவுட் கமர்ஷியல் படங்களில் கோணங்கித்தனமா துப்பாக்கிப் பிடிச்சு கடுகிற ஒரு லத்தின் அமெரிக்க நடிகர்... அவர்கூட தன்னோட ஆட்டோபயாகிரபியை எழுதியிருக்கார். இங்கே என்னடா என்றால் கிசுகிசுக்களை எழுதுங்கன்னு என்கரேஜ் பண்றோம். அங்கே எல்லாத் துறைகளிலும் வளரும் இலக்கியம் செழிப்பாக இருக்கு. காரணம்... அடுத்த தலைமுறைக்குத் தன்னோட வாழ்க்கையிலிருந்து ஏதாவது உருப்படியா விட்டு விட்டுப் போகணும்னு நினைக்கிறாங்க... அந்த அர்ப்பணிப்பு உணர்வு இங்கே பெருகணும்...

**பிரபு:** *'அன்பே சிவம்' படத்துக்கு வரவேற்பு எப்படி இருக்கு?*

**மதன்:** டோரென்டோ நகரிலிருந்து, தமிழ்நாட்டிலிருக்கிற சிதா என்ற பெண்ணுக்கு ஒருத்தர் மின் கடிதம் எழுதுகிறார்... அந்தக் கடிதம் என் கண்ணிலும் பட்டது... "இந்தப் படம் ஜெயிக்கவில்லை என்றால், ஒரு கொழுகொழு ஹீரோயின், கெட்ட அப்பா, பண்ணையார், நாட்டாமை, பஞ்சாயத்து, 'நான் நினைச்சா'ங்கிற வசனங்கள், படத்தின் முடிவில் குண்டு வெடித்து ஆரஞ்சு நிறத்தில் சிதறும் பின்னணியிலிருந்து கதாநாயகியைக் காப்பாற்றிக் கொள்ளும் ஹீரோன்னு, பழைய படி, தமிழ் சினிமா சீரழிஞ்சுரும்னு எழுதியிருக்கார்.



• மதன்

**கயல்விழி:** *அப்போ அன்பே சிவம் ஒரு மாஸ்டர் பீஸ் என்று சொல்கிறீர்களா?*

**மதன்:** அப்படிச் சொல்ல மாட்டேன்... ஆனால் இது ஒரு திருப்புமுனை என்று நிச்சயமாக நம்புகிறேன்.

**பிரவீனா:** *சாப்ளின், குரோசோவா, மகேந்திரன், மணிரத்னம் எல்லோரையும் பார்த்துவிட்டு, 'அன்பே சிவம்' மாதிரி நல்ல படம் தர வேண்டும் என்ற ஏக்கத்தோடுதான், பிலிம் இன்ஸ்டியூட்டை விட்டு வெளியே வருகிறோம். ஆனால் இங்கேயுள்ள நிர்ப்பந்தங்கள் எங்களை வேறு திசைக்குத் திருப்பி விடுகிற துக்கக்கேடுதானே நிகழ்ந்து வருகிறது?*

**மதன்:** அப்படித் திசை திருப்பினால் நீங்கள் எப்படி நிம்மதியாகத் தூங்குவீர்கள். போராடக் கற்றுக் கொள்ளுங்கள். மணிரத்னம் போன்றவர்கள் தனியாளாகப் போராடவில்லையா? இந்த இடத்தில் கமல் சொன்ன ஒரு சுவாரஸ்யமான விஷயத்தைச் சொல்ல விரும்புகிறேன். பிரான்சில் சினிமாவை நேசிக்கிற ஒரு குழு ஒன்றிணைந்து ஒரு பத்திரிகை தொடங்கியது. எல்லா

சினிமாக்களையும் சகட்டு மேனிக்குத் தாக்கியது. மக்கள் பொறுமையிழந்து ஒருநாள் கேட்டார்கள். "எல்லோரையும் இப்படிப் போட்டு கிழிக்கிறீர்களே... உங்களால் உருப்படியாக ஒரு படம் எடுக்க முடியுமா?"

அவ்வளவுதான்... 'ஏன் முடியாது. எடுத்துக் காட்டுகிறோம், பாருங்கள்' என்று நான்கைந்து படமெடுத்து அதிரடியாய் அசத்தினார்கள். அந்தக் குழுவில் ஒரு ஆள்தான் ட்ரூபா. ஆல்ப்ர்ட் ஹிட்ச்காக்கின் சீடர். அந்தக் குழு ஒரு சினிமா இயக்கத்தையே அங்கே சாதித்துக் காட்டியது.

**இரவி:** *பிரெஞ்சு மக்களோடு நமது மக்களின் ரசனையை ஒப்பிட முடியும் என்று எனக்குத் தோன்றவில்லை. இங்கே எது மாதிரியான ரசனை என்று புரிந்து கொள்ளவே முடியவில்லையே, அதுதானே சிக்கலாக இருக்கிறது?*

**மதன்:** கலையும், உணர்வும் எல்லோருக்கும் ஒன்றுதானே? ரசனைக்கு அளவுகோல் என்று எதுவும் கிடையாது. ரசனையை விவரித்துச் சொல்லவும் முடியாது. ரசனையைப் படிப்படியாக நாம் வளர்த்தெடுக்க முயல வேண்டும். நல்ல ரசனை என்பது, பிரெஞ்சு புரட்சி மாதிரி, ஒரே இரவில் தலையெழுத்தை மாற்றி எழுதி விடுகிற அபூர்வம் அல்ல. 'ரன் லோலா ரன்' ஜெர்மன் படத்தைப் பார்த்திருப்பீர்கள். ஒரே கதைக்கு மூன்று திரைக்கதை. இருக்கை நுனியில் உட்கார வைத்த முயற்சி. இது போன்ற மாற்றத்திற்குத் தகுந்த ஜனங்கள் வேண்டும். மக்களைத் தயார் செய்ய கூட்டு முயற்சி வேண்டும். பத்திரிகைகள், மீடியா சினிமா விமர்சகர்கள், பிலிம் சொசைட்டிகள், அரசாங்கம் உட்பட பலர் கை கோக்க வேண்டும். மெதுவாக சாக்லேட்டில் மருந்து தடவிக் கொடுக்கிறமாதிரி மனதளவில் மாறுதல் வர வேண்டும். அந்த வகையில் நாளை இயக்குனராகப் போகிற உங்களுக்குக் கொஞ்சம் அதிகப் பொறுப்பு இருக்கிறது. முழுக்க முழுக்க வியாபாரம் கண்ணோட்டம் கொள்ளாமல், ஓரளவேனும் நல்ல விஷயங்களை எடுத்துச் சொல்ல முயற்சி செய்யுங்கள்.

**கயல்விழி:** *நீங்கள் குறிப்பிடும் கூட்டு முயற்சி கேட்பதற்கு நன்றாகத்தான் இருக்கிறது. ஆனால் இதுவரை இங்கே அது சாத்தியமானதாகத் தெரியவில்லை. அப்படியிருக்க, மோசமான ரசனையை ஒழித்துக் கட்ட அடாவடியான இயக்கம் தொடங்கினால் அதைச் சாதிக்க முடியாதா?*



• பிரவீனா

**மதன்:** மோசமான ரசனையை ஒழிக்க ஒழிக்க, திரும்பத் திரும்ப மோசமான படங்கள் வந்து கொண்டேதான் இருக்கும். மோசமான ரசனைக்கு எதிராக நல்ல படம் எடுங்கள். அமெரிக்காவில் வக்கிரமும் குரூரமும் வைத்துப் படமெடுக்கும் ஸ்நெஃப் மூவீஸ் ஒரு பக்கம் எடுக்கத்தான் செய்கிறார்கள். இந்தத் தலைமறைவுச் சினிமாக்களை விட மோசமான படங்களும் ஹாலிவுட்டிலிருந்து வரத்தான் செய்கின்றன. அங்கிருந்துகொண்டுதான் ஸ்பீல்பெர்க் 'ஷிண்டலர்ஸ் லிஸ்ட்' எடுக்கிறார். அவர்கள் மோசமான ரசனையும் ஒருபக்கம் இருந்து விட்டுப் போகட்டும் என்று விட்டுவிட்டார்கள்.

**பிரபு:** *இதையெல்லாம் தாண்டி ரசனையை வளர்த்தெடுக்க நாம் உருப்படியாக என்ன செய்ய முடியும்?*

**மதன்:** பள்ளிகளில், கல்லூரிகளில் கவிதை, நாடகம், நாவலைச் சொல்லித் தருவது போல, இல்லாவிட்டாலும் சினிமாவை வாரத்திற்கு ஒரு மணி நேரம் சொல்லித் தருவதில் என்ன பிரச்னை என்று எனக்குத் தெரியவில்லை. இதைச் செய்ய முடியுமானால் ஒரு பத்திரிகையாளர் என்ற முறையில் இந்த விஷயத்திற்கு, ஒரு பி.ஆர்.ஓவாக பணியாற்ற நான் தயார். வடக்கே போய் நஸ்ருதீன்ஷாவை வகுப்பெடுக்க அழைத்துக் கொண்டு வா என்றாலும் அதற்கும் ரெடி.

**இரவி:** *மதன் திரைப்பார்வையில் அன்பே சிவத்தை விமர்சிப்பீர்களா?*

**மதன்:** நான் நேரடியாக இந்தப் படத்தில் சம்பந்தப்பட்டிருப்பதால் திரைப்பார்வையில் அதை எதிர்பார்க்க வேண்டாம், என்று நேயர்களுக்கு ஆரம்பத்திலேயே சொல்லிவிட்டேன். ஒருகால் அந்த படத்தை நான் பாராட்டப் போனால், இவர் எழுதின படமாச்சே, அதான் நைசா தூக்கி விட்டிருக்கார் என்று பேச்சு வரும். நான் மனுநீதிச் சோழனாக்கும் என்று தாக்குவது படத்திற்குப் பண்ணும் நீதியில்லை. எனவே என்னை விமர்சனம் பண்ணும் பொறுப்பை சக பத்திரிகையாளர்களிடம் விட்டுவிட்டேன்.

தொகுப்பு: **ஆர்.சி. ஜெயந்தன்**
படங்கள்: **டிஜிட்டல் சண்முகம்**

A 180

**Only for Kalki readers**

**15% off**

Cut this coupon and bring it with you.

PIZZA CORNER

Offer valid till Feb. 28th, 2003

Valid on Dine in Chennai Only. This coupon cannot be exchanged or redeemed for cash. Cannot be clubbed with any other offer/promotion/discount. Prices/Promotions are subject to change without prior notice. Please announce the use of coupon before placing the order. One time offer. One offer per coupon. Limited time offer.

Free Express Delivery Call :

**2628 7111**

Dine in Restaurants: Anna Nagar - Nungambakkam - Adyar

ESTD 1947

பருக பருக ஆனந்தம்
அதிக ஆனந்தம்
சுத்தமான தஞ்சாவூர்
டிகிரி காப்பிக்கு

**ஜீவா காபி**

திருமணங்களுக்கும் மற்றும்
அனைத்து விசேஷங்களுக்கும்
100% பியூர் பில்டர் காபி பவுடர்

*தயாரிப்பாளர்கள்:*

**ஜீவா காபி ஒர்க்ஸ்**

28, பி.வி. நாயக்கன் தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை - 600 005

இலவச டோர் டெலிவரிக்கு தொடர்பு
கொள்ளவும்:(சென்னை) : 8444725, 8442667

டெல்லி, மும்பை, கொல்கத்தா.
E-mail:coffeeps@md3.vsnl.net.in

**ஸ்ரீ பெருந்தேவி தாயார் முதியோர் இல்லம்**


அன்பான உபசரிப்பு, தரமான உணவு, மருத்துவ வசதியுடன் கூடிய சைவ முதியோர் இல்லத்தில் சேர வரவேற்கப்படுகிறார்கள்.

நடக்க இயலாதவர்கள், படுக்கையில் இருப்பவர்களுக்கு சிறப்பு வசதி உண்டு.

பெற்றோர்கள் நினைவு நாள், குழந்தைகள் பிறந்த நாள் மற்றும் திருமண நாட்களை எங்களுடன் சேர்ந்து கொண்டாடுங்கள். விடுமுறையில் வெளியூர் செல்பவர்கள் தங்கள் வயதான பெற்றோர்களை இங்கு விட்டுச் செல்லலாம்.

**ஸ்ரீ பெருந்தேவி தாயார் முதியோர் இல்லம்**

1/36 - குப்பம் ரோடு,
(மகாலட்சுமி ஹார்டுவேர் அருகில்)
கொட்டிவாக்கம், சென்னை - 41.
ஃபோன்: 24511023
Website: www.perundevithayarhome.com




## சாத்தான்குளத்தில் சறுக்கி விழாதீர்கள்!



**கல்கி**



2003 பிப்ரவரி 2
சித்ரபானு தை 19
மலர் : 61
இதழ் : 27


சாத்தான்குளம் இடைத்தேர்தலை தி.மு.க புறக்கணிப்பதால் எந்த நன்மையும் விளையப் போவதில்லை. 'அ.தி.மு.க ஆட்சியின் அராஜகம் காரணமாக அத்தேர்தல் நேர்மையான முறையில் நடைபெறாது; ஆதலால் போட்டியிடுவதில் அர்த்தமில்லை; இதை வாக்காளர்களுக்கு உணர்த்தவே இந்த முடிவு' என்று தி.மு.க தலைவர் அளித்துள்ள விளக்கம் எடுபடாது. தோல்விக்கு அஞ்சியே தி.மு.க. பின் வாங்கிவிட்டது என்று அ.தி.மு.கவினர் முழங்குவார்கள். தி.மு.க.வுக்கு அவப்பெயரே உண்டாகும்.

தி.மு.க தேர்தலைப் புறக்கணிக்குமானால் தி.மு.க ஆதரவாளர்களின் வோட்டு யாருக்கு? என்ற கேள்விக்கு கருணாநிதியிடமிருந்து உறுதியான பதில் இல்லை. 'அ.தி.மு.கவுக்கு இல்லை' என்று மட்டுமே கூறி நழுவியிருக்கிறார்.

பா.ஜ.க. தலைவர் வெங்கையா நாயுடு, தி.மு.க.வின் முடிவு ஆச்சர்யம் அளிப்பதாகக் கூறியிருக்கிறார். மாறாக, காங்கிரஸ் தலைவர் இளங்கோவன், தங்கள் வேட்பாளரை தி.மு.க. ஆதரிக்க வேண்டும் என்று வெளிப்படையாக, கௌரவம் பாராமல் கேட்டுக் கொண்டிருக்கிறார்.

அ.தி.மு.க. ஆட்சியின் பல்வேறு தவறுகள் குறித்து அனைத்து

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.





எதிர்க்கட்சிகளுக்குமே ஒருமித்த கருத்து இருக்கும்போது, அவை ஒருங்கிணைந்து செயல்பட்டால் மக்களின் கவனத்தை இன்னும் அழுத்தமாகக் கவர்ந்து அவர்களைத் தீவிரமாக சிந்திக்க வைக்கலாம். அனைத்துக் கட்சிகளும் கரம் கோத்து ஒரு வேட்பாளரை நிறுத்தி, யாவருமே ஆளுங்கட்சியின் அராஜகங்களை எதிர்ப்பதாக மிக வலிமையாக உணர்த்த முடியும். இந்த இடைத்தேர்தல் வெற்றியானது ஆட்சியமைப்பை நிர்ணயிக்கப் போவதில்லை. ஆனால்; இன்றைய அ.தி.மு.க ஆட்சியை மக்கள் எடை போடுவதற்கான வாய்ப்பு. எனவே, எவ்வித அச்சமோ தயக்கமோ இன்றி எதிர்க்கட்சிகள் பொது வேட்பாளரை நிறுத்தலாம்.

இப்போதும் தாமதமாகி விடவில்லை. பா.ஜ.க. சாத்தான்குளத்தில் போட்டியிடாமல் விலகியிருக்குமேயானால் அங்கு காங்கிரஸ் வெற்றி பெறும் வாய்ப்புகள் அதிகரிக்கும். தி.மு.க.வுக்குப் போக வேண்டிய வாக்குகள் காங்கிரஸ் – பா.ஜ.க.விடையே பிளவுபடாமல் ஒட்டுமொத்தமாக காங்கிரஸுக்குக் கிடைக்கும். இளங்கோவன் கேட்பதற்கு இணங்கி, தி.மு.க. இத்தேர்தலில் காங்கிரஸை ஆதரிக்க ஒப்புக் கொண்டால், அந்த உற்சாகத்திலேயே தி.மு.க. மற்றும் காங்கிரஸ் தொண்டர்கள் உயிரைக் கொடுத்து உழைப்பார்கள்; வெற்றி வாய்ப்புகள் பன் மடங்கு பெருகும். காங்கிரஸுக்கு பா.ஜ.க. தரும் மௌன ஆதரவும், தி.மு.க. அளிக்கும் வெளிப்படையான ஆதரவும் அ.தி.மு.க.வைப் பலவீனப்படுத்தும். – இந்தத் தேர்தல் வியூகம் அமைக்கப்பட, கருணாநிதி தமது செல்வாக்கை பா.ஜ.க.வின் உயர்மட்டத் தலைவர்களிடம் செலுத்த வேண்டும்.

மத்திய அரசியலை மனத்தில் கொண்டு பா.ஜ.க.வும் தி.மு.க.வும் காங்கிரஸை ஆதரிக்கத் தயங்கினால், அது அவலை நினைத்து உரலை இடிக்கும் கதையாகத்தான் ஆகிப்போகும்.

சாத்தான்குளம் தொகுதி காங்கிரஸ் கோட்டையாக இருந்து வந்திருக்கிறது; அப்பகுதியில் கிறிஸ்துவ நாடார்கள் ஜனத் தொகை அதிகம்; ஜெ. அரசு கொண்டு வந்துள்ள மதமாற்றத்




தடைச் சட்டத்தால் இப்பிரிவினர் கசந்து போயிருக்கிறார்கள்; ஏற்கெனவே த.மா.கா. வென்ற தொகுதி; எனவே காங்கிரஸுக்கு வெற்றி வாய்ப்புகள் அதிகம் என தர்க்க ரீதியாக முடிவுக்கு வரலாம். அப்படியிருந்தும் இத் தேர்தலில் தி.மு.க.வின் ஒத்துழைப்பை இளங்கோவன் கோரியிருக்கிறார் என்பதுதான் குறிப்பிடத்தக்கது.

ஆட்சியாளர்கள் ஏற்கெனவே சாத்தான்குள மக்களை 'மகிழ்விக்கும்' பணிகளில் இறங்கியிருப்பதாகக் கருணாநிதி வெளிப்படையாகவே பேசியிருக்கிறார். பத்திரிகைச் செய்திகளும் இதை உறுதி செய்கின்றன. தேர்தல் நன்னடத்தை விதிகளை மீறவும், அதே சமயம் அவற்றுக்குள் சிக்காமல் தப்பவும் ஆளுங்கட்சிக்கு நன்றாகவே தெரியும். ஆகவே இளங்கோவன் கருணாநிதிக்கு விடுத்துள்ள வேண்டுகோள் மிகுந்த முக்கியத்துவம் பெறுகிறது.

தமிழகத்தில் அ.தி.மு.க. அல்லாத அனைத்துக் கட்சிகளுமே தங்களுக்கிடையே யான வேறுபாடுகளை மறந்து மாநிலத்தின் நன்மை குறித்து யோசிக்க வேண்டிய கட்டம் இது. இன்றைய அ.தி.மு.க. ஆட்சியின் போக்கை மக்கள் விரும்பவில்லை; லஞ்சம் கொடுத்துக்கூட அ.தி.மு.க.வால் வாக்குகளைப் பெற முடியவில்லை என்பது நிரூபணமாக வேண்டும்.

இம்முறை அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் தமிழகம் என்ன நன்மை கண்டது? அல்லது முன்னேற்றம் கண்டது? ஜெயலலிதா பேரிலான வழக்குகள் நீக்கப்படவும் நீர்த்துப் போகவும் செய்தது நீங்கலாக என்ன சாதனை நடந்தேறியிருக்கிறது? ஜனநாயக மரபுகளும், பத்திரிகை சுதந்தரமும் எப்படியெல்லாம் புறக்கணிக்கப்பட்டு அவமதிக்கப்பட்டன?... இவற்றையும் இன்னும் பலவற்றையும் எடுத்துச் சொல்லி அ.தி.மு.கவைத் தோற்கடிப்பது முக்கியம்; ஜனநாயகத்தை ஜெயிக்க வைப்பது அதனினும் முக்கியம்! ○

# புத்தம் புதுசு!




**நா**ன்கு பேர் அமர்ந்து உரையாட மற்றும் உணவருந்தக் கூடிய கம்பேனியன் எனப்படும் போர்ட்டபிள் டேபிள் ஒன்றை அறிமுகப் படுத்தியுள்ளது வீ கேன் நெட்வொர்க் நிறுவனம். இதனை நன்கு மடித்து சூட்கேஸ் போல கையில் எளிதாகத் தூக்கிச் செல்லலாம். ஒரே நேரத்தில் நான்கு பேர் அமர்ந்து உரையாடலாம். பல வண்ணங்களில் இது அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது. சுற்றுலா செல்லும்போதோ அல்லது வெளி இடங்களுக்குச் செல்லும்போதோ, கார் மற்றும் பேருந்துகளில் ஒரு சூட்கேஸை தூக்கிச் செல்வதைப் போல எளிதாக எடுத்துச் செல்லலாம்.

**விலை ரூ. 5990. வீ கேன் நெட்வொர்க் பிரைவேட் லிமிடெட், 17/A முத்துராமலிங்கம் தெரு, ராஜாஜி காலனி, விருகம்பாக்கம், சென்னை - 600 092. தொலைபேசி 23761623/33.**

**உ**லகப் புகழ் பெற்ற பாம் அண்ட் மெர்ஸியர், கடிகார நிறுவனம், 'கேப்லேண்ட் வாட்சஸ்' என்ற பெயரில் மகளிர் கைக் கடிகாரங்களை அறிமுகப் படுத்தியுள்ளது. வைரங்கள் பதிக்கப்பட்ட இந்த ஜெனிவா ஸ்போர்ட்ஸ் கைக்கடிகாரங்கள், தண்ணீர் பட்டாலும் வீணாவதில்லை.



**சி**கரெட், குட்கா போன்ற புகையிலைப் பழக்கத்தால், புற்று நோய் பாதிப்பு ஏற்பட்டு அல்லல் உறுபவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டே போகும் நிலையில், நியூ லைஃப் சுவெட்ஸ் ஒரு வரப்பிரசாதம். சிகரெட் பிடிக்க வேண்டும் என்று தோன்றும் போது, நியூ லைஃப் சுவெட்ஸ் ஒன்றை வாயில் போட்டு மென்றால், நிக்கோடின் ஆசையைத் தணிக்குமாம்!




**பாக்கெட் ஒன்றின் விலை : ரூ. 2.50/-, சி.ஜே. ஹெல்த்கேர் பிரைவேட் லிமிடெட், 97, ஜாலிமேக்கர் சேம்பர், நரிமன் பாயிண்ட், மும்பை 400021**

**த**ரம் வாய்ந்த 'தி ஆரோ கம்பெனி', 'கிஃப்ட் பேக்' வசதியை அறிமுகப்படுத்தியுள்ளது. அழகிய ஷர்ட்டுடன், சில்க் டை மற்றும் கஃப்லிங்க் கொண்டதாகவும், கூடுதலாக ஆரோ ட்ரௌசர் கொண்டதாகவும் இருவித அன்பளிப்புப் பெட்டிகள் கிடைக்கின்றன.



**அரவிந்த் பிராண்ட்ஸ் லிமிடெட், டியூ பார்க் ட்ரினிடி, 17, எம்.ஜி. ரோடு, பெங்களூர் 560001**



# கறுத்துக் குலுங்கும் இல்லைகள்



ஒரு
சிறு நட்சத்திரத்தையும் அவன் உள்ளம்
கருத்தரித்ததில்லை
ஆனால்
ஆயிரம் இரவுகளைக் கொழுக்க வைக்கத்
தேவையான இருளின் அடர்த்தி
எப்போதும்!

வாய்மை தொட்டுவிடாதபடி
வாயைக் காப்பாற்றி வருபவனிடம்
என்ன வார்த்தைகளை எதிர்பார்க்க
முடியும்?

'உங்களுக்குத்தான்' என்பான்;
புறம் வெளுத்த சொல்லுக்குப் பின்புறம்
கொத்துக் கொத்தாய்க் கறுத்துக் குலுங்கும்
'இல்லைகள்'

நதியொன்றையே உங்கள் பெயரில்
பதிவு செய்வது போல்
''அவரிடம் மட்டும் ஒரு வார்த்தை
சொல்லி வையுங்கள்; மற்றதை
நான் பார்த்துக் கொள்கிறேன்'' என்பான்;
வாக்கியங்களின் மறுகரையில் அவரிடம்
யாருக்காகவோ முன்பே
ஆதரவை விலைபேசி முடித்திருப்பான்.

''பரிந்துரைத்து விட்டேன்
உங்கள் பெயரை'' -
பத்துப் பகல்களை மொத்தமாக உங்கள்
கையில்
அள்ளிப் போட்டதாய் நம்பிக்கை வரும்;
வேட்டையில் முந்தைய நாள் இரவில்
வீழ்த்தப்பட்ட
உங்கள் பெயரின் முனகல்
எப்படி உங்கள் செவிகளில் விழும்?
அவன் வாசலில் நின்ற
அத் தருணங்களின் அழுக்கு அகலுமா
உங்கள் வாழ்க்கையிலிருந்து?

அவமானத்தின் கனந் தாங்க முடியாமல்
நொறுங்கும் உங்கள் மனத்தின்
அவறல் பீறிடும் போது
அவன் வாசலில் நிற்கும் உங்களைப்
போன்ற
மற்றொருவனிடம்
அவன் சொல்லிக் கொண்டிருப்பான்
'உங்களுக்குத்தான்!'

- **தமிழன்பன்**

படம்: அஜல்





# கரும்புச் சுவை!

✉ 'ஊர் ரெண்டு பட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம்' என்பது பழமொழி. இதைப்போல் ஹிந்துத்வா வெறியாட்டத்தால் பாகிஸ்தான் கொண்டாட்டமாக மகிழ்கிறது என்பதை உணர்த்திய தலையங்கம், சிந்திக்க வைக்கிற சீரியஸ் தலையங்கம்.
சென்னை, சத்தியநாராயணன்.

✉ சிதம்பரம் வட்டாரத்தைக் கலக்கிய தேசிய விவசாய சங்கத்தின் பேரணிக்கு 'கல்கி'யில் வந்த செய்திதான் காரணம் என்று அறியும்பொழுது பெருமையாக இருக்கிறது!
மதுரை, என். பாலகிருஷ்ணன்.

✉ ஆண்மைக்கு எது அழகு? என்ற கேள்விக்கு மாதவன் சொன்ன பதில் அடிக் கரும்புச் சுவை!
அருகந்தம்பூண்டி, மலை அரசன்.

✉ 'தும்பைப்பூ மனிதர்கள்' கட்டுரையில் முழுக்க முழுக்க கிராமிய மணம் வீசியது. சலசலக்கும் நீரோடையில் கணுக்கால் அளவு தண்ணீரில் நின்றுகொண்டு கவிதை நூல் வாசித்த திருப்தியை உண்டு பண்ணியது.
திருவாரூர், ஆர். ராமசுப்ரமணி.

✉ இலக்கியப் பூங்காவில் இளைப்பாறிக் கொண்டிருக்கும் கலைஞரிடம் புயலாய் கேள்விக்கணைகள் தொடுத்திருக்கிறீர்கள். அவரும் தென்றலாய் பதில் தந்து வருடி விட்டு விட்டார்!
நெல்லையப்பபுரம், டி. செல்வன்.

# கதையல்ல காவியம்!

✉ பாலகுமாரனின் குறிப்பிட்டுச் சொல்லும்படியான சிறந்த படைப்புகளில் 'மனம் உருகுதே' தொடரும் ஒன்று, எனப் பாராட்டி மகிழும் வகையில் அருமையாகவும் அற்புதமாகவும் இருந்தது.
பெங்களூர்-72, ப. மூர்த்தி

✉ கதாபாத்திரங்கள் ஒவ்வொன்றும் நம்மிடையே பேசிய உணர்வை ஏற்படுத்தின. மானசீகமாகக் குருவை நினைத்துக் கொண்டு வாழும் மனிதர்களாக எத்தனையோ மகான்களைப் படித்திருக்கிறோம். ஆனால், தற்போதை சூறாவளி வாழ்க்கைச் சூழலிலும் சங்கரய்யர், ராதாகிருஷ்ணன் போன்றவர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள்!
சென்னை-61, ஆர். நாகராஜன்



✉ 'மனம் உருகுதே' கதையல்ல, காவியம். பலரின் மனத்தை உருக வைத்திருக்கின்றது. ஒரு சராசரி மனிதனின் வாழ்க்கையில் ஒரு குரு வழிகாட்டியாக அமைந்து விட்டால், அவன் வாழ்வு எப்படி வளம் பெறும் என்பதை இனிய அனுபவமாக உணர்த்தியது தொடர்.
வேலூர் - 12, காமாட்சி சத்தியநாராயணன்.

✉ இரும்புக் குதிரையாக மாறி சண்டித்தனம் பண்ணும் மனத்துடன் 'நிழல் யுத்தம்' நித்தம் நடத்திக் கொண்டே இருப்பதைத் தவிர்த்து, வழிப்படுத்தும் நல் ஆசிரியனை அணுகினால், அது 'மெர்க்குரிப் பூக்களாக' மாறி மின்னத் தொடங்கி, பலருக்கும் நன்மை பயக்கும் கருவியாக அமைந்து விடும் என்பதை 'மனம் உருகுதே' மூலம் அழகாக வெளிப்படுத்தியிருக்கிறார் ஆசிரியர்.
சென்னை - 78,
கே.எஸ். நாராயணன்.



# ஸ்ரீ சாரதா சக்தி பீடம்



72, காமராஜ் சாலை, பழைய பெருங்களத்தூர்,
(வழி) தாம்பரம், சென்னை - 63. போன்: 22760612.
City Office: No.7, முதல் மாடி, வேலு தெரு, மேற்கு மாம்பலம்,
(அயோத்யா மண்டபம் அருகில்) சென்னை - 600 033. போன்: 23714942.

## ஏழை மாணவர்களுக்கு உதவுங்கள்

பேரன்புடையீர்! வணக்கம்

நம் சக்தி பீடத்தின் சார்பில் கடந்த 14 ஆண்டுகளாக நடைபெற்று வரும் "ஸ்ரீ ராமகிருஷ்ண சேவா குருகுலத்தில்" தாய், தந்தையற்ற, திக்கற்ற மற்றும் வறுமை கோட்டின் கீழ் வாழும் 180 மாணவ மாணவிகளும் தங்கி படித்து வருகின்றனர்.

நாள்தோறும் இறைவழிபாடு, கூட்டு பிரார்த்தனை, பகவத்கீதை பாராயணம் ஆகியவைகளுடன், நல்ல கல்வி, காலை, மாலை உடற்பயிற்சி ஆகியவைகள் அளிப்பதுடன் உணவு, உடை, தங்குமிடம் ஆகியவைகளும் இலவசமாக வழங்கப்பட்டு நல்ல முறையில் வளர்ந்து வருகிறார்கள்.

மேலும் பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர் ஆகியோர்களின் உயர்ந்த லட்சியங்கள் போதிக்கப்படுவதுடன், சமுதாய சேவை பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

இக்குருகுலத்தின் பராமரிப்பு செலவு முழுவதும் நன்கொடையாளர்கள் அளிக்கும் உதவிகள் மூலம் மட்டுமே நடைபெற்று வருகிறது. ஆகவே, தாங்கள் இப்புனிதப் பணிக்கு தங்களால் இயன்ற உதவியைச் செய்யும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

| | | |
|---|---|---|
| • காலை சிற்றுண்டி (180 பேருக்கு) | ரூ. | 1,000/- |
| • மதிய உணவு | ரூ. | 2,000/- |
| • இரவு சிற்றுண்டி | ரூ. | 1,000/- |
| • இனிப்பு மற்றும் பால் வழங்குதல் | ரூ. | 1,000/- |
| • ஒரு மாணவனுக்கு ஓராண்டிற்கு கல்வி உதவித் தொகை | ரூ. | 1,000/- |
| • ஒரு மாணவனுக்கு பராமரிப்பு செலவு ஓராண்டிற்கு (உணவு, உடை, கல்வி) | ரூ. | 12,000/- |
| • குருகுலத்தின் ஒரு மாதத்திற்கான பராமரிப்பு செலவு | ரூ. | 2,00,000/- |

மேலும் தங்களின் பிறந்த நாள், திருமண நாள், குழந்தைகளின் பிறந்த நாள், தொழில் / வியாபாரம் தொடங்கிய நாள், மற்றும் இதர பண்டிகை நாட்களான தீபாவளி, பொங்கல், கிறிஸ்துமஸ், ரம்ஜான் போன்றவைகளில் மாணவர்களுக்கு சிறப்பு விருந்து ஒன்றை அளித்து அவர்களுடன் மகிழ்ச்சியை பகிர்ந்து கொள்ளலாம்.

தாங்கள் அளிக்கும் தொகை எவ்வளவு சிறியதாக இருந்தாலும் அன்புடன் ஏற்றுக்கொள்கிறோம். தங்கள் நன்கொடைகளை "ஸ்ரீ சாரதா சக்தி பீடம்" என்ற பெயருக்கு **Cheque / DD / MO** மூலம் அனுப்பி வைக்கும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

இறைவன் தொண்டில்


சுவாமி ஸ்ரீ ஸர்வாத்மானந்தர்

A. ராஜாபக்கிரிசாமி MSc., MEd.,

நன்கொடைகளுக்கு 80G பிரிவின்படி வருமானவரி விலக்கு உண்டு

## மினி தொடர்

# 1



அதற்குமேல்
அடக்க முடியாமல்
''ராஜன், உனக்கு
மட்டும் நிழலே
இல்லடா'' என்று
கத்தினான்.

## அருண் சரண்யா

# நிழல்

"உங்க மகனோட கொஞ்சம் தனியாப் பேசணும்" என்று கூறித் தன் அப்பாவின் சம்மதம் பெற்று, தனியறைக்கு வந்து முழுமையாய் இரண்டு நிமிடங்களாயிற்று. இன்னமும் எதையும் பேசக் காணோம். சாவித்ரிக்கு நாணமும் குறுகுறுப்பும் கோபமாக மாறிக் கொண்டிருந்தன.

ராஜன் தலையைக் கவிழ்த்தபடியே இருந்தான். எப்படி அந்த உண்மையைச் சொல்வது? ஆனால் சொல்லித்தானே ஆக வேண்டும்.

குரலைத் தழைத்தபடி ஒரு வழியாகச் சொல்லிவிட்டான்.

காதில் விழுந்தது. ஆனால் அவளுக்கு அது விளங்கவில்லை.

"என்னது?" என்றாள்.

அவன் மறுபடியும் கூறினான். "எனக்கு நிழல் விழாது. இதை நீ இப்பவே தெரிஞ்சுக்கறது நல்லது."

இப்போதும் அவளுக்குப் புரியவில்லை. "என்ன சொல்றீங்க?" என்றாள் குழப்பமாக.



அவன் தான் சொன்னதன் பொருளை விளக்கியதும், மீண்டும் "என்ன சொல்றீங்க?" என்றாள். ஆனால் இந்த முறை குரலில் நம்பாமை.

யாருக்குத்தான் நம்பத் தோன்றும்? அவனுக்கே இந்த விஷயம் ஆறு வருடங்களுக்கு முன் கல்லூரித் தோழர்களோடு பெங்களூருக்குச் சுற்றுலா சென்ற போது தானே தெரியும்.

விதான் சௌதாவுக்கு எதிரே இருந்த பிரம்மாண்டமான கப்பன் பூங்காவின் பசுமையை ரசித்தார்கள் நண்பர்கள்.

"நாம அஞ்சுபேரும் சேர்ந்து ஒரு போட்டோ கூட எடுத்துக்கலியே" என்று அங்கலாய்த்தான் ராபர்ட். கேமிராவை இயக்க ஒருவராவது தேவை என்பதால், ஐந்து பேரும் எந்தப் புகைப்படத்திலும் ஒரு சேரக் காட்சியளிக்க முடியவில்லை.

மர நிழலில் புல்வெளியில் புத்தகம் படித்துக் கொண்டிருந்த ஒருவரை அழைத்துக் கேமிராவை நீட்டியபடி, "எங்களை ஒரு போட்டோ எடுங்க சார்" என்றான் சுகுமார். அவரும் மறுக்கவில்லை.

"சீஸ்" கூறிப் புன்னகைத்த பிறகு, ஃப்ளாஷும் ஒரு தடவை இயங்கிய பிறகு "எதுக்கும் இன்னொண்ணு எடுத்திடறேன்" என்று அந்த சந்தேகக்கார மனிதர் கூற, மீண்டும் அவர்கள் நகராமல் அதே இடத்தில் நின்றனர். அப்போதுதான் ராபர்ட் அதைக் கவனித்தான்.

இவர்களைப் பின்புறத்திலிருந்து முன்புறமாகக் கடந்து கொண்டிருந்த ஒரு பத்து வயதுச் சிறுவன் தன் அம்மாவிடம் எதையோ கூற, அவள் மீண்டும் அவர்களுக்குப் பின்புறம் பார்வையைச் செலுத்தினாள். அவள் முகத்தில் வியப்புக் குவியல்.

தங்களிடம் என்ன அதிசயத்தைக் கண்டார்கள் அம்மாவும் பிள்ளையும்? ராபர்ட்டின் குறுகுறுப்பு மிகவும் அதிகமானது. இரண்டாம் முறை ஃப்ளாஷ் அடித்ததும், எட்டி நடைபோட்டு அவர்களை அணுகினான். நல்லவேளையாக அந்த அம்மாவுக்குத் தமிழ் தெரிந்திருந்தது. ராஜனைச் சுட்டிக்காட்டி அவள் அந்த விஷயத்தைக் கூறினாள்.

"என்ன உளறுகிறான் இவன்?". நண்பர்கள் இருக்குமிடத்துக்கு மீண்டும் வந்தான் ராபர்ட். ஒருமுறை கடிகாரமுள் போலவும் இன்னொரு முறை எதிர்ப்புறமாகவும் ராஜனை வலம் வந்தான். சற்றுத் தள்ளி நின்று கொண்டிருந்த பிற நண்பர்களைச் சுற்றியும் அவன் பார்வை வலம் வந்தது.

அதற்குமேல் அடக்க முடியாமல் "ராஜன், உனக்கு மட்டும் நிழலே இல்லடா" என்று கத்தினான்.

அடுத்த மூன்று நிமிடங்களில் எல்லோருமே அதை உறுதி செய்து கொண்டார்கள். மற்ற நால்வரின் நிழல்களும் சூரியன் இருக்கும் திசைக்கு எதிர்ப்புறமாக துல்லியமாக விழுந்திருக்க, ராஜனின் நிழல் மட்டும் பூமியில் விழவில்லை.

விதவிதமான கோணங்களில் ராஜனை நிற்க வைத்துப் பார்த்தார்கள். நிழல் இல்லை. "எப்படிடா? சின்ன வயசிலிருந்தே இப்படித்தானா?" என்ற கேள்விகளுக்கெல்லாம் ராஜனிடம் பதில் இல்லை.

அதன் பிறகு அவன் தன் கல்லூரியில் காட்சிப் பொருளானான். பகல் வேளையில் அவன் கடைத் தெருப்பக்கம் நடந்தால்கூட பலரும் அவனைச் சுற்றியுள்ள பூமிப் பகுதியை உற்றுப் பார்த்தார்கள். அவனைச் சுட்டிக் காட்டிப் பேசினார்கள். அவனது 'ரகசியத்தை' அறிந்தவர்களின் வட்டம் நாளுக்கு நாள் பெருகியது.

பிறரது பார்வைகள் ஒருபுறமிருக்க, அவனே அடிக்கடி தனக்கு முன்னும் பின்னும் கவனம் செலுத்தத் தொடங்கினான். எப்படியாவது துளி நிழலாவது விழுந்து விடாதா என்ற ஏக்கமே வந்துவிட்டது அவனுக்கு. தனது வியாதியிலிருந்து விடுபடும் நாளை எண்ணி ஏங்கும் தீவிர நோயாளிபோல அவன் ஆனான். நிழல் என்பது அவனுக்கு ஓர் இலக்குபோல் ஆனது. எப்படி நிழலை வரவழைப்பது?

இதற்கு நடுவே விஷயம் கேள்விப்பட்டு விஞ்ஞானிகள் குழு ஒன்று அவனைத் தங்கள் பரிசோதனைக் கூடத்துக்கு அழைத்துச் சென்றது. அவனை வைத்துக் கொண்டே அவர்கள் விதவிதமாக விவாதித்தனர். இவன் உடலில் இருக்கும் தசைகளும் எலும்புகளும் ஸ்பெஷல் வகை

## எங்க போச்சோ! என்ன ஆச்சோ!

இருபத்தி நான்கு பேர் கொண்ட 'சின்னக் குடும்பத்தில்' அப்பல்லோவை மட்டும் காணவில்லை. கடந்த டிசம்பரில் அப்பல்லோ காணாமப் போன அன்று அந்தக் குடும்பத்தில் இரண்டு பேர் இறந்து கிடந்தார்கள்.

காங்கோவின் நேஷனல் வனவிலங்கு



யானவையா? அதனால்தான் சூரியக் கதிர்களால் முழுவதுமாக இவனை ஊடுருவிச் செல்ல முடிகிறதா? ஏனென்றால் சூரியனை உடல் தடுத்தால், நிச்சயம் நிழல் விழுமே. இவனை எக்ஸ்ரே எடுத்தால் எலும்புகள் அதில் தெரியுமா? ஒரு வேளை இவனது எலும்புகள் எக்ஸ்ரே கதிர்களையும் ஊடுருவ அனுமதித்துவிடுமோ?

தன்னை ஒரு கினிபிக் போல அவர் கள் எண்ணுவது பிடிக்காமல் அங்கிருந்து பாதியிலேயே வீட்டுக்கு வந்துவிட்டான். வந்தால், அங்கே இரண்டு பேர் காத்துக் கொண்டிருந்தார்கள். பிரபல நாளிதழின் உள்ளூர் பிரதிநிதிகள்.

ராஜனின் அம்மா மிகவும் குற்ற உணர்ச்சியோடு தலை குனிந்து உட்கார்ந்து கொண்டிருந்தாள். அப்பா தொழிற்சாலைக்குச் சென்றிருந்தார்.

"இவ்வளவு வருஷம் உங்கள் மகனின் இந்த விசித்திர இயல்பை எப்படி ஒரு தாயாகிய நீங்கள் தெரிந்து கொள்ளாமல் இருந்தீர்கள்?" என்பது போல் ஏதாவது ஒரு கேள்வியை அம்மாவிடம் இவர்கள் கேட்டிருக்க வேண்டும்! 'தன்னால் அம்மாவுக்குத் தலைகுனிவு!'

"முதல்லே நான் உங்களை போட்டோ பிடிச்சுக்கறேன். அப்படி தோட்டத்துப் பக்கமா வாங்க. உடனே வாங்க சார், வெயில் போறத்துக்குள்ளே படமெடுத்துடணும்" என்றார் நாளிதழின் புகைப்படக்காரர். கூடவே தனது பெரிய பையைப் பிரித்து காமிரா, லென்ஸ், அதைத் துடைக்கும் வெல்வெட் துணி என்று கடை பரப்பினார். "சரி ஃபோட்டோ முதலில் ஆகட்டும். நான் அப்புறமா சாரைக் கேள்வி கேட்கிறேன்" என்று நிருபர் விட்டுக் கொடுத்தார்.

ராஜனுக்குக் கோபமாக வந்தது. அதெப்படி இந்தப் பேட்டிக்கு அவன் நிச்சயம் சம்மதிப்பான் - அல்லது சம்மதித்தே ஆக வேண்டும் - என்பதுபோல் அவர்கள் நடந்து கொள்ளலாம்?

'இதெல்லாம் வேணாமே' என்றான். தொடர்ந்த அவர்கள் வற்புறுத்தலுக்குப் பிறகும் அதே பதிலை மாறாது அளித்தான்.

பத்து நிமிடங்களுக்குப் பிறகு கிளம்பியபோது அவர்கள் முகத்தில் கடும் கோபம். "இவ்வளவு சொல்லியும் கேட்கலேன்னா எப்படி? இதெல்லாம் ரகசியமா காப்பாத்தக் கூடிய விஷயமில்லை. மனசு மாறும்போது எங்களுக்கு டெலிபோன் பண்ணுங்க" என்றபடி வெளியேறினார்கள்.

ஒழிந்தது ஒரு பீடை என்று நினைக்க முடியாதபடி அடுத்த நாள் அவனைப் பற்றிய செய்தி அதே நாளிதழில் வந்திருந்தது. கல்லூரி ரெகார்டிலிருந்து அவனுடைய புகைப்படத்தை எப்படியோ பெற்றுப் பிரசுரித்திருந்தார்கள். "எனக்கு நிழல் விழாதது இருக்கட்டும். ஆனால் நான் வளர்ந்தபிறகு எப்படியும் என் பெற்றோருக்கு நிழல் கொடுப்பேன்" என்று அவன் பெருமையாகக் கூறியதாக வேறு சரடு விட்டிருந்தார்கள்.

"பத்திரிகையிலே படிச்சேன். நீ சொன்னது எனக்குப் பெருமையாக இருந்தது" என்று ராபர்ட் கூறியபோது, பட்டென்று தன் தலையில் அடித்துக் கொண்டான். "அப்பா அம்மாவுக்கு ஆதரவாக இருப்பேன்றது ஒரு பெரிய விஷயமாடா? அதைப் போய் விளம்பரப்படுத்திக் கொள்ளும் அளவுக்கு நான் நீசனா?" என்றான்.

"புதிய சூழலை என்ஜாய் பண்ணப் பாருடா. கடவுள் காரணமில்லாம உன்னை இப்படி வித்தியாசமாய்ப் படைச்சிருக்க மாட்டாரு. யோசிச்சுப்பாரு" என்றபடி அவன் தோளைத் தட்டிவிட்டுப் போனான் ராபர்ட்.

அவன் அப்போது யோசித்தானோ இல்லையோ, சாவித்ரி இப்போது யோசிக்கத் தொடங்கியிருந்தாள்.

'நிழல் விழாத ஒருவனைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளலாமா?'.

(தொடரும்)

---


பார்க்கில் இருந்த உலகப் புகழ் பெற்ற கொரில்லாக் குரங்கு அப்பல்லோ!

இறந்து கிடந்த கொரில்லாக்களின் உடம்பில் 'எபோலா' என்கிற வைரஸ் இருந்திருக்கிறது. ரொம்ப ரொம்ப டேஞ்சரான வைரஸ் இது.

"ஐந்து வருடத்துக்கு முன்பு இதே மாதிரி எபோலா வைரஸ் கிளம்பி ஏராளமான கொரில்லாக்களைக் காவி செய்தது. இப்போது மறுபடியும். பெரிய அபாயம் இதனால் காத்துக்கிடக்கிறது" என்கிறார் பிராங்க்ஸ் ஜூவில் இருக்கும் வன விலங்கு பாதுகாப்பு சொஸைட்டியின் முக்கிய உறுப்பினரான ஜூன் மார்க்!

அப்பாலோ இன்னும் கிடைக்கலை. எங்க போச்சோ! என்ன ஆச்சோ! பாவம்!

- சேனன்



# பலாத்காரத்துக்கு

மரண தண்டனைக்கு எதிரான குரல் உலகெங்கும் ஓங்கி ஒலிக்கும் கால கட்டம் இது. நம் நாட்டிலோ, பாலியல் பலாத்கார குற்றத்துக்குச் சிறைத் தண்டனை போதாது; மரண தண்டனை விதிக்க வேண்டும் என்ற குரல் எழுந்துள்ளது. வழக்கறிஞர்கள் என்ன சொல்கிறார்கள்...?



* வி.எஸ்.அஜீதா.

### பயமுறுத்தினால் குறையுமா?

“பாலியல் பலாத்காரக் குற்றத்துக்குத் தூக்கு தண்டனை” என்று எழுந்துள்ள சிந்தனை, ஆளும் அரசியல்வாதிகளுக்குப் பெண்குலத்தின் மீதான அக்கறையைப் பிரதிபலிக்கலாமே தவிர, உண்மையான தீர்வாக இருக்க முடியாது” என்று ஆரம்பித்தார் வி.எஸ். அஜீதா.

“குற்றம் செய்த ஒருவனைத் தூக்கில் போடுவதால் பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு என்ன பயன்? ஒரு பலாத்காரமான நிகழ்வுக்குப் பிறகு பெண் நடைப் பிணமாக மாறிவிடுகிறார். அவள் அனுபவிக்கும் உளவியல் ரீதியான சிக்கல்கள் மிகக் கொடுமையானவை. எனவே, அந்தக் குற்றம் செய்தவனும், தான் செய்த கொடிய செயலை நினைத்து, தினமும் வருந்த வேண்டும்; திருந்த வேண்டும். அதற்கு இப்போது சட்டத்திலிருப்பது போல குறைந்த பட்சமாக, பத்து வருட தண்டனையும், அதிக பட்சமாக, ஆயுள் தண்டனையும்தான் சரியாக இருக்கும்.

“1969ம் ஆண்டு ஐ.நா. பிரகடனப்படி, தூக்கு தண்டனை மூலம் உயிரைப் பறிப்பது என்பது அப்பட்டமான மனித உரிமை மீறல். இப்போது கொலைக் குற்றங்களுக்கு, அரிதிலும், அரிதாகத் தூக்குத் தண்டனை கொடுக்கிறார்கள். ஆனால், இதன் காரணமாக கொலைக் குற்றங்கள் சமுதாயத்தில் குறைந்திருக்கிறதா? நமது நாட்டுச் சட்டங்கள், குற்றவாளிகள் திருந்தணும் என்ற முறையில் அமைக்கப்பட்டவைதான். தூக்கு தண்டனை என்று பயமுறுத்தினால்



மட்டும், குற்றங்கள் குறைந்து விடுமா என்ன? அதற்குப் பதிலாக, ஆக்கபூர்வமான சிந்தனையோட்டத்தோடு, பாலியல் பலாத்காரக் குற்றங்கள் நடக்காத சமுதாயச் சூழலை நாம் உருவாக்க வேண்டும்.

பாலியல் பலாத்கார வழக்கு விசாரணையில், இப்போது ஆறுதலான ஓர் அம்சம் வந்திருக்கிறது. குற்ற விசாரணையின்போது குற்றம் சாட்டப்பட்டவரின் வழக்கறிஞர் "பெண்ணை ஒழுக்கக் கேடானவர் என்று திசை திருப்பும் வகையில் விசாரணையை மேற் கொள்ளக் கூடாது" என்று சட்டத் திருத்தம் வந்திருக்கிறது. நல்ல மாறுதல்!" என்றார் அஜிதா.

**தூக்கு தண்டனை தேவைதான்!**

ஆனால், வழக்கறிஞர் பிரதாப் குமாரின் கருத்து வேறுவிதமாக இருக்கிறது.

"உலகில் வேறெந்த நாடுகளுக்கும் இல்லாத சிறப்பு நம் நாட்டுக்கு இருக்கிறது.

**ஆண்கள், பெண்மைக்கு மதிப்புக் கொடுத்து அவர்களை உயர்வாக நடத்த வேண்டிய அவசியத்தைச் சொல்லும் அதே சமயத்தில், பெண்களுக்கு இது போன்ற குற்றங்களைத் தடுக்கும் பொறுப்பிருக்கிறது.**

# மரணதண்டனையா?

நம் நாட்டிலேயே வேறெந்த மாநிலத்துக்கும் இல்லாத சிறப்பு நமது தமிழகத்திற்கு உண்டு. பெண்மையைப் போற்றி பெண்குலத்துக்கு உயர்வான அந்தஸ்தைக் கொடுக்கும் பாரம்பரியத்தைச் சேர்ந்தவர்கள் நாம்.

ஒரு பெண்ணின் அந்தரங்கத்தையும் சுதந்தரத்தையும் குலைக்கும் ஆணுக்கு, மிக அதிகபட்ச தண்டனை கொடுக்கப்பட வேண்டும் என்பதில் இரு வேறு கருத்துக்கள் இருக்க முடியாது. அதிலும் சில மனித மிருகங்கள், பாலியல் வெறி கொண்டு சிறுமிகளைக்கூட கொடுமைக்கு ஆளாக்கி விடுகின்றனர். அப்படிப்பட்ட ஜென்மங்களுக்குத் தூக்குத் தண்டனை கூட மிகக் குறைவான தண்டனைதான். 'பெண்களுக்கெதிரான குற்றங்களுக்குக் கடுமையான தண்டனை கொடுக்கப்பட வேண்டும்' என்று தமிழக முதல்வர் அடிக்கடி சொல்லி வருகிறார்.

இத்தகைய குற்றங்களை விசாரிக்க 'பொடா' நீதிமன்றம் போன்று தனி நீதிமன்றம் அமைக்க வேண்டும். தவிர இப்போது, இக்குற்றத்துக்கான வழக்குகளில், மற்ற குற்றங்களில் மேற்கொள்ளப்படும் அதே விசாரணை நடைமுறையே கையாளப்படுகிறது. அதை மாற்றி, தனி விசாரணை நடைமுறையை உண்டாக்கி, இரண்டே மாதத்தில் விசாரித்து நீதி வழங்க வேண்டும்.

ஆண்கள், பெண்மைக்கு மதிப்புக் கொடுத்து அவர்களை உயர்வாக நடத்த வேண்டிய அவசியத்தைச் சொல்லும் அதே சமயத்தில், பெண்களுக்கு இது போன்ற குற்றங்களைத் தடுக்கும் பொறுப்பிருக்கிறது. குறிப்பாக, உடுத்தும் உடை, நடந்து கொள்ளும் முறை ஆகியவற்றால், பெண்கள் நல்ல சிந்தனையைத் தூண்டும் விதத்தில் நடந்து கொள்ள வேண்டும். துரதிர்ஷ்டவசமாக நமது ஊடகங்களும் இச்சையைத் தூண்டும் காட்சிப் பொருளாகவே பெண்களைக் காட்டுகின்றன."

சந்திப்பு : **ஸ்ரீநிவாசன்**

படங்கள் : **ராஜன்**

* பிரதாப் குமார்



டாக்டர் எல். மகாதேவன்

# தலைவலி லிஸ்ட்!

சில சமயம் நோயாளிகளைப் பரிசோதிக்கும்போது, துப்பறியும் சாம்புவாகக் கூட மாற வேண்டியிருக்கும். சமீபத்தில் அப்படியொரு சம்பவம் நடந்தது.

ஓர் இளம் பெண் தலைவலி என்று வந்தார். கண் பார்வை, இரத்த அழுத்தம் என ஏதேதோ பரிசோதனைகள் செய்திருந்தார். எல்லாமே நார்மல். நானே ஓர் ஐந்து நிமிடம் குழம்பித்தான் போனேன். சட்டென்று ஒரு மின்னல் (என் தலையில்தான்!) ஃபிளாஷ் அடிக்கவே, அந்தப் பெண்ணின் வாயைப் பரிசோதித்தேன்.

அட தேவுடா! இரண்டு கடை வாய் பற்களிலும் சொத்தை!

“உன் தலைவலிக்குக் காரணம் பல் சொத்தைதாம்மா. முதலில் அதை பிடுங்கிக் கொண்டு வா” என்று அனுப்பி வைத்தேன்.

“டாக்டர்... நீங்க சொன்னது நிஜம்தான். பல்லைப் பிடுங்கினதும் தலைவலி காணாமல் போச்சு... போயே போயிந்தி” என்று மறுவாரமே வாயெல்லாம் பல்லாக நின்றாள்!


மலம், சிறுநீர் இவற்றின் வேகங்களை அடக்குதல், அதிகமான பகல் தூக்கம், இரவில் அதிக நேரம் கண்விழித்து இருப்பது, குளிர்ந்த காற்று, பொருத்தமில்லாத மணத்தை நுகருதல், தூசி, வெயிலில் நடப்பது, புளிப்பு, காரம் மிகுந்த உணவுகளை உண்ணுதல், தலையில் அடி படுதல், அஜீரணம், அழுகை, கண்ணீரை அடக்குதல், மனவருத்தம், இவற்றினால் வாத, பித்த கபங்கள் மிகுந்து தலைவலியை உண்டு பண்ணுகின்றன என்று பொதுவாகச் சொல்லுகிறார் சரகர்.

இன்னும் என்னென்ன பிரச்னைகளால் தலைவலி வரும்? இதோ லிஸ்ட்!

மலச்சிக்கல் ஏற்படுவதால் தலைவலி வருகிறது. மனக்கவலை, தூக்கமின்மை, மனச்சோர்வினால் தலைவலி வருகிறது. மூளை என்று சொல்லக்கூடிய மஸ்திஷ்தகத்தில் இரத்தக் குழாய்கள் சுருங்கினாலோ, விரிந்தாலோ, கட்டிகள் இருந்தாலோ தலைவலி வருகிறது. கண்பார்வைக் குறைவினால், கண் அழுத்தத்தினாலோ, சைனஸினாலோ, கழுத்து எலும்புத் தேய்மானத்தினாலோ, இரத்த அழுத்தம் அதிகமானாலோ, காதில் சீழ்பிடித்து, அதனால் காது நோய் சம்பந்தமாகவும், காயம் ஏற்பட்டாலோ, போதைப் பொருட்களுக்கு அடிமையானாலோ தலைவலி வருகிறது. மேலும் பீனஸ நோயினால் தலைவலி வரும். சில மருந்துகளின் ஒவ்வாமையினால் தலைவலி வருகிறது. பெண்களுக்கு மாதவிடாய் காலத்தில் தோஷங்களின் ஏற்றத் தாழ்வுகளினால் தலைவலி வருகிறது. உணவினால் தலைவலி வருகிறது. இவ்வாறு தலைவலி வரும் காரணம் என்ன என்பதைத் தெரிந்து கொண்டு, அதை வாத, பித்த, கப ரீதியாகச் சிந்தித்தே நாம் செயல்பட முடியும். மூளை சம்பந்தமான சில நோய்களில் தலைவலி முக்கிய லக்ஷணமாகக் கருதப்படுகிறது. ஸ்ட்ரோக், செரிபரல் ஹெமரேஜ் போன்றவற்றில்கூட தலைவலி முக்கியமான அறிகுறியாகக் கருதப்படுகிறது.

இவற்றில் முக்கியமாக மைக்ரேன் தலைவலி, வாஸ்குலர் ஹெட் ஏக் என்று சொல்லக்கூடிய பித்தவாத சம்பந்தமான தலைவலி நடைமுறையில் காணப்படுகிறது. இரத்த நாளங்கள் விரிவடைவதாலோ, சுருங்குவதாலோ இத்தலைவலி ஏற்படுகிறது. இது சில நோயாளிகளுக்குத் தொடர்ச்சியாகவும் வரும். சில நோயாளிகளுக்கு, இத் தலைவலி வரப் போகிறது என்பதை உணர முடியும். ஒரு பக்கத் தலைவலியாக வரலாம். இதனை ‘அர்த்தாவ பேதம்’ என்று சொல்லுவார்கள். சில நேரங் களில் வாந்தி ஏற்படலாம், பார்வைக் கூச்சம் ஏற்படலாம். மலச்சிக்கல் போன்றவை ஏற்படலாம். இது பல நாட்கள் வரை இருக்கலாம். சில குடும்பங்களில் இது காணப்படும். தவிர்க்கும் முறைகளை இவர்கள் மேற்கொள்ள வேண்டும். அதிகமான கொழுப்புள்ள ஆகாரங்கள், எண்ணெய்ப் பலகாரங்கள், சாக்லெட், வெண்ணெய் போன்றவற்றைச் சாப்பிடுவதைத் தவிர்க்க

வேண்டும். டென்ஷனால் வருகின்ற தலைவலிக்கு, மனநிலை காரணமாக இருக்கிறது. இது வாத சம்பந்தமாக உள்ள தலைவலியாகும். தலையை அழுத்தி ஒரு துணியினால் கட்டுவது போன்ற உணர்ச்சி ஏற்படும். வேலை முடிந்தபிறகு இது அதிகமாகக் காணப்படும். மூளை நோய்களாகிய மெனிஞ்



சைட்டிஸ், மூளைக் காய்ச்சல், இரத்த அழுத்தம், கட்டிகளாலும் தலைவலி வரலாம்.

தலைவலி வாதத்தினால் வருகிறதா, பித்தத்தினால் வருகிறதா, கபத்தினால் வருகிறதா அல்லது இவற்றின் சேர்க்கையினால் வருகிறதா, என்பதை நன்றாக அறிந்து கொள்ள வேண்டும். வாதத்தினால் உருவாகிற டென்ஷன் போன்ற தலைவலிகளுக்கு, க்ஷீரபலா என்ற தைலத்துடன், கச்சூராதி சூரணம் சேர்த்து சூடாக்கி, தலையில் தளம் வைக்கலாம். ராஸ்னாதிப் பொடியை வெந்நீரில் கலந்து கொதிக்க வைத்து, நெற்றியில் பத்துப் போடலாம். தான்வந்தரத் தைலம் அல்லது ஷட்பிந்துத் தைலத்தை மூக்கில் நஸ்யமாகச் செலுத்தலாம். தலையில் அசனவில்வாதி தைலத்தைத் தேய்த்துக் குளிக்கலாம். கல்யாணக் கஷாயத்தை இத் தலைவலி உள்ளவர்கள் தொடர்ந்து சாப்பிட்டு வரலாம்.

மைக்ரேன் தலைவலிக்கு பத்தியா ஷடங்கம் என்று சொல்லக்கூடிய கடுக்காய், நெல்லிக்காய், தானிக்காய், வேப்பம்பட்டை, அமிருது, இரிசாத்து என்ற நிலவேம்பின் சூரணமானது மிகவும் நல்ல பலனை அளிக்கிறது. இதில் க்ஷீரபலா கொண்டு நஸ்யம் செய்யலாம். திரக்ஷாதி கஷாயமும் கொடுக்கலாம். கபம், சைனஸால் வரக்கூடிய தலைவலிக்கு, தூமபானம் என்று சொல்லக்கூடிய மஞ்சளை சூடாக்கி புகைப்பது, ஷட்பிந்துத் தைலத்தை மூக்கில் விட்டுக் கொள்வது, வரணாதி கஷாயத்தை (வருணம் என்று சொல்லக்கூடிய மாவிலங்கம் பட்டையிலான கஷாயம்) சாப்பிடுவது சிறந்த பலனை அளிக்கும். மலசுத்தி செய்வதும் நல்லது. சுக்கைப் பாலில் அரைத்துப் பற்றுப் போடலாம். மஞ்சளைச் சுட்டு முகரலாம். நீர்க் கோவை மாத்திரையை உரைத்து நெற்றியில் பத்திடலாம். தும்பைப்பூ சாற்றினை மூக்கில் நஸ்யமாகச் செலுத்தலாம். கிராம்பையும், சுக்கையும் அரைத்துப் போடலாம். குக்குலு திக்தகம் நெய் என்று சொல்லக்கூடிய நெய்யானது, சில தலைவலிகளுக்கு இரவு உணவிற்கு பின் கொடுத்துவர, நல்ல பலனை அளிக்கும்.

இவையெல்லாம் பொதுவாக தலைவலிக்கு நடைமுறையில் நாம் செய்கின்ற விஷயங்கள். இவற்றுடன் தியானம், ஓய்வு, காரம், புளி, எண்ணெய் இல்லாத உணவு போன்ற எண்ணெய் குளியல் சிகிச்சை முறைகள் சிறந்தது. நாள்பட்டுக் குணமாகாத மைக்ரேன் தலைவலிக்கு அசனவில் வாதித் தைலத்தைக் கொண்டு செய்கின்ற சிரோதாரை, நெல்லிக்காய், மோர் கஷாயத்தால் செய்கின்ற தக்ர தாரை, சிரோவஸ்தி, சிரோ பிசு போன்றவை மிக நல்ல பலனை அளிக்கின்றன. (தொடரும்)

# பாலைத்திணை

சிவகுமார் முத்தய்யா

மேற்குத் தொடர்ச்சி மலை...

எழுந்து கம்பீரமாய் நீண்டிருந்தது. பிரமிப்பையும் ரகசியத்தையும் தெரிவித்துக் கொண்டு, இயல்புத் தன்மை நிரம்பியிருந்தது. கூப்பிடு தூரம்தான், ஆசை பிறிடுகிறது. நிச்சயம் ஒரு நாள் மலையேறிப் பார்த்து வர வேண்டும். நீண்ட நெடிய பொழுதொன்றைக் கழிக்க வேண்டும்.

> அவள் மனசுக்குள் எந்த விதமான வலையை நெய்து கொண்டு இருக்கிறாளோ யாருக்குத் தெரியும்? அவளை நினைத்தால் இவனுக்குச் சிரிப்புதான் வருகிறது.

முதன் முதலாய் மலையைப் பார்த்தது இதுதான். ரோட்டின் ஓரத்தில் மண்டியிருக்கும் சிறு செடிகளின் ஊடே, குத்துக்கல்லில் "ஓலவக்கூடு மூணு கிலோ மீட்டர்" என்று கறுப்பு நிறத்தால் எழுதப்பட்டு இருக்கிறது. அதில் உட்கார்ந்து கொண்டான்.

ஞாயிறு என்பதால், வேலையில்லை. கூட வேலை பார்ப்பவர்கள் சினிமாவுக்கு என்றும், மலம்புழாவுக்கு அணை பார்க்கவும் போய்விட்டார்கள்.

"குணா நீயும் வர்றியா", என்று ரெத்தின சாமி கூப்பிட்டான்.

"நான் வர்றல, நீ பெயிட்டு வா."

அவர்கள் போய் ஒரு மணி நேரத்துக்கு மேல் ஆகியிருந்தது. இப்படியே தனிமையிலேயே பொழுதைக் கழிக்கலாம் போல் தோன்றியது. அதிகமாகப் பேசப் பிடிப்பதில்லை. மகனின் ஞாபகம் அடிக்கடி எழுகிறது. இந்நேரம் என்ன செஞ்சிகிட்டு இருப்பான்?

இதயத்தில் ஏற்பட்ட வலி கண்ணுக்குள் வந்து மோதியது.

"அவள் இந்நேரம் சபித்துக் கொண்டிருப்பாள், அழுது... அழுது, நைந்து போயிருப்பாள்."

வீட்டில் மரியாதை இல்லை. "சம்பாதிக்காமல் ஊர் சுற்றிக் கொண்டிருக்கிறான்" என்கிற ஏளனம், நமுட்டுப் பார்வை. அம்மாவும், அப்பாவும் இவனை எதிரியாகவே எண்ணத் தொடங்கி விட்டார்கள். திருமணம் நடந்த மறுநாளிலிருந்தே அப்படித்தான். திருமணம் கூட ஆத்திர அவசரத்தில் நடந்த ஒன்றுதான். பல சரியில்லைக்குப் பிறகு இது சரியா இருக்கக் கூடும் என்று நடந்ததுதான்.

இவனுக்கும், அவளுக்கும் நான்கு ஆண்டுகள் சிநேகிதம். ஒவ்வொரு நாளையும் நெருப்பின் மேல் நடந்து கடத்தினார்கள்.

"நான் ஒரு வேலையைத் தேடிக்கிறேன்."

"உங்களுக்கு எப்ப வேலை கிடைக்கிறது...?"

"பொறு."

"முடியாது சாமி... பொறுத்தது போதும்" உடும்புப் பிடியாய் இவனை கவ்விக் கொண்டாள். அவளிடமிருந்து மீண்டெழுந்து தன்னை மீட்டுக் கொள்ள இயலவில்லை.



வசப்பட்டது பட்டதுதான், முடியவில்லை. அந்த வெள்ளை மனசுக்கு காயத்தையும் சோகத்தையும் தர இவன் மனசு இடம் தரவில்லை. அவளே துணிந்து விட்ட பிறகு, இவன் பிரிவைக் குறித்து சிந்திக்க முடியவில்லை.

யுத்தம் தொடங்கியது.

சிறு பொறியாய் விழுந்து, பெரிய கலவரத் தீயாய் மாறி, அணைந்தது. இதிலிருந்து

புதியதொரு விருட்சம் முளைத்தது.

பிரச்னையில் தொடங்கிய இந்தத் திரு மணத்தில் இறுதி வரை அதன் தொடர்ச்சி தொடரும் போல.

மண்டபத்தில் சாப்பாட்டுப் பிரச்னை பூதாகரமாய் எழுந்து சிரித்தது. "மொறையா சோறு போட வக்கத்தவனெல்லாம் எதுக் குடா தேவை வைக்கிறீங்க" இப்படியொரு



கோஷ்டி கேலி பேசிச் சிரித்து ரகளை செய்ய ரெடியாக இருந்தது.

இன்னொரு கோஷ்டி 'எங்களை எவரும் மதிக்கவில்லை'யென்று எகிறிக் குதித்துக் கொண்டிருந்தார்கள். இவனுடைய நண்பர் கள் இதையெல்லாம் பார்த்துக் கொண்டு, இவனை வேதனையோடு பார்த்தது. இவ னுக்குள் ஆணியொன்று நெஞ்சில் இறங் கியதுபோல இருந்தது.

அக்கா மறுநாள் வேறொரு பிரச்னையை துவக்கியது. 'அத்தானுக்கு எந்த ஒரு மரியா தையும் செய்யவில்லை.' அம்மாவிடமும் அப்பாவிடமும் மல்லுக்கு நிற்கத் தொடங் கியது.

அவன் நிலை தடுமாறிப் போனான். இப் படியெல்லாம் சுற்றமும், உறவும் இவனைக் காயப்படுத்தும் என்று உணர்ந்திருந்தால் வேறு விதமாக இந்தத் திருமணத்தை நடத்தி விட்டிருப்பான்.

அகல இருப்புப் பாதையில் பாலக்காடு முதல் கோவை மார்க்கம் அதிவேக இரயில் சீறிப் போய் கொண்டிருந்தது. அது எழுப் பிய ஓசை மலைமுகடுகளில் பட்டு,

ரம்மியமாய் எதிரொலித்தது.

பழைய நினைவுகள் உயிர்த்தெழுந்தன. தடம் புரண்டு வேகமாகப் பறந்து, குறுகிய ரயில் பாதை ஒன்றின் ஆள் அரவமற்ற பொழுது தொன்றில், அவன் காத்திருப்புகள் நீளும். அந்தக் கணமே இவனுக்குள் நிறைந்தது.

அவள் ஊரை ஒட்டிய வெகு அருகில் ரயில்பாதை நீண்டிருந்தது, விளா மரங்களும், இலந்தை மரங்களும், நொச்சிச் செடிகளும், காரைச் செடிகளும், அடர்த்தியாய் வளர்ந்திருக்கும். குழிக்கரை ரயில்வே நிலையத்திலிருந்து ஒரு கிலோ மீட்டர் தொலைவு போனால் போதும், அந்த அழகான கிராமம்; அழகும் அன்பும் நிரம்பி வழியும் அவள்!



சலிப்பதே இல்லை, எத்தனை தடவை பேசினாலும், எவ்வளவு சந்திப்புகள் நிகழ்த்தினாலும். ரயில்வே பாதையை பாண்டவையாற்றிலிருந்து பிரிந்து வரும் வாய்க்கால் கடந்து போகிறது, அதன் மேல் மதகு ஒன்று எழுந்து, உட்கார வசதியாக நிற்கிறது.

அந்த மதகில் உட்கார்ந்து கொள்வான். அவளின் வரவினை நோக்குகையில் நூலகப் புத்தகம் இருக்கும். கையில் ஏதாவது ஒரு கவிதைப் புத்தகம் இருக்கும். கொஞ்ச நாளாகவே அவனுக்குள் ஒரு ரசவாதம் நிகழ்ந்திருக்கிறது. வார்த்தைகள் தேடி யதார்த்தமும், அழகியலும் மிக்க வரிகளைப் படைக்க முற்பட்டிருக்கிறான்.

தன்னை மறந்து கற்பனையை உருவாக்கி, அதில் சிறகினை விரித்து ராகங்களை இசைப்பான். அவள், சமயங்களில், சொல்லின்ற நேரத்திலேயே இவனைச் சந்திக்க வந்துவிடுவாள்.

சமயங்களில் காத்திருப்பு நீண்டு கொண்டே போகும். இவன் தளர்ந்து கிளம்புவான், அவள் ஓடி வந்து கொண்டிருப்பாள். பேசாமல் மௌனமாய் நிற்பாள். அவள் கண்கள் ஈரமாகி இருக்கும். பேசத் தொடங்குவார்கள், நேரம் கரைந்து கொண்டே இருக்கும், பேச்சில் இன்னும் பலப்பல ரகசியங்கள் பூக்கும். சூரியன் தன்னை மறைத்துக் கொண்டிருக்கும். "இவ்வளவு நேரமா" வியந்தபடி விடை பெறுவான். மனசு சிறகுகளோடு பறக்கும், சைக்கிள் பயணம் சுகத்தையும் பரவசத்தையும் அளிக்கும்.

காலையில் எழுந்தால் வெடுக்கென்று அவளைப் பற்றிய ஞாபகங்கள் வந்து ஒட்டிக் கொள்ளும்.

நூலகம் போகலாமா? நண்பர்களைச் சந்திக்கலாமா? நோக்கமற்றுத் திரியலாமா? வேலை தேடி சலிக்கலாமா?

எதுவும் வேண்டாம், வெறுமனே உட்கார்ந்து பொழுதைக் கழிக்கலாம். இப்படியே வாழ்வு அர்த்தமற்றுப் போய் விடுமா..? நாளைய வாழ்வுக்கான வாசல் எப்படித் திறக்கும்?

சுந்தரமூர்த்திதான் கூப்பிட்டான். "சுண்ணாம்பு அடிக்கிற வேலைக்கு வர்றீயா?"

சற்று யோசித்தவன் 'எப்படியிருக்கும் பார்க்கலாம்' என்று கிளம்பிப் போனான். வேலை ஏதோ இருந்தது. அதிகமான அதிகாரம் இல்லை.

கடுமையான உடல் உழைப்பு என்றாலும், கைகட்டிய சேவகம் இல்லை. அன்றே கூலியைப் பார்க்கலாம். வடை, டீ கிடைக்கும், ஒரு மாத காலம் வேலையில் ஈடுபட முடிந்தது. சுண்ணாம்பு அடித்தவன், ஆயில் பெயிண்ட் அடிக்கும்படி தொழில் கொஞ்சம் விளங்கியது.

அவன் வேலை பார்க்கும் கம்பெனி, இப்போது இவன் உட்கார்ந்தபடி இருக்கும் குத்துக்கல்லிலிருந்து நேரே பிரம்மாண்டமாய் எழுந்திருக்கிறது. இதில் தினமும் ஐம்பது தொழிலாளர்கள் வேலை பார்க்கிறார்கள்.

ரெத்தினசாமி தான் சொன்னான். ஒரு நாள் கடைத் தெருவில் சந்தித்துப் பேசிக் கொண்டிருந்தபொழுது "நான் ஒரு வருடமா

*கேபிள் டி.வி.யில் போன மாதம் பார்த்த 'டவுன்பஸ்' படத்தில் அஞ்சலிதேவியின் நடிப்பை மறக்கவே முடியலே தாத்தா!*

பாலக்காட்டுலதான் வேலை பார்க்கிறேன் நீயும் வர்றியா", "இப்ப வர முடியாது, அட்ரஸ் கொடு" என்று வாங்கி வைத்துக் கொண்டான்.

திடீரென்று இவன் வந்து நிற்பான் என்று ரெத்தினசாமி நினைத்துக்கூடப் பார்க்கவில்லை. ஆச்சரியம்தான் கரைபுரண்டு வந்தது. ஓடி வந்து தோழமையோடு அணைத்துக் கொண்டான்.

தான் இப்படி வர நேரிட்டக் காரணத்தையெல்லாம் அவனிடம் விரிவாகச் சொன்னான். எல்லாவற்றையும் கேட்டு, ஆறுதல் சொல்லி, வேலையும் வாங்கிக் கொடுத்தான் ரெத்தினசாமி.

நேற்றோடு ஒரு மாதம் முடிவுற்று சம்பளம் வாங்கியாகி விட்டது. கேன்டீன் பில் போக, ஆயிரத்து ஐந்நூற்று ஐம்பது ரூபாய்.

"ரெத்தினசாமி, ஊருக்குப் போயிட்டு வா" என்று பலமுறை சொல்லிவிட்டான்.

நடக்க வேண்டும் போல் தோன்றியது. 'கலிமா சேச்சி' கடைக்குப்போய் சாயா குடிக்கணும் என்று தோன்றியது.

நடந்தான். தெற்குப் புறமாய் இருக்கும் சாலையில் நடந்தால் கடுக்காகுன்னம் வரும். நாலைந்து மாடி, கடைகள், சில பெட்டிக் கடைகள், கலிமா சேச்சியின் சாயாக் கடை. இங்கு வந்ததிலிருந்து இங்குதான் டீ குடிக்கிறான். ரெத்தினசாமிக்கும் மிக நெருக்கமானவர், கலிமா சேச்சி. அவர்களின் உள் விவகாரங்கள் இவனுக்குத் தெரியும். இவன் கடைக்குப் போனால் நல்ல மரியாதையும் கவனிப்பும் உண்டு. தமிழ் பேப்பர் வாங்குகிறார்கள்.

மணி பதினொன்று ஆகியிருந்தது. சுரீர் என்று வெயில் அடித்தது. ஞாயிறு என்



செலவுக்குப் பணம் வேணும்னா நேரடியாக் கேளு... எதுக்கு எனக்கு ஐஸ் வைக்கிறே?

- உ. ராஜாஜி

இவனோ பதில் சொல்லாமல் சிரிக்கிறான்.

"இல்லையென்றால், போன் செய்து இங்கிருப்பதாகச் சொல், அதுவும் இல்லையென்றால், ஒரு கடிதமாவது போடு. உன் மனைவி என்ன நினைக்கும்? உன் குழந்தை ஞாபகம் வரவில்லையா?"

இவனோ புதிர்களால் தன்னை நிரப்பிக் கொண்டு, மேலும் மேலும் மௌனத்தால் நிரம்பி வழிந்தான்.

சூரியன் மறைந்து மேகங்கள் அங்கங்கே திட்டுத் திட்டாய்த் தெரிந்தன. உடம்பைக் கசகசக்க வைத்தது. வெயில் மறைந்து மெல்லிய புழுக்கம் எழுந்தது. மலையில் பனி போர்த்தியது போன்று, வெண்மை காணப்படுகிறது, பார்வைக்கு ரம்மியமாய், சுகமாய் இருக்கிறது.

மேகத்தைக் கிழித்துக் கொண்டு சூரியன் வெளியே வருகிறது. புழுக்கம் குறைகிறது. விடாப்பிடியாக மனைவியையும், குழந்தையையும் பிரிந்து தனியே இருந்தாலும், அவர்களுக்கும் நமக்குமான உறவு, மேகத்துக்கும் சூரியனுக்குமான உறவு போலத்தான். மனம் முடிவு ஒன்றை அறிவித்தது.

ஒரு மணி நேரத்துக்கு மேல் ஒரு தவத்தைச் செய்வது போல், அந்த குத்துக் கல்லிலேயே தன்னை இருத்தினான். எழுந்து

பதால் கேன்டீன் கிடையாது. மதிய சாப்பாடு, கடையில் பார்த்துக் கொள்ள வேண்டும்.

நடந்தான். அழகான கிராமம்தான் இது. நிலப்பரப்பு அதிகம் இல்லை. எல்லாம் மேட்டு நிலங்கள். மலம்புழா அணையிலிருந்துதான் பாசனம். சிற்றாறு ஓடிக் கொண்டிருக்கிறது. வயலில் நெல் விளைந்திருந்தது. தன் ஊரிலும் இந்நேரம் கதிர் முற்றிப் பழுத்துக் கொண்டிருக்கும். வயலிலிருந்து சுகமான வாசனை எழுந்தது. குளு... குளுவென காற்று, வெயிலையும் மீறி வீசியது.

அவளைக் காண இவன் அடிக்கடி போகும் பொழுதெல்லாம், அவளின் கிராமம் அடர்த்தியான பச்சை நிறத்தில்

செழித்திருக்கும். ரயில்வே சாலையிலும் மேற்குக் காட்டாற்றின் கரையிலும் அவளுக்காக காத்திருக்கும் பொழுது, அவள் வருவாள். மேனியெங்கும் வண்டல் மண் வாசம் எழும். வியர்வையில் மண் வாசம் கலந்திருக்கும். அவள் தந்தைக்கு ஊரில் கொஞ்சம் சாகுபடி நிலம் இருந்தது. அதில் அவள் வியர்வை பெருக உழைத்திருப்பாள். அதனால் அப்படியொரு சுகந்தமான மணம் ஏற்பட்டிருக்குமோ?

கடைக்கு வந்தும் அவள் நினைவுகளைக் கலைக்க முடியவில்லை. கலிமா சேச்சி இவனைக் கண்டதும் சிரித்தாள்.

உட்கார்ந்தான்.

"அண்ணா, என்ன சாப்பிடுறீங்க?" மலையாளம் கலந்த தமிழ் இனித்தது.

"சாயா.. மதி.." சூடாகவும், சுவையாகவும் தேநீர் ஒன்றைத் தந்தாள்.

பேப்பரைப் புரட்டினான். உருப்படியான செய்தி ஒன்றும் இல்லை. மடக்கிக் கொடுத்து விட்டு, விச்ராந்தியான மனநிலையோடு வெளியேறி நடக்கலானான்.

வெயில் உச்சியை மையமாக வைத்துக் கொதித்தது. மெல்லிய அதிர்வில் மனசு வலித்துக்கொண்டிருந்தது. கிழிந்து போன பறை ஒன்றை யாரோ தட்டிப் பார்ப்பது போல், முறிந்து போன புல்லாங்குழலில் யாரோ ராகம் பாட முயல்வது போல...

இவன் இந்த ஒரு மாத காலமாக இந்த வழியாகத்தான், தினமும் காலை ஒரு தடவை, மாலை ஒரு தடவையென நடக்கிறான்.

கடைத் தெருவின் தொடர்ச்சி முடிந்து வீடுகள் தொடங்குகின்றன. வடக்குப்புறமான வரிசையில் நான்காவது வீட்டிலிருந்து ஒரு பெண் ஓடி வந்து பார்ப்பதும், புன்னகை செய்வதுமாய், சமயங்களில் தண்ணீர் எடுக்கும் சாக்கில் குடத்தோடு கொஞ்ச தூரம் இவன் பின்னால் வருவதுமாய், இருக்கிறாள்.

போன ஞாயிறு அன்று ஏதோ கேட்டாள். இவன் மௌனமாய் இருக்க முயன்றான்.

அவள் மனசுக்குள் எந்த விதமான வலையை நெய்து கொண்டு இருக்கிறாளோ யாருக்குத் தெரியும்?

அவளை நினைத்தால் இவனுக்குச் சிரிப்புதான் வருகிறது. இவனோ, அவளை ஒரு விளையாட்டுப் பிள்ளை போலத் தான் நினைக்க முடிகிறது. அவள் மீது கோபப்பட வாய்ப்பில்லை, பாவப்படலாம்.

அவள் சின்னப் பெண், அவளுக்கு என்ன தெரியும்? அவளின் உலகம் மிகச் சிறியதாய் இருக்கலாம்.

நடந்தான். குப்பென்று எழும் பச்சை மண்ணின் மணம் போல, மனைவியின் ஞாபகம் எழுந்தது.

குளித்து முடித்து கிளம்பத் தயாராய் இருந்தான். திரும்பி வந்த ரெத்தினசாமிக்கு ஒன்றுமே விளங்கவில்லை.

"ஊருக்குப் போறேன்." இவன் சொன்னதும், ரெத்தினசாமி, சந்தோசமாய் அவன் பேகைத் தூக்கிக் கொண்டு நடந்தான்.

ஸ்டாப்பில் நின்று கொண்டிருந்தார்கள். பஸ் வந்தது...

"ஊருக்குப் போயிட்டு எப்ப வருவே?"

"சொல்ல முடியாது, வந்தாலும் வருவேன், வராமலும் போகலாம்."

பஸ்சுக்குள் ஏறினான்.

ரெத்தினசாமி திருப்தியோடு நடந்தான்.

அதிவேக ரயிலொன்று கோவை மார்க்கமாய் விரைந்து கொண்டிருந்தது. ○



# ஓடிக் கொண்டிருக்கிறேன்!

மழையில் நனைந்தும்
கரையாத,
தொட்டால் ஒட்டும்
நிறங்களைத் தீட்டியவரின்
கையொப்பமறிய,
குச்சிக்கால்களின்
பிடிப்பை உணர,
கசக்கி விடாத மனோபாவத்தோடு
நானும் ஓடிக்
கொண்டுதானிருக்கிறேன்
வண்ணத்துப் பூச்சியின் பின்னால்!

- பாரி கபிலன்

படம்: அஜல்




# தூள்

**சா**த்தான்குளம் இடைத் தேர்தலில் கழன்று கொண்ட தி.மு.க. போல, கூட்டமில்லாத தியேட்டருக்குப் போய் நிம்மதியாய், தூங்கிவிட்டு வர நினைக்கிறவர்கள் ஜாக்கிரதை! தூள் படம் ஓடும் தியேட்டர்களில் கொட்டாவியோடு நுழைந்தால், உங்களைக் கோட்டான் மாதிரி இரண்டரை மணி நேரம் விழி விரிய வைத்து விடுவார்கள். அப்படியொரு புதிய முயற்சியா, என்று ஆச்சர்யப்பட்டு விடாதீர்கள். ஆட்டுக் கல்லிலிருந்து கிரைண்டருக்கு மாறிய அதே மாவுதான். ஆனால் உளுந்தும் வெந்தயமும் கலந்தது மந்திரம் போட்டதால் தோசைக்குப் பதிலாய் சூப்பர் பிட்ஸாவாகி விட்டது படம்.

தொழிற்சாலைக் கழிவுநீரால் தமது கிராமத்துக் குடிநீர்க் குளம் விஷமாகி விட்டதைக் கண்டு பொங்கி எழும் முரட்டு இளைஞன் ஆறுமுகம் (விக்ரம்), அதற்குத் தீர்வு தேடி, அத்தை மகள் ஈஸ்வரி (ஜோதிகா) சகிதம் சென்னைக்கு வருகிறார். வந்த இடத்தில், வோட்டுப் போட்டு ஜெயிக்க வைத்த உள்ளூர் அமைச்சர், பக்கா பொது நல எதிரி என்பது புரிந்து போகிறது.

அப்புறமென்ன! ஹீரோவுக்கும் வில்லனுக்குமான கோடம்பாக்கத்து குருக்ஷேத்திரத்தில் தர்மம், அதாவது ஹீரோ வெற்றி பெறுகிறார். நாயகன் ஆறுமுகம் பாத்திரத்தில் நம்ம விக்ரம் 'அண்ணாச்சி அடிதடி பார்ட்டியாக காட்சிக்குக் காட்சி அதிர வைக்கிறார். சண்டைக் காட்சிகள் வரும் போது, நெருப்புப் பொறி பறக்கிறது. இந்த உழைப்பின் பின்னணியில் இருக்கும் ராக்கி ராஜேஷ் கவனிக்க வைத்திருக்கிறார்கள். பார்திக்குப் பிறகு, அழகியில் கூட சோபிக்க முடியாத சாயாஜி ஷிண்டே, மாபியா தொடர்புள்ள மாநில அமைச்சர் பாத்திரத்தில் வெளுத்து வாங்கியிருக்கிறார். கோபம் கொப்பளிக்கையில் மூக்கையும் நடிக்க வைக்கிற நாசருக்குப் போட்டியாக, ஷிண்டேவின் மூக்கும் ரெடி!

கண்ணெதிரில் அக்கிரமம் நடந்தால் தட்டிக் கேட்பவன்தான் ஆம்பிளை, என்று விக்ரமுக்குக் கொம்பு சீவிவிடும் இன்ஸ்பெக்டராக கலக்கும் அந்த மலையாள நடிகரும், "டேய்ய்ய்... என் தம்பிங்க மேலையா கைய வெச்சே" என்று செவிப் பறையைக் கிழிக்கிற ஹைடெசிபல் கத்தலோடு பொம்பளை ரவுடியாக அதிர வைக்கும் அந்தத் தெலுங்கு நடிகையும் ரொம்ப ரொம்ப நீட்!

போர்த்திக் கொள்ள ஜோதிகாவும், காத்துவாங்க ரீமாவும் என இரண்டு நாயகிகள் என்னமாய் ஹீரோ சேவை செய்கிறார்கள்! இவர்களையெல்லாம் பின்னுக்குத் தள்ளிவிட்டு, பச்சென்று நெஞ்சில் ஒட்டிக் கொள்கிறது, பரவை முனியம்மாவின் மண் வாசனை நடிப்பு. புயல் வேகத்தில் பாய்கிற புல்லட் ரயிலில் அழைத்துப்போய் சுடச் சுடப் பிட்ஸா தந்து, செரிமானத்திற்கு ஜிஞ்சர் ஜூஸ் மாதிரி துளியூண்டு மெசேஜுக்கும் முக்கியத்துவம் கொடுத்திருக்கும் இயக்குனர் தரணிக்கு இனி அதிரடி இயக்குனர் என்று அடைமொழி தரலாம்.

**- விஷ்ணுவல்தாசன்**

● ஆவரெஜ்

## அமரர் கல்கி எழுதிய நூல்!

கல்கி பத்திரிகை வாரம் தோறும் உங்கள் வீடு தேடி வர சந்தா செலுத்துங்கள்; பரிசும் பெற்று மகிழுங்கள்.



### ஓராண்டுச் சந்தா ரூ.330/-

செலுத்துவோருக்கு பின் வரும் மூன்று புத்தகங்களில் ஏதேனும் ஒன்று பரிசு. நீங்களே தேர்வு செய்ய லாம். பரிசுப் புத்தகத்தின் மதிப்பு

# சந்தா கட்டுங்க! பரிசு தட்டுங்க!

ரூ.65 முதல் ரூ.75/- வரை.

1. **இயாகபூமி** (நாவல்)
2. **மனிதன் எப்படி உயர்கிறான்?** (கல்கி எழுதிய சினிமா, நாடக விமர்சனங் களின் தொகுப்பு)
3. **எழுத்துலகில் அமர தாரா** (அமரர் கல்கி பற்றி பல்வேறு அறிஞர்கள் எழுதிய கட்டுரைகளின் தொகுப்பு)

### இரு ஆண்டுகளுக்கு சந்தா ரூ.660/-

செலுத்துவோருக்கு **'கல்கி களஞ்சியம்'** பரிசாக வழங்கப்படும். (அமரர் கல்கி எழுதிய சிறுகதைகள், குறுநாவல்கள், விமர்சனங்கள், கட்டுரைகள் முதலியவற்றிலிருந்து மிகச் சிறந்தனவற்றின் தொகுப்பு. கல்கி கிருஷ்ணமூர்த்தி நூற்றாண்டு வெளியீடு. பரிசுப் புத்தகத்தின் மதிப்பு ரூ.150/-

### மூன்றாண்டுச் சந்தா ரூ.990/-

செலுத்துவோருக்கு **அமரர் கல்கி** எழுதிய **சிவகாமியின் சபதம்** அல்லது **அலை ஓசை** நாவல் பரிசு. புத்தகத்தின் மதிப்பு ரூ.200/- முதல் ரூ.250/-வரை.

**இந்தச் சிறப்புச் சலுகை 07.02.03 தேதி வரை மட்டுமே.** எனவே முந்துங்கள்! உடனே சந்தா அனுப்பி பரிசு பெறுங்கள்! உங்கள் விலாசத்தைத் தெளிவாகக் குறிப்பிடுங்கள்.



ஏற்கெனவே சந்தா தாரராக உள்ளவரும் தங்கள் சந்தா எண்ணைத் தெரிவித்து தொகை அனுப்பலாம். உங்கள் சந்தா, முடிவு தேதியிலிருந்து புதுப்பிக்கப்படும். **கல்கி** என்ற பெயருக்கு உள்ளூர் செக்*,

மணி ஆர்டர் அல்லது டிமாண்ட் டிராஃப்ட் அனுப்ப வேண்டிய முகவரி :

**சர்க்குலேஷன் மானேஜர்,**
**கல்கி,**
**47-என்.பி., ஜவஹர்லால் நேரு சாலை,**
**ஈக்காடுதாங்கல், சென்னை - 97.**

*(வெளியூர் காசோலைகள் (Cheques) ஏற்க இயலாது)

ஸ்ரீ ராம்ஜெயம்

# வடமாநில புனித யாத்திரை

33 ஆண்டுகளுக்கு மேலான அனுபவம்

| | | |
|---|---|---|
| 23.2.2003 | : | இது 24 நாட்கள் கொண்டது. பூரிஜெகன்னாத், கோனாரக், புவனேஸ்வர், கல்கத்தா, நியூஜெல்பகுரி, சிக்கிம், டார்ஜிலிங், கோரக்பூர், நேபாளம், போக்ரா, முக்திநாத், காசி, கயா, புத்த கயா, அலகாபாத், அயோத்தியா, நைமிசாரண்யம் - நபர் ஒருவருக்கு கட்டணம் ரூ. 8800/- |
| 10.3.2003 | : | இது 10 நாட்கள் கொண்ட குதுகலமான கர்நாடக யாத்திரை. ஸ்ரீரங்கபட்டினம், மைசூர், சிருங்கேரி, அன்ன பூர்ணா, சுப்ரமண்யம், தர்மஸ்தலம், கொல்லூர் மூகாம்பிகை, உடுப்பி, முருடேஸ்வர், சோமடேஸ்வர், ஸ்ரவண பெலகுலா, பேலூர் ஹலபேடு கோகர்ணம், கட்டில், பெங்களூர், தலைக்காவேரி, இடுகுஞ்சி விநாயகர், யானை மலை விநாயகர் - நபர் ஒருவருக்கு கட்டணம் ரூ. 4000/- |
| 21.3.2003 | : | இது 15 நாட்கள் கொண்டது. மும்பை, நாசிக், பஞ்சவடி, த்ரியம்பகேஸ்வர், சிரிடி, சனி சிங்கனாப்பூர், குர்னேஸ்வர், எல்லோராகுகை, நாகநாதம், பரலிவைத்தியநாதம், கைக்கடிமகாராஜ கோயில், பண்டரிபுரம், பீமாசங்கரம், உஜ்ஜயினி, மகா காளேஸ்வரர், ஓங்காரேஸ்வர் - நபர் ஒருவருக்கு கட்டணம் ரூ. 6900/- |
| 9.4.2003 | : | இது 12 நாட்கள் கொண்டது. பூரிஜெகன்னாத், கோனாரக், புவனேஸ்வர், கயா, புத்தகயா, காசி, சாரநாத், அயோத்தியா, அலகாபாத், நைமிசாரண்யம் - நபர் ஒருவருக்கு கட்டணம் ரூ. 5500/- |
| 9.4.2003 | : | இது 17 நாட்கள் கொண்டது. பூரிஜெகன்னாத், கோனாரக், புவனேஸ்வர், கயா, புத்தகயா, அலகாபாத், அயோத்தியா, காசி, சாரநாத், நைமிசாரண்யம், ஹரித்துவார், ரிஷிகேஷ், நியூடெல்லி, ஆக்ரா, மதுராபிருந்தாவன் - நபர் ஒருவருக்கு கட்டணம் ரூ. 7050/-. |
| 30.4.2003 | : | இது 30 நாட்கள் கொண்டது. பூரிஜெகன்னாத், கோனாரக், புவனேஸ்வர், கயா, புத்தகயா, அலகாபாத், நேபாளம், போக்ரா, முக்திநாத், அயோத்தியா, காசி, சாரநாத், நைமிசாரண்யம், ஹரித்துவார், ரிஷிகேஷ், கேதார்நாத், பத்ரிநாத், தேவப்ரயாகை, நியூடெல்லி, ஆக்ரா, மதுராபிருந்தாவன் - நபர் ஒருவருக்கு கட்டணம் ரூ. 11,800/-. |



ஆங்காங்கு தங்கும் அறைகள், ஊர் சுற்றிப் பார்க்க பஸ் கட்டணம், தூங்கும் வசதி கொண்ட இரண்டாம் வகுப்பு ரயில் கட்டணம், கைதேர்ந்த தென்னிந்திய பிராம்மணர்களைக் கொண்டு காலை - காபி, டிபன்; மதியம், இரவு உணவளிப்பதுடன் இங்கு குறிப்பிட்ட அனைத்துச் செலவுகளும் எங்களைச் சேர்ந்தவை.

மேலும் விவரங்களுக்கு :-

## ஸ்ரீ விஜயலட்சுமி டிராவல் சர்வீஸ்

நெ.7, வெங்கடாசல செட்டித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை - 600 005. ✆ : 28440144

உரிமையாளர் : S. ஜெயராமன்



# பிருகு மகரிஷி நாடி ஜோதிட நிலையம்

57/1, செவன் ஹில்ஸ் அபார்ட்மெண்ட்ஸ், 47-வது தெரு, 9th அவின்யூ, அசோக் நகர், சென்னை-83. போன் : (044) 24746919, 24749198



உயர்கல்வி, உத்யோகம், சொந்ததொழில், வியாபாரம், திருமணம், ஆண், பெண் குழந்தைகள், பேரதிஸ்டம், சொந்த வீடு, வாகனம், உயர் பதவி, அரசியல், வெளிநாடு செல்லுதல் போன்ற நன்மைகள் ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் எப்போது நடக்கும் என்பதையும் இடைப்பட்ட காலங்களில் ஏற்படும் வியாதி, விபத்து, கடன் தொல்லைகள், குடும்ப பிரச்சினை, ஏமாற்றங்கள், வழக்குகள், குறைந்த ஆயுள், கண்டங்கள் போன்ற துன்பங்கள் வரும் காலங்களையும் இவற்றின் நிவர்த்தியும்.

எல்லா வியாதிகளுக்கும் மூலிகை மருத்துவ முறையும் மகரிஷிகளால் எழுதி வைக்கப்பட்ட பழங்கால ஓலைச்சுவடிகளின் மூலமாக படித்து எழுதி தரப்படும். (ஜாதகம் இல்லாதவர்களுக்கு கைப்பெருவிரல் ரேகையைக் கொண்டும் ஜாதகம் எழுதி தரப்படும்)

**பண்டிட் குருஜி. க. மதியழகன் சுவாமிகள்**

## ஸ்ரீ அகத்தியர் நாடி ஜோதிட நிலையம்

57, பிருந்தாவனம் ரோடு, சாரதா கல்லூரி எதிரில், ∴பேர்லேண்ட்ஸ் முருகன் கோவில் அருகில், ∴பேர்லேண்ட்ஸ், சேலம்-16. போன் : (0427) 2449397, 2446292

www.rishigalnaadiastro.com e-mail : mathislm@eth.net

சிறந்த முறையில் ஆண், பெண் திருமணப் பொருத்தம் சோதிட நிபுணர்களால் பரிசீலனை செய்யப்பட்டு தெளிவாக உங்கள் வீட்டு முகவரிக்கே ஒரு வார காலத்தில் அனுப்பி வைக்கிறோம். கட்டணம் ரூ.300/-. தரமான உயர்ந்த வகை நவரத்தின கற்களும் நவரத்தின மாலையும், ஸ்படிக மாலைகளும் கிடைக்கும்.



# ஜேம்ஸ் வசந்தன்


**கணீர் குரல்!
கம்பீர உடல்மொழி!
கலப்படமில்லாத நல்ல தமிழில் நயமான பேச்சு! இதுதான் ஜேம்ஸ் வசந்தன்!
ஆண் தொகுப்பாளர்கள் அரிதாய்ப் போய்விட்ட தமிழ் சாட்டிலைட் டி.வி உலகின் முன்னணித் தொகுப்பாளர். இந்த உயரத்தை எட்டிப் பிடிக்க, எத்தனைக் கதவுகளைத் தட்டியிருப்பார்?! மனம் திறக்கிறார்.**

**••**

**கொஞ்சம் கூட தயக்கமோ, பயமோ இல்லாமல், சன் டி.வி. அலுவலகத்திற்குப் போய் நிகழ்ச்சிகளுக்கு இசையமைக்க வாய்ப்புக் கேட்டேன்.**

**••**

"திருச்சிதான் எனது சொந்த ஊர். பிறந்து, வளர்ந்து, படித்ததெல்லாம் அந்தக் காவிரிக் கரையில்தான். குடும்பத்தில் நான் எட்டாவது பிள்ளை. கடைக்குட்டி. தினசரி என்னை தினத்தந்தி செய்தித்தாளையும், பாரதியார் கவிதைகளையும் படித்துக்காட்டச் சொல்லி, என் தமிழை வளமை செய்த அப்பா, காவல் துறை அதிகாரியாக இருந்தவர். அவர் கருணையும் கண்டிப்பும் கலந்த ரோல் மாடல். நிறைய சலுகைகளோடு செல்லப் பிள்ளையாக வளர்ந்தேன். அப்பா திடீரென்று இறந்த பிறகு, வீட்டிற்குள் வெற்றிடம். நண்பர்களுக்கும், உறவினர்களுக்கும், அப்பா ஜாமீன் கொடுத்ததில் விவசாய நிலங்கள் எல்லாம் கையை விட்டுப் போய்விட்டன. நெருங்கிய உறவினர்கள் கூட அப்பாவை ஏமாற்றி விட்டனர். மூத்த அண்ணன் கப்பற்படையில் சேர்ந்து வடக்கே போய் விட்டார். அம்மா மிகவும் கெட்டிக்காரர். அப்பாவின் ஓய்வூதியத்தை வைத்துக் கொண்டே ஒட்டுமொத்தக் குடும்பத்தையும் நிர்வகித்தார்.



சாமர்த்தியமாக எல்லா அண்ணன்களுக்கும், அக்காவுக்கும் திருமணம் செய்து வைத்து விட்டார். நான் மட்டும் பாக்கி. கஷ்டம் என்றால் என்னவென்றே தெரியாமல், இளங்கலை படிப்பது வரையிலும், அம்மாவின் சேலையைப் பிடித்துக் கொண்டு அலைந்து கொண்டிருப்பேன். அம்மா தான் எனக்கு சுவாசம். அவர் தனது சுவாசத்தைத் திடீரென நிறுத்திக் கொள்வார் என்று நான் எதிர்

## தட்டினேன் திறந்தது!

பார்க்கவேயில்லை. அம்மாவின் உடலை அடக்கம் செய்துவிட்டு, கல்லறைத் தோட்டத்திலிருந்து வீடு திரும்பிய அன்றே வீட்டில் பூகம்பம் வெடித்தது. அண்ணனோடு மன வேறுபாடு. வீட்டை விட்டு வெளியேற வேண்டிய அளவுக்கு நெருக்கடி. ஒரு பழைய பெட்டியில் நான்கு சட்டைகளோடு வெளியேறி, திருச்சி புத்தூர் நான்கு சாலை சந்திப்பில் நிற்கிறேன். எந்தத் திசையில் போவதென்று தெரியவில்லை. ஒரு கணம் கண்ணை மூடி யோசித்தேன். மனக் கண்ணில் எனது தேவாலய கோபுரம் தென்பட்டது. அங்கே குடும்பமாய்ப் பழகிய நண்பர்களின் முகங்கள். இங்கே வா என்று தலையாட்டி அழைத்தன. பிழைக்க நம்மிடம் என்ன திறமையிருக்கிறது என்று யோசித்தேன். காதுக்குள் கீ போர்டு ஒலி எழுப்பியது.

# திறக்கத்தான் கதவுகள்!

சிறுவயது முதலே, தேவாலயத்தில் பாடி வளர்ந்தவன். ஞாயிற்றுக் கிழமையன்று, தேவாலயத்தில் திருப்பலி முடிந்த பிறகு, சபையில் உள்ள ஒவ்வொருவர் வீட்டிற்கும் சென்று ஜெபிப்பது, அவர்களுக்குக் கஷ்டம் என்றால் நம்மால் முடிந்த உடல் உழைப்பை நல்குவது, என்ற பண்பாட்டைப் படித்தவன். அப்பா, அம்மா இருவருமே கிளாசிக்கல் இசை பயின்றவர்கள் என்பதால் இசை எனக்குள்ளும் ஊடுருவி விட்டது.



மெல்லிசைக் குழுக்களில் பாடியும், கீ போர்டு வாசித்தும், இசையை நேசிக்கத் தொடங்கிய எனக்கு, சினிமாவுக்கு இசையமைக்க வேண்டும் என்று ஆசை. அத்தனை நிராதரவான நிலையிலும் அந்த ஆசையை இலட்சியமாய் வரித்துக் கொண்டு நின்றேன்.



எனது நம்பிக்கை வீண் போகவில்லை. எனது உயிர் நண்பர்கள் சந்தோஷ்™ம், சுதாவும் எனக்கு உதவினார்கள். பகல் முழுவதும் இவர்கள் வீட்டில் சாப்பாடு, பேச்சு, பிரேயர். இரவு, நான்கடிக்கு நான்கடி அகலமேயுள்ள குகை போன்ற வாடகை அறையில், தலைக்குப் பெட்டியை வைத்து, கால்களை மடக்கிக் கொண்டு தூக்கம். உணவு, உடை எல்லாமே நண்பர்கள் கொடுத்தார்கள்.

இந்த நேரத்தில் கொடைக்கானல் கார்ல்டன் நட்சத்திர ஹோட்டலில் வேலை கிடைத்தது. அங்குள்ள நைட் கிளப்பில் பியானோ வாசிக்க வேண்டும். எல்லோரும் தூங்கும் நேரத்தில் வாசிக்கும் இரவு இசைக் கலைஞன் வேலை மூன்றே மாதத்தில் வெறுத்துவிட்டது! ஆனால் கையிலிருக்கும் வேலையை எப்படி விடுவது...? யோசித்த போது, கொடைக்கானலிலேயே புனித பீட்டர்ஸ் மேல்நிலைப்பள்ளியில் இசையாசிரியர் பணி கிடைக்க, வளரும் பிள்ளைகளுக்கு சொல்லித் தருகிறோம் என்ற சந்தோஷத்தில் அங்கேயே ஆறரை ஆண்டுகள் ஓடிப் போயின. திருமணமும் முடிந்து விட்டது.

இடையில் இசையமைப்பாளர் இலட்சியம் என் தலையில் குட்ட, விழிப்பு வந்தது. வேலையை விட்டுவிட்டு மனைவியுடனும், கையில் எண்ணூறு ரூபாயுடனும் சென்னை வந்து சேர்ந்தேன்.

அப்போது தமிழ்நாட்டுக்கு சாட்டிலைட் தொலைக்காட்சி என்பது புதிய விஷயம். சன் டீ.வி. தனது முதல் ஆண்டு நிறைவைக் கொண்டாடிய நேரம். கொஞ்சம் கூட தயக்கமோ, பயமோ இல்லாமல், சன் டீ.வி. அலுவலகத்திற்குப் போய் நிகழ்ச்சிகளுக்கு இசையமைக்க வாய்ப்புக் கேட்டேன். அவர்களோ 'நீங்கள் தமிழ் நன்றாகப் பேசுகிறீர்களே நிகழ்ச்சியை தொகுத்து வழங்க முடியுமா?' என்றார்கள். ஓ.கே. சொன்னேன். நான் முகம் காட்டி தமிழ் பேசிய முதல் நிகழ்ச்சி 'வந்ததும் வருவதும்'. அதன் பிறகு, 'பாட்டுக்குப் பாட்டு', 'கீதம் சங்கீதம்' என்று தொடர்ந்தது. அதன் பிறகு தான் 'டாப் டென் மூவீஸ்' என்ற மிக ஆபத்தான நிகழ்ச்சியைக் கையில் எடுத்துக் கொண்டேன்.




"நாங்கள் இலட்சக் கணக்கில் பணம் போட்டு எடுக்கிற படங்களை, கால்மேல் கால் போட்டுக் கொண்டு, நீ கூலாக விமர்சிக்கிறாயா?" என்று தொலைபேசியில் பெரிய பெரிய ஆட்கள் எல்லாம் கொலை மிரட்டல் விடுத்தார்கள். நான் கலங்கிவிடவில்லை. "ஒரு போலீஸ் அதிகாரி லஞ்சம் வாங்குகிறார். அரசியல்வாதி ஊழல் செய்கிறான் என்று சுதந்திரமாக படங்களில் நீங்கள் அதை விமர்சிக்கிறீர்கள். பொதுப் பார்வைக்கு வந்துவிட்ட உங்கள் படத்தை, நான் விமர்சிக்கிறேன். அது உங்கள் கடமை என்றால் இது என் கடமை" என்றேன். வாழ்க்கையில் எத்தனை இக்கட்டான சூழ்நிலையிலும் கலங்கி விடாமல், அடுத்தடுத்த அடிகளை வைத்து முன்னேறினேன். வாய்ப்புகளும், உலகமும் மிகப் பரந்தது, என்ற எண்ணம் என்னிடம் எப்போதும் உண்டு. என்னைப் போல டீ.வி. துறையில் சாதிக்க விரும்பும் இளைஞர்கள், முதலில் தாய் மொழியில் நல்லபடி பேசப் பயிற்சி எடுத்துக் கொள்ளுங்கள். அடுத்து உடல் மொழியை மாற்றுங்கள். உடை அணிவதிலும் ஒரு மொழி உண்டு. தமிழ் மீடியத்தில் படித்து விட்டோமே என்ற தாழ்வு மனப்பான்மையை விட்டுவிட்டு, ஆங்கில அறிவை வளர்த்துக் கொள்ளுங்கள். போகிற இடத்திலெல்லாம் போட்டிக்குப் பெண்கள் வந்து விடுகிறார்களே, என்று பின்வாங்காதீர்கள். வாய்ப்புகளை தேடிப் புறப்படுங்கள். ஒரு கதவை மட்டுமே தட்டிக் கொண்டிருக்க வேண்டாம். திறப்பதற்காகத்தான் கதவுகளே...

இறுதியாக எனது இசை இலட்சியம் எந்த நிலையில் இருக்கிறது என்று சொல்லி விடுகிறேன். விரைவில் நான் மெட்டமைத்த இசை ஆல்பம் வெளிவரப் போகிறது. அது உங்கள் செவி வழியே புகுந்து உங்கள் இரத்த செல்களை இதமாய் வருடும் என்று நம்புகிறேன்."

— ஜே.ஜெ.

படங்கள்: டிஜிட்டல் சண்முகம்



Subham

# சுபம் மேரேஜ் கேட்டரிங்
# சுபம் அப்பளாம் & ஸ்நாக்ஸ்
# சுபம் மேரேஜ் நீட்ஸ்

கடை : 14, கிழக்கு மாட வீதி, மயிலாப்பூர், சென்னை - 4 ✆ : 24953709

புதிய ஷோரூம் : 210, செயின்ட் மேரீஸ் சாலை, மந்தவெளி, சென்னை - 28.
✆ : 24616007 / 24933656 செல் : 9841019066

---

## சுபம் மேரேஜ் கேட்டரிங்

- கல்யாணத்திற்கான கோலம் முதல் கட்டுச்சாதக்கூடை வரை
- சீமந்தம், கிரக பிரவேசம் மற்றும் வீட்டு விசேஷங்களுக்கு 50க்கு மேற்பட்ட நபர்களுக்கு சாப்பாடு மற்றும் டிபன் வகைகள், டின்னர் சாப்பாடு (தென்னிந்திய மற்றும் வட இந்திய உணவு வகைகள்)
- பண்டிகை காலங்களில் தங்களுக்கு தேவையான பட்சணங்கள் ஆர்டரின் பேரில் டோர் டெலிவரி செய்து தரப்படும்.

---




## சுபம் அப்பளாம் - ஸ்நாக்ஸ்

- அப்பளம் மற்றும் பப்படாம்
- வடாம்
- வத்தல்
- பொடி
- கைமுறுக்கு, சீடை, மிக்ஸர், தட்டை மற்றும் இதர கார வகைகள்
- அதிரசம், சிப்ஸ், இனிப்பு வகைகள்

---

## சுபம் மேரேஜ் நீட்ஸ்

- ❑ சீர் பட்சணங்கள்
- ❑ வைதீக சாமான்கள்
- ❑ அங்குமணி சாமான்கள்
- ❑ டாய்லெட் சாமான்கள்
- ❑ காசி யாத்திரை சாமான்கள்



## நாளைய நாட்களை சற்றும் பிசகாது அறிந்திட

# ஜோதிடப்பயிற்சி

(தபால் வழி போதனா முறை)

அன்றைய அறிஞர்கள் ஆய்ந்தறிந்து கிரக ஆய்வு வழியாக அவரவர் அவதரித்த நேரம் கொண்டு அவர்கள் வாழ்வை சற்றும் பிசகாது அளவை செய்து - அவரவரது ஆற்றலை அவதரித்த நாளிலேயே கண்டு அவர்கள் பெற்றோர் அறிந்திடக்கூறி ஆச்சரியத்தில் ஆழ்த்தினர் - அத்தனை வியப்பிற்குகந்த கிரக ஆராய்ச்சி வழியை முழுமையாக அறிய வைப்பதுதான் ***ஜோதிடக்கலை.***

இத்தனை விஞ்ஞானங்கள் வளர்ந்த நாளிலுங்கூட மனிதரது வாழ்வை அச்சு மாறாது அளவை செய்யும் ஒரு மாற்று வழி தோன்றவில்லை. பிறந்த நேரத்தை தவறாது கண்டெடுத்து சூழ்நிலை வாயிலாக அந்த நேரம் சரிதானாவெனவும் ஆய்வு செய்து லக்கினம் அமைக்கப்பட்டுவிடுமாயின் - ஜோதிட சாஸ்திரம் சற்றும் மாறாது உற்ற பலன்களை உரியபடி கூறிவிடும்.

படிப்பானா, பதவி ஏற்பானா, தொழில் வழி மன்னனா, அனைவருக்கும் நலம் செய்யும் தியாகியா, இனிய இல்லறம் காண்பானா- கனிவான மக்களைப் பெறுவானா, பெற்றோரை பெருமையுறக் காப்பானா? தேக திடம் உள்ளவனா, ஆற்றல் மிக்க அறிவுமிக்க ஞானியா? கடன் வழித்தொல்லைகள் சுமப்பானா? மாட மாளிகை கூட கோபுரம் ஏற்பானா? எந்த வயதுவரை இனிது உயிர் வாழ்வான்? என்ற அவன் சரிதத்தை அப்படியே இம்மியும் பிசகாமல் சொல்லும் வல்லமையை 63 பாடங்களில் போதிக்கின்றோம். இதுவரை எவரும் கூறி இராதபடி பலன் சொல்லும் வழிமுறைகளை 250 உதாரண ஜாதகமிட்டு விவரித்திருக்கின்றோம்.

இது காறும் 40 ஆண்டுகளாக பயில்வித்து வரும் எம்மிடத்தில் பயின்றவர்கள் தமிழினத்தார் எங்கெங்கு இருக்கின்றரோ அங்கெல்லாம் பெரியஜோதிடர்களாக பெரும் புகழ் சேர வாழ்கின்றனர். படித்து முடித்தார்க்கு 'ஜோதிடக்கலைஞர்' என்ற பட்டமும் சான்றிதழும் தருகின்றோம்.

எள்ளளவும் பிசகின்றி ஜாதகம் கணிக்கும் வழிமுறைகள், வாழ்வில் என்ன என்ன இன்பநிலை அடைவார் - என்ன என்ன இன்னலுக்கு ஈடாவார் என்று எள்ளளவும் பிசகாது எடுத்துப்பலன் சொல்லும் பக்குவம் பாங்காக விளக்கப்பட்ட பாடங்கள். முழுமையாக ஜோதிடத்தை அறிந்து கொள்ள அரிதான வாய்ப்பு இது.

இதனை முழுமையாக கற்றுத்தேறி மற்றவர் வாழ்விலும் நலம் சேர்ப்போர் நிச்சயமாக மதுபானம் செய்வது, புகை பிடிப்பது, புகையிலை, பொடி போடும் தீய பழக்கமற்றவராக இருப்பின் நிச்சயமாக இக்கலை வழியாக எவரது வாழ்வையும் எள்ளளவும் பிசகின்றி கூறிவிடும் கடவுள் அருள் பெறுவார்.

எனவே இத்தீய பழக்கமற்ற நல்லியல்புடையோர் **14-03-2003** தேதி மாலைக்குள் ஜாதக நகலுடன் அரிய ஜோதிடக்கலையை கற்றுத்தேற விரும்புகின்றேன் என்று எழுதி அனுப்பிடுங்கள். கிடைத்தவுடன் உரிய விபர படிவம் அனுப்புகின்றோம். கொடுத்த தேதிக்குள் மனுச்செய்க. எமது ஆசிகள்.




பிரபல ஜோதிடர், ஜோதிட ஆசிரியர்

**ஸ்ரீமத் ஜெயவீர தேவா**, யோகி

இராஜயோக பயிற்சியாளர்

பிளாட்எண்:204, அண்ணாநகர் மதுரை- 625 020 தமிழ்நாடு

(0452) 2533412 2650576

# சிவகாமியின் சபதம்

## முப்பத்து ஒன்பதாம் அத்தியாயம்

## சகோதரர்கள்

புலிகேசியும் புத்த பிக்ஷுவும் ஒரே மனிதர்தான் என்று சிவகாமி எண்ணிக் கொண்டதில் வியப்பு ஒன்றுமில்லை. சற்று முன்னால், புலிகேசிச் சக்கரவர்த்தியே மேற்படி உருவ ஒற்றுமை காரணமாகத் திகைக்கும்படி நேர்ந்தது.

வாதாபிச் சக்கரவர்த்தி தம்முடைய கூடாரத்தில் தன்னந் தனியாக உட்கார்ந்திருந்தார். அவருடைய மனத்தில் பெருஞ் சோர்வு குடி கொண்டிருந்தது. வாதாபியிலிருந்து அவர் புறப்பட்ட போது என்னென்ன உத்தேசங்களுடன் கிளம்பினாரோ அவை ஒன்றும் நிறைவேறவில்லை. எல்லாம் மகேந்திர ஜால பல்லவனுடைய தந்திரங்களினால் உருப்படாமற்போயின.

மகேந்திர பல்லவனுடைய தந்திரங்களுக்கு மாற்றுத் தந்திரங்கள் செய்து அவனைத் தோற்கடிக்கக்கூடிய சாமர்த்தியம் வாய்ந்தவரான நாகநந்தி பிக்ஷுவைப் பற்றித் தகவலே கிடைக்கவில்லை.

இதனாலெல்லாம் புலிகேசி பெரிதும் உற்சாகம் குன்றியிருந்தார். அவருக்கிருந்த ஒரே ஓர் ஆறுதல் தளபதி சசாங்கன் மூலம் மகேந்திர பல்லவனுக்கு ஒரு பாடம் கற்பிக்க ஏற்பாடு செய்துவிட்டு வந்ததுதான். ஆ! பல்லவ நரி தன்னுடைய பொந்தை விட்டு வெளியே வந்து பார்க்கும்போது, வாதாபிப் புலிகேசியை வஞ்சித்து ஏமாற்றுவது எவ்வளவு பிசகான காரியம் என்பதைக் கொஞ்சம் தெரிந்து கொள்வானல்லவா?

தளபதி சசாங்கன் தம்முடன் வந்து சேர்வதற்காகவே சக்கரவர்த்தி வடபெண்ணையின் வடகரையில் காத்துக் கொண்டிருந்தார். கட்டளையை நிறைவேற்றிவிட்டு வந்து சேரச் சசாங்கனுக்கு ஏன் இத்தனை நாள் பிடிக்கிறது என்று

**அமரர் கல்கி**

அவருக்குக் கோபம் வந்து கொண்டிருந்தது. அந்தச் சமயத்தில் தெற்கேயிருந்து படை வருகிறது என்று கேட்டதும் சசாங்கன்தான் வருகிறான் என்று எண்ணி, அவன் கொண்டு வரும் செய்தியைக் கேட்பதற்காக மிக்க ஆவலுடன் இருந்தார். கூடாரத்துக்கு வெளியே குதிரை ஒன்று வந்து நின்றதும், சசாங்கன் இவ்வளவு தாமதமாய் வருவதற்கு அவன் மேல் எரிந்து விழுவதற்கு ஆயத்தமானார்.

ஆனால், உள்ளே பிரவேசித்து வந்தது சசாங்கன் அல்ல. கிரீடமும், வாகுவலயமும், சக்கரவர்த்திக்குரிய மற்ற ஆபரணங்களும் தரித்த நெடிதுயர்ந்த கம்பீர உருவம் ஒன்று வந்தது.

அதைப் பார்த்ததும் புலிகேசிக்கு ஏற்பட்ட திகைப்புக்கும் குழப்பத்துக்கும் எல்லையேயில்லை. 'இது என்ன? எனக்குச் சித்தப் பிரமை பிடித்துவிட்டதா? அல்லது மாயக் கனவு காண்கிறேனா? பின், ஆசனத்தில் இதோ சாய்ந்து உட்கார்ந்திருக்கும் நானே கூடாரத்துக்கு வெளியிலிருந்து எப்படி உள்ளே வர முடியும்?' என்று திகைத்தார்.

புலிகேசியின் குழப்பத்தைப் பார்த்து விட்டு வெளியிலிருந்து வந்த உருவம் புன்னகை புரிந்து, "தம்பி! ஏன் இப்படிப் பயப்படுகிறாய்? நான் என்ன பேயா, பிசாசா, பூதமா? உனக்கு என்னைத் தெரியவில்லையா?" என்று சொல்லிக் கொண்டே தலைக் கிரீடத்தை எடுத்ததும், பிக்ஷுவின் மொட்டைத் தலை காணப்பட்டது. உடனே புலிகேசி குதூகலத்துடன் துள்ளி எழுந்து, "அண்ணா நீயா?" என்று கட்டிக் கொள்ளப் போனவர், மறுபடியும் திகைத்து நின்று, "ஆஹா! இது என்ன வேஷம்? உன்னுடைய வாக்குறுதி...?" என்று வினவினார். அப்போது புலிகேசியின் கண்களின் ஓரங்களில் பொறாமையுடன் கூடிய குரோத ரேகை தென்பட்டது.

"தம்பி! அதற்குள்ளே அவசரமா? ஒரு சந்தர்ப்பத்தில் இந்த வேஷம் உன்னுடைய உயிரைக் காப்பாற்றுவதற்குப் பயன்பட்டதல்லவா? இப்போது என்னுடைய உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்கு இது பயன்பட்டது. என் வாக்குறுதிக்கு ஒரு பங்கமும் நேரவில்லை. உன்னுடைய ராஜ்யத்தில் நான் இந்த வேஷம் போட்டுக் கொள்வதில்லையென்றுதானே வாக்குறுதி கொடுத்தேன்? இன்னும் உன்னுடைய சாம்ராஜ்யத்துக்குள் நாம் வந்து விடவில்லையே?" என்று நாகநந்தி சொன்னதும் புலிகேசி கொதிப்புடன் கூறினார்:

"ஆம்; ஆனால் இந்தப் பிரதேசம் இன்று நம்முடைய சாம்ராஜ்யத்துக்குள் வராதிருப்பது ஏன்? பல்லவ நாட்டில் இன்று வராகக் கொடி பறக்காதது ஏன்? அற்பத்திலும் அற்பமான மகேந்திர பல்லவனுடைய சைனியத்துக்கு முன்னால் வாதாபியின் மகா சைனியம் தோல்வியடைந்து திரும்பிப் போவது ஏன்? எல்லாம் உன்னால் வந்ததுதான்!"

"தம்பி! தோல்வி என்கிற வார்த்தையையே சொல்லாதே! யார் தோல்வியடைந்தது? வாதாபி சைனியம் தோல்வியடையவில்லை. நீயும் தோல்வியடையவில்லை. அந்தத் தோல்வி என்னால் நேரவும் இல்லை. எல்லாம் சாவகாசமாகப் பேசுவோம். முதலில் உடனே காவி வஸ்திரம் இரண்டு தருவித்துக் கொடு. நான் இந்த வேஷத்தில் இருந்தால் வீண் குழப்பத்துக்கு இடமாகும். ஏற்கெனவே, நான் வந்து கொண்டிருந்தபோது வெளியில் நிற்கும் வீரர்கள் என்னை வெறித்து வெறித்துப் பார்த்தார்கள்!"

"ஆமாம்; அவர்கள் வெறித்துப் பார்ப்பதற்குக் காரணம் இருக்கிறதல்லவா? கூடாரத்திற்குள் இருந்த சக்கரவர்த்தி வெளியில் எப்போது, எப்படிப் போனார் என்று அவர்களுக்குத் திகைப்பாயிருந்திராதா? எனக்கே கொஞ்ச நேரம் குழப்பமாய்ப் போய்விட்டதே!" என்று புலிகேசி கூறிவிட்டு கூடாரத்தின் வாசலில் நின்ற காவலனிடம், "உடனே ஒற்றர் விடுதிக்குச் சென்று காவி வஸ்திரம் இரண்டு கொண்டு வா!" என்று கட்டளையிட்டார்.

காவி வஸ்திரம் வந்தவுடனே நாகநந்தி உடையை மாற்றிக்



கொண்டார். சகோதரர்கள் இருவரும் ஒரே ஆசனத்தில் அருகருகே உட்கார்ந்தார்கள்.

"தம்பி! இப்போது சொல்லு! நீ வாதாபியை விட்டுப் புறப்பட்டதிலிருந்து நடந்ததையெல்லாம் விவரமாகச் சொல்லு!" என்று நாகநந்தி கேட்க, அவ்விதமே புலிகேசி கூறி வந்தார்.

எல்லாவற்றையும் கவனமாகக் கேட்ட பிறகு, பிக்ஷு கூறினார்: "ஆகா! மகேந்திர பல்லவன் நான் நினைத்ததைக் காட்டிலும் கெட்டிக்காரன். நெடுகிலும் நம்மை ஏமாற்றி வந்திருக்கிறான்!"

"அண்ணா! இராஜ்ய தந்திரத்தில் உன்னை வெல்லக் கூடியவன் இந்த உலகில் எவனுமே இல்லையென்று நினைத்திருந்தேன்."

"ஆரம்பத்தில் நான் ஒரே ஒரு தவறு செய்தேன். அதன் பலன் நெடுகிலும் விபரீதமாகவே போய்விட்டது!"

"அடிகளே! அது என்ன தவறு?"

"பரஞ்சோதி என்னும் பிள்ளையின் முகத்தைப் பார்த்து என் மனம் சிறிது இளகிற்று."

"அந்தத் திருட்டுப் பயலை நம்பி ஓலை கொடுத்து அனுப்பினாய்!"

"அதற்குக் காரணமானவன் நீதான், தம்பி!"

"நானா? அது எப்படி?"

"பாண்டிய நாட்டுக்குப் போய் அங்கே வேண்டிய ஏற்பாடுகள் செய்து விட்டுக் காஞ்சிக்குத் திரும்பி வந்து கொண்டிருந்தேன். வழியில் ஏரிக் கரையில் ஒரு பிள்ளை சோர்ந்து படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தான். உன்னை நான் முதன்முதலில் அதே நிலையில் பார்த்தது ஞாபகம் வந்தது. அதனால் என் மனம் இளகி அந்தப் பிள்ளையின் பேரிலும் விசுவாசம் உண்டாயிற்று. அவனுடைய முகக் களையிலிருந்து பெரிய பதவிக்கு வரப் போகிறவன் என்று தெரிந்து கொண்டேன். ஆகையால், அவனை நம்மோடு சேர்த்துக் கொள்ள வேண்டும் என்ற சபலமும் உண்டாயிற்று. அவனிடம் உனக்கு ஓலை கொடுத்து அனுப்பினேன். அந்த ஓலை உன்னிடம் சேர்ந்து நீ நேரே வந்திருந்தாயானால், காஞ்சிக் கோட்டையை மூன்றே நாளில் கைப்பற்றியிருக்கலாம். மகேந்திர பல்லவன் உன்னுடைய காலடியில் விழுந்து கிடப்பான்."

"ஆனால், உன்னுடைய ஓலைக்கு மாறாக மகேந்திர பல்லவன் எழுதி வைத்த ஓலை என்னிடம் கிடைத்தது. அதன் பயனாக வட பெண்ணைக் கரையில் எட்டு மாதம் வீணாக்க நேர்ந்தது. மகேந்திர பல்லவன் ஒரு சிறு குதிரைப் படையை வைத்துக் கொண்டு, யுத்தம் செய்யாமல் வெறும் பாய்ச்சல் காட்டியே ஏமாற்றிக் கொண்டிருந்தான். அதற்குப் பிறகு நான் காஞ்சிக்கு வந்து கோட்டையை முற்றுகையிட்டும் பயன்படவில்லை. அண்ணா! நான் வாதாபிச் சிம்மாசனத்தில் ஏறிய பிறகு முதன் முதலாக அடைந்த தோல்வி இதுதான்."

"அப்பனே! அந்த வார்த்தையை மட்டும் சொல்லாதே! தோல்வி எது? யார் 'தோல்வி' அடைந்தது? இராஜரீக சாஸ்திரத்தில் முதலாவது பாடம் என்னவென்பதை இன்னமும் நீ தெரிந்து கொள்ளவில்லையா? தோல்வியடைந்து விட்டதாக ஒரு நாளும் ஒப்புக் கொள்ளக் கூடாதென்பதுதான் அந்தப் பாடம். நீயே தோல்வியடைந்ததாகச் சொல்லிக் கொண்டால் ஊரார் அப்படிச் சொல்வார்கள்; உன் விரோதிகளும் அவ்விதமே சொல்வார்கள்; தேசமெங்கும் 'புலிகேசிச் சக்கரவர்த்தி தோல்வியடைந்தார்!' என்று செய்தி பரவும். ஹர்ஷவர்த்தனன் காதிலும் அது எட்டும். மகேந்திர பல்லவன் பொய்யாக எழுதியபடி ஒருவேளை உண்மையில் நடந்தாலும் நடக்கலாம். நர்மதையைக் கடந்து ஹர்ஷனுடைய சைனியம் உன் இராஜ்யத்துக்குள் பிரவேசிக்கலாம். தோல்வி என்ற வார்த்தையை இனிமேல் சொல்லாதே, தம்பி!"

"நான் சொல்லாமலிருந்து விட்டால், தோல்வி வெற்றியாகி விடுமா, அண்ணா?"

"மறுபடியும் தோல்வியைக் கட்டிக் கொண்டு ஏன் அழுகிறாய்? என்ன தோல்வியை நீ அடைந்தாய்? யோசித்



துப் பார்! கடல் போன்ற சைனியத்துடன் திக்விஜயம் செய்யத் தென்னாட்டை நோக்கிப் புறப்பட்டாய், வைஜயந்தியை அழித்தாய். வடபெண்ணைக் கரையில் பல்லவ சைனியத்தை நிர்மூலம் செய்தாய், காஞ்சிக் கோட்டையை முற்றுகையிட்டாய், தெற்கே கொள்ளிடக் கரை வரையில் சென்றாய். பல்லவன் சிறைப்படுத்தியிருந்த துர்விநீதனை விடுதலை செய்தாய். காவேரிக் கரையில் தமிழகத்தின் மூவேந்தர்கள் - சேர, சோழ, பாண்டியன் - வந்து உன் அடி பணிந்து காணிக்கை செலுத்தினார்கள்."

"அண்ணா! சோழன் வரவில்லையே?"

"சோழன் வராவிட்டால் களப்பாளன் வந்தான். இதையெல்லாம் யார் விசாரிக்கப் போகிறார்கள், தம்பி? நீ திரும்பிக் காஞ்சிக் கோட்டைக்கு வந்தபோது, மகேந்திர பல்லவனும் உன்னைச் சரணாகதி அடைந்தான். மகாபலியின் தலையில் மகாவிஷ்ணு பாதத்தை வைத்தது போல், நீயும் மகேந்திர பல்லவனுடைய சிரசில் உன் பாதத்தை வைத்து, 'பிழைத்துப் போ' என்று உயிர்ப்பிச்சை கொடுத்தாய். அவன் கொடுத்த காணிக்கைகளைப் பெற்றுக் கொண்டு புறப்பட்டாய்..!"

"காணிக்கை ஒன்றும் நான் கொண்டு வரவில்லையே, அண்ணா!"

"நீ கொண்டு வராவிட்டால், நான் கொண்டு வந்திருக்கிறேன்."

"என்ன அது?"

"இன்று இரவு காட்டுகிறேன். மேற்படி விவரம் எல்லாம் உத்தர பாரத தேசத்திலே பரவும்போது, நீ திக்கு விஜயம் செய்து வெற்றி முழக்கத்துடன் திரும்பினாய் என்று சொல்வார்களா? 'தோல்வி'யுற்று ஓடி வந்தாய் என்பார்களா?"

"அண்ணா! உன் சாமர்த்தியமே சாமர்த்தியம்! தோல்வியைக் கூட நீ வெற்றியாக மாற்றக் கூடியவன். உன் பேச்சைக் கேட்ட பிறகு எனக்கே நான் அடைந்தது வெற்றி என்றே தோன்றுகிறது. ஆனால், இந்த வெற்றிச் செய்தி வடநாட்டிலே எப்படிப் பரவும்?"

"ஆ! புத்த பிக்ஷுக்களின் சங்கங்களும் சமணர்களின் மடங்களும் பின் எதற்காக இருக்கின்றன. நாகார்ஜுன பர்வதத்துக்கு உடனே ஆள் அனுப்ப வேண்டும்."

"அண்ணா! நீயே போவது நல்லது; உனக்கு வேங்கியிலும் வேலை இருக்கிறது."

"என்ன வேலை?"

"விஷ்ணுவர்த்தனன் காயம்பட்டுக் கிடக்கிறான். சென்ற வருஷம் அவன் வெற்றி கொண்ட வேங்கி இராஜ்யத்தில் இப்போது எங்கே பார்த்தாலும் கலகமாம்."

"அதற்கு நான் போய் என்ன செய்யட்டும்?"

"நீ போய்த்தான் அவனுக்கு யோசனை சொல்லி உதவ வேண்டும். உன்னால் முடியாத காரியம் ஒன்றுமில்லை. அண்ணா! தோல்வியையும் நீ வெற்றியாக்கி விடுவாய்."

"என்னால் இப்போது வேங்கிக்குப் போக முடியாது."

"ஏன்?"

"காரணம் இருக்கிறது."

"அதைச் சொல்லேன்."

"இராத்திரி சொல்கிறேன், தம்பி! சூரியன் அஸ்தமித்து நாற்புறமும் இருள் சூழ்ந்துவிட்டது. பூரண சந்திரன் உதயமாகப் போகிறது. இந்தக் கூடாரத்திற்குள்ளேயே அடைந்து கிடப்பானேன்? வா வெளியே போகலாம்!"

"ஆமாம், ஆமாம்! பிரகிருதியின் சௌந்தரியங்கள் அநியாயமாய் வீணாய்ப் போகின்றன!" என்று பரிகாசக் குரலில் சொல்லிக் கொண்டு புலிகேசிச் சக்கரவர்த்தி எழுந்தார்.

"உனக்கு எவ்வளவோ பாக்கியங்கள் இருந்தாலும் என்ன பயன்? சௌந்தர்யத்தை அநுபவிக்கும் பாக்கியம் மட்டும் இல்லை" என்று சொல்லிக் கொண்டு நாகநந்தி எழுந்தார்.

சகோதரர்கள் இருவரும் ஒத்த வயதுடைய ஆத்ம சிநேகிதர்களைப் போலக் கைகோத்துக் கொண்டு வெளியே சென்றார்கள்.

## நாற்பதாம் அத்தியாயம்

# அஜந்தா அடிவாரம்

'சூரியன் மறைந்தால் என்ன? அதோடு உலகம் அஸ்தமித்துப் போய்விடுமா? இதோ நான் ஒருவன் இருக்கிறேனே' என்று பறையறைந்து கொண்டு கீழ்த்திசையில் பூரண சந்திரன் உதயமானான்.

நெடிதுயர்ந்த இரண்டு பனைமரங்களுக்கு நடுவே தங்க ஒளி பெற்றுத் திகழ்ந்த சந்திர பிம்பமானது, மரச் சட்டமிட்ட பலகணியின் வழியாக எட்டிப் பார்க்கும் நவயௌவன நாரீமணியின் பொன் முகத்தையொத்து இன்ப வடிவமாய் விளங்கியது. புத்த பிக்ஷுவுக்கு அந்த முகம் சிவகாமியின் முகமாகவே காட்சியளித்தது.

நாகநந்தியும் புலிகேசியும் கூடாரத்துக்கு வெளியே வந்து ஒரு மொட்டைப் பாறையின் மீது உட்கார்ந்தார்கள்.

"அண்ணா! என்ன யோசிக்கிறாய்?" என்று புலிகேசி கேட்டார்.

"தம்பி! இன்றைக்கு நான் கூடாரத்துக்குள்ளே வந்தபோது உன்னைப் போல் உடை தரித்துக் கொண்டு வந்தேனல்லவா? இதே மாதிரி முன்னொரு தடவை உன்னைப் போல் வேஷம் தரித்துக் கொண்டேனே, உனக்கு ஞாபகம் இருக்கிறதா?"

"அதை எப்படி மறக்க முடியும், அண்ணா? ஒருநாளும் முடியாது."

"இல்லை, இருபத்தைந்து வருஷம் ஆகி விட்டதே; ஒருவேளை மறந்து விட்டாயோ என்று நினைத்தேன்."

"இருபத்தைந்து வருஷம் ஆனால் என்ன? இருபத்தைந்து யுகம் ஆனால் என்ன? இந்தப் பிறவியில் மட்டுமல்ல, எத்தனை பிறவி எடுத்தாலும் மறக்க முடியாது, அண்ணா!"

"முதன் முதலில் நாம் சந்தித்தது நினைவிருக்கிறதா, தம்பி!"

"ஏன் நினைவில்லை? சித்தப்பன் மங்களேசனுடைய கடுஞ்சிறையிலிருந்து தப்பி ஓடி வந்தேன். அந்தப் பாதகனுடைய வீரர்களுக்குத் தப்பி ஒளிந்து, காட்டிலும் மலையிலும் எத்தனையோ நாள் திரிந்தேன். ஓடி ஓடிக் கால்கள் அலுத்து விட்டன. உடம்பும் சலித்துவிட்டது. பசியும் தாகமும் எவ்வளவு கொடுமையானவை என்பதை உணர்ந்தேன். கடைசியில் ஒருநாள் களைப்படைந்து மூர்ச்சையாகி விட்டேன். மூர்ச்சை தெளிந்து எழுந்தபோது என்னை நீ மடியில் போட்டுக் கொண்டு, என் வாயில் ஏதோ பச்சிலைச் சாற்றைப் பிழிந்து கொண்டிருந்தாய். நீ மட்டும் அச்சமயம் தெய்வாதீனமாய் அங்கு வந்திராவிட்டால் என் கதி என்ன ஆகியிருக்கும்? அண்ணா! அவ்வளவு சிரமம் எடுத்து என்னைக் காப்பாற்ற வேண்டும் என்று உனக்கு எதனால் தோன்றிற்று?"

"எனக்கு வினாத் தெரிந்த நாள்முதல் நான் அஜந்தா மலைக் குகையில் புத்த பிக்ஷுக்களுடன் வாழ்ந்து கொண்டு வந்தேன். சித்திரக் கலை, சிற்பக் கலை முதலியவை தெரிந்து கொண்டிருந்தேன். ஆயினும் அடிக்கடி என் மனம் அமைதியிழந்து தவித்தது. வெளி உலகத்துக்குப் போக வேண்டுமென்றும் என்னையொத்த வாலிபர்களுடன் பழக வேண்டுமென்றும் ஆசை உண்டாகும். சில சமயம் பெரிய பிக்ஷுக்களுக்குத் தெரியாமல் நதி வழியைப் பிடித்துக்கொண்டு மலைக்கு வெளியே வருவேன். ஆனால், அங்கும் ஒரே காடாக இருக்குமே தவிர மனிதர்கள் யாரையும் பார்க்க முடியாது. இப்படி நான் ஏக்கம் பிடித்திருக்கையிலேதான் ஒரு நாள் அஜந்தாவின் அடிவாரத்தில் உள்ள காட்டிலே நீ நினைவிழந்து படுத்துக் கிடப்பதைக் கண்டேன். அந்த நிமிஷத்தில் இருபது வருஷமாக என் உள்ளத்தில் பொங்கிக் கொண்டிருந்த அவ்வளவு ஆசையையும் உன் பேரில் செலுத்தினேன். அந்த வயதில் நாடு நகரங்களில் உள்ள வாலிபர்கள் தங்களுடைய இளங் காதலிகளிடம் எத்தகைய அன்பு வைப்பார்களோ, அத்தகைய அன்பை உன்னிடம் கொண்டேன். பச்சிலையைச் சாறு பிழிந்து உன் வாயிலே விட்டு மூர்ச்சை தெளிவித்தேன்."





"அண்ணா! உன்னை முதன் முதலில் பார்த்ததும் எனக்கும் அம்மாதிரியே உன் பேரில் அபிமானம் உண்டாயிற்று. தம்பி விஷ்ணுவர்த்தனின் பேரில் எனக்கு எவ்வளவோ ஆசைதான். ஆனாலும், அதைக் காட்டிலும் எத்தனையோ மடங்கு அதிகமான பாசம் உன் பேரில் ஏற்பட்டது..."

"உன்னைக் கண்டு பிடித்த அன்றைக்கு நான் அஜந்தா குகைக்குத் திரும்பிப் போகவில்லை. அடுத்த இரண்டு மூன்று நாளும் போகவில்லை. புதுமணம் புரிந்த காதலர்கள் இணைபிரியாமல் நந்தவனத்தில் உலாவுவதுபோல் நாம் இருவரும் கை கோத்துக்

## அருள்வாக்கு!

மனம் இருக்கும் வரை ஆசைகள் இருக்கத்தான் செய்யும். அதனால் மனத்தை அடக்கி விட வேண்டும். மனம் அடங்கி விட்டால் மரண நிலையில் இருப்பது போல ஒரு சக்தியுமின்றி, ஜடம் மாதிரி ஆவோம் என்று எண்ணக்கூடாது. மாறாக இதுதான் சகல சக்திகளுக்கும் ஆதாரமான நிலை. சாதாரணமாக ஏதாவது ஓர் அங்கத்தில் ஊனம் உள்ளவர்களுக்கு இன்னோர் அங்கத்தில் அதிக தீக்ஷண்யம் இருக்கும். பல வாய்க்கால்களில் ஒன்றில் ஜலத்தை அடைத்துத் திருப்பினால், இன்னொன்றில் அதிகம் நீர் பெருகுவது போல், ஓர் அங்கத்தில் ஊனம் இருப்பதே இன்னொன்றில் தீக்ஷண்யத்தைத் தருகிறது. ஆத்ம சக்தியைப் பலவாறாகச் சிதறச் செய்யும் எல்லா இந்திரியங்களையும் அடைத்துக் கொண்டு விட்டால், அப்போது சகல சக்திகளும் ஒரே இடத்தில் அமைதியாக, ஆனந்தமாகக் கூடி நிற்கும். மிகுந்த சக்தியுடன் உலகுக்கு நல்லது செய்யலாம்.



**- ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராச்சார்ய சுவாமிகள்**

கொண்டு காட்டிலே திரிந்தோம். நீ உன்னுடைய வரலாற்றையெல்லாம் எனக்கு விவரமாகச் சொன்னாய். நாம் இருவரும் அப்போதே மங்களேசனைத் துரத்தியடித்து வாதாபி இராஜ்யத்தைத் திரும்பக் கைப்பற்றும் மார்க்கங்களைப் பற்றி ஆலோசிக்கலானோம்."

"இதற்குள் மங்களேசனுடைய ஆட்கள் என்னைத் தேடிக் கொண்டு அங்கே வந்து விட்டார்கள்."

"தூரத்தில் ஆட்கள் வரும் சத்தம் கேட்டதும் நீ பயந்தாய். 'அண்ணா! என்னைக் கைவிடாதே!' என்று கட்டிக் கொண்டாய். ஒரு நிமிஷம் நான் யோசனை செய்து ஒரு முடிவுக்கு வந்தேன். 'தம்பி! நான் சொல்கிறபடி செய்வாயா?' என்று கேட்டு உன்னிடம் வாக்குறுதியொன்று வாங்கிக் கொண்டேன். பிறகு உன்னுடைய உடைகளை எடுத்து நான் தரித்துக் கொண்டேன். என்னுடைய ஆடையை நீ உடுத்திக் கொண்டாய். அதே சமயத்தில் அஜந்தா மலைக் குகைக்குள் புத்த சங்கிராமத்துக்குப் போகும் வழியை உனக்கு நான் சொன்னேன். அங்கே நடந்து கொள்ள வேண்டிய விதத்தையும் சொன்னேன். சற்றுத் தூரத்தில் இருந்த அடர்ந்த கிளைகள் உள்ள மரத்தின் மேல் ஏறி ஒளிந்து கொள்ளச் சொன்னேன்."

"மரத்தின் மேல் ஏறி நான் ஒளிந்து கொண்டதுதான் தாமதம். மங்களேசனுடைய ஆட்கள் யம கிங்கரர்களைப் போல் வந்து விட்டார்கள். அவர்களுடைய தலைவன் உன்னைச் சுட்டிக் காட்டி, 'பிடித்துக் கட்டுங்கள் இவனை!' என்று கட்டளையிட்டான். என் நெஞ்சு துடியாகத் துடித்தது. 'எப்பேர்ப்பட்ட அபாயத்திலிருந்து தப்பினோம்' என்று எண்ணினேன். உன்னிடம் அளவற்ற நன்றி உணர்ச்சி உண்டாயிற்று."


"தம்பி! நம்முடைய உருவ ஒற்றுமையை நான் அதற்கு முன்னமே தெரிந்து கொண்டிருந்தேன். நதியிலும் சுனையிலும் நாம் குளித்துக் கரையேறும்போது, தண்ணீரில் தெரிந்த நமது பிரதிபிம்பங்களைப் பார்த்து அறிந்து கொண்டிருந்தேன். அப்படித் தெரிந்து கொண்டிருந்தது அச்சமயம் உன்னைக் காப்பாற்றுவதற்கு ஏதுவாயிற்று."

"அண்ணா! அந்தச் சம்பவமெல்லாம் எனக்கு ஞாபகம் இருக்கிறதா என்று கேட்டாயே! முன்பின் அறிந்திராத எனக்காக நீ உன் உயிரைக் கொடுக்கத் துணிந்ததை என்னால் எப்படி மறக்க முடியும்?" என்று குரல் தழுதழுக்க உருக்கத்துடன் புலிகேசிச் சக்கரவர்த்தி கூறியபோது, அவருடைய கண்களிலே கண்ணீர் துளித்தது. 'ஆ! இதென்ன? நெஞ்சில் ஈரப் பசையற்ற கிராதகப் புலிகேசியின் கண்களிலும் கண்ணீரா? இது உண்மைதானா?' என்று பரிசோதித்துத் தெரிந்து கொள்வதற்காகப் பூரண சந்திரன் தனது வெள்ளிக் கிரணங்கள் இரண்டை ஏவ, அது காரணமாகப் புலிகேசியின் கண்ணில் எழுந்த நீர்த் துளிகள் ஆழ்கடல் தந்த நன்முத்துக்களைப் போல் சுடர் விட்டுப் பிரகாசித்தன.

(தொடரும்)



# இரத்த அழுத்தம், கொலஸ்ட்ரால், மாரடைப்பு, இருதய வால்வு குபைாடு, இருதய ஓட்டைகள் போன்றன வராமல் தடுக்க - தெய்வீக மூலிகை மருத்துவம்!



இதயம் என்பது பிறப்பிலிருந்து இறப்பு வரை இடைவிடாது மற்ற உறுப்புகளுக்கு இரத்தத்தை பாய்ச்சும் ஒருபம்ப் (PUMP) ஆகும். இதயம் வேலை செய்வதற்கு, அதற்கும் இரத்தம் தேவைப்படுகிறது. இவ்வாறான இதயத்தில் நம்முடைய தவறான வாழ்க்கை முறையால் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை இதய வால்வுகள், ASD, VSD என்று சொல்லக்கூடிய இதய அறைகளில் ஓட்டைகள், இரத்தக் குழாய்களில் அடைப்பு போன்ற குறைபாடுகளால் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். இவ்வாறான நோய்கள் ஏன் ஏற்படுகின்றன என்பது பற்றி நாம் தெரிந்துக் கொண்டு, அதற்குத் தகுந்தாற்போல், எவ்வித பின் விளைவுகளும் இல்லாத தெய்வீக மூலிகை மருந்துகள், இயற்கை உணவுகள், வாழ்க்கை சீரமைப்பு மூலம் குணம் பெறலாம்.


**இதய நோய்க்கான காரணங்கள் :** கர்ப்ப காலத்தில் தாய் உட்கொள்ளும் வீரிய மிக்க இரசாயன மருந்துகள், சத்தியான உணவுகள் கிடைக்காமை, அடிக்கடி நோய் வாய்ப்படுதல், X-RAY எடுத்தல் போன்ற காரணங்களால், குழந்தைகளுக்கான - பிறவி குறைபாடுகளும், புகைத்தல், மது வகைகள், B.P., SUGAR போன்றவற்றால் இதய தசைகளில் கோளாறுகளும், அதிக எடை, தொப்பை, TENSION & STRESS உள்ளவர்கள், வாழ்க்கையில் நிதானம் அற்றவர்கள், சோம்பேறிகள், அதிகம் கோபப்படுபவர்கள், கொழுப்பு சத்துள்ள உணவுகள் உட்கொள்பவர்களுக்கு மற்றும் LIPOPROTEIN 'A' என்கின்ற கொழுப்புச்சத்து ஜீன்களினால் மாரடைப்பும், எதிர்ப்பு சக்தி இல்லாத காரணத்தாலும், சத்தியான உணவுகள் கிடைக்காததாலும் ஸ்ட்ரெப்டோகாக்கஸ் என்னும் கிருமிகளால் இதய வால்வுகளும் - பாதிக்கப்படுகின்றன.

**இதய நோய்க்கான அறிகுறிகள் :** நெஞ்சுவலி, மூச்சிரைப்பு, படபடப்பு, வியர்த்தல் போன்றவை இதய நோயின் பொதுவான அறிகுறிகள் என்றாலும், அவை பாதிப்புக்குள்ளான பகுதியை பொறுத்து அதன் அறிகுறிகள் தெரிய ஆரம்பிக்கும். மூச்சுத் திணறல், உடலெல்லாம் நீல் நிறமாக மாறுதல் போன்றவை பிறவி குறைபாடுகளிலும், மூட்டுக்களில் வீக்கம், மூட்டுவலி, கை, கால் வலி, காய்ச்சல், வறட்டு இருமல் போன்ற அறிகுறிகள் இதய வால்வுகள் பாதிக்கப்படும் போதும், மார்பு பகுதியில் எரிச்சல், நெஞ்சுவலி, வியர்த்தல், நெஞ்சு படப்படப்பு, இடது தோள்பட்டையில் வலி, மூச்சுத் திணறல், உடல் சோர்வு, திடீர் மயக்கம், நாடி துடிப்பு மற்றும் இரத்த அழுத்தம் குறைதல் போன்ற அறிகுறிகள் மாரடைப்பு ஏற்படும்போது காணப்படும்.

**இதய நோயாளிகளுக்கான தெய்வீக மூலிகைகள் :** வேப்பிலை, வில்வம், துளசி, அத்தியிலை, அருகம்புல், வெந்தயம், நெல்லிக்காய், கடுக்காய், ஆவாரம்பூ, தூதுவளை, தும்பை, செம்பருத்தி, தாமரை, மருதம்பட்டை போன்றவைகள் பொடி செய்து பின் சம அளவில் ஒன்றாக கலந்து ஒரு பாட்டலில் வைத்துக் கொள்ளவும். பின் இதில் இருந்து ஒரு ஸ்பூன்தூள் எடுத்து ஒரு டம்ளர் தண்ணீரில் கலந்து உணவுக்கு ஒரு மணி நேரம் முன்பாக தினம் காலை, பகல், இரவு ஆகிய மூன்று வேளையும் சுமார் மூன்று மாதம் முதல், ஆறு மாதம் வரை உட்கொள்ளவும். இந்த மூலிகைகளில் உள்ள சக்திகள் இதயம் நன்றாக சுருங்கி விரியவும், இதயத்தை தொற்று நோய்களில் இருந்து காப்பாற்றவும் உதவுகின்றன.

**இதய நோயாளிகள் பின்பற்ற வேண்டிய உணவு முறைகள் :** இந்நோயாளிகள் தினம் காலை அல்லது இரவு ஒரு வேளை பச்சையாக உட்கொள்ளும் பழங்கள், காய்கறிகள் தேவையான அளவு பழ ஜூஸ்கள், Vegetables Salads, Fruit Salads போன்றவைாக உட்கொள்ள வேண்டும். மற்ற இரண்டு நேரம் வழக்கமான சமைத்த சைவ உணவுகளை மட்டும் உட்கொள்ள வேண்டும். சமைத்த உணவுகளிலும் வறுத்த, பொறித்த உணவுகளையும் ஊறுகாய், அப்பளம், வனஸ்பதி, நெய், Icecream, சாக்லேட், தயிர் போன்றவைகள் தவிர்க்க வேண்டும். சமைத்த உணவுகளையும், சமைக்காத உணவுகளையும் சேர்த்துண்ணக் கூடாது. இவைகளை 2 அல்லது 3 மணி நேர இடைவெளிகளில்தான் உட்கொள்ள வேண்டும்.

**உடற்பயிற்சிகள் :** இந்நோயாளிகள் தினம் காலை மாலை 20 நிமிடம் இயன்ற வரை எளிய உடற்பயிற்சிகள் செய்தல் வேண்டும். நடத்தல், கை கால் விரல்களை நீட்டி மடக்குதல், குனிந்து நிமிர்தல், உட்கார்ந்து எழுதல், முடிந்தால் சைக்கிள் ஓட்டுதல், மூச்சுப் பயிற்சிகள் போன்றன செய்தல் வேண்டும்.



*தெய்வீக மூலிகை வைத்தியர்கள்* **Chennai Cell : 98410 45138 Vellore Cell : 98423 69696**

தலைமை முகவரி : Dr.M.குருபரன் & Dr.M.சபாபதி, Dr.M.சிவசக்தி, S/o Dr.C.K.மாணிக்கவாசகம்

P.B.No:30, No.3, திருநாத முதலி நகர், (காலேஜ் எதிரில்), திருப்பத்தூர் (N.A.A.)-635 601 ✆ 04179-220469, 222769

சென்னை கிளை : 115, புரசைவாக்கம் நெடுஞ்சாலை, (பிரின்ஸ் மேனர் பக்கத்தில்) கெல்லீஸ், சென்னை - 10

**இரு முகவரிகளிலும் ஆலோசனை நேரம் தினமும் காலை 10 to 1, மாலை 5 to 7** ✆ 26424285, 26427638

**குறிப்பு :** சென்னை, வேலூர், காஞ்சீபுரம், கடலூர், விழுப்புரம், திருவண்ணாமலை, பெங்களூர், ஓசூர், சேலம், ஈரோடு, கோவை, மதுரை, தஞ்சாவூர், திருச்சி, நாமக்கல், தர்மபுரி, திருப்பூர், உடுமலைபேட்டை, திண்டுக்கல், தூத்துக்குடி, திருநெல்வேலி, நாகர்கோவில், விருதுநகர், கரூர் போன்ற நகரங்களில் வைத்தியரை நேரில் சந்திக்க முகாம் - விவரம் தெரிந்து கொள்ள மேலே உள்ள முகவரிக்கு கடிதம் (அ) போன் மூலம் தொடர்பு கொள்ளவும்.

**தகவல் :** டாக்டர் அவர்களின் மூலிகைகள் பற்றிய 27 வருட அனுபவ ஆராய்ச்சிகள் அடங்கிய **'எளிய முறையில் பிணி அகற்றும் தெய்வீக மூலிகைகள்'** என்ற புத்தகத்தினை பதிவுத் தபாலில் பெற ரூ.70/-ம் இயற்கை உணவுகளின் பெருமைகள், அதிசய உண்மைகள் அடங்கிய **'என்றும் இளமை காக்கும் இயற்கை உணவுகள்'** என்ற புத்தகத்தினை பதிவுத் தபாலில் பெற ரூ.60/-ம் மூலிகை மகிமை பற்றிய ஆடியோ கேசட்டை பெற ரூ.60/-ம் தலைமை முகவரிக்கு D.D. அல்லது M.O. அனுப்பவும்.

**7 & 8ந் தேதி - மும்பை : காலை 9 to இரவு 8 மணி வரை The South Indian Concerns Ltd., 401, Telang Road, Matunga, (CR), ✆ : 24011589, 24053879**

**9ந் தேதி - பெங்களூர் : காலை 11 to மாலை 1 மணி வரை, ஹோட்டல் பிரைட்வே, (கல்பனா தியேட்டர் அருகில்) கெம்பேகவுடா ரோடு, ✆ : 080-2265374, 2873013**

**18 & 19ந் தேதி - புதுடெல்லி : காலை 9 to இரவு 8 மணி வரை South Indian Hotel, 10211, Padam Singh Road, Ajmal Khan Road, Karol Bagh, ✆ : 25717126, 25723651**

# பிஞ்சுக் கனவுகள்!

வாழ்மால்பாளையம் அகிலா ஐந்தாண்டுகளுக்கு முன்பு குழந்தைத் தொழிலாளி. இப்பொழுது எட்டாம் வகுப்பு மாணவி. அப்பாவுடன் ஜெம் கட்டிங்கில் வேலை பார்த்தவள். எதிர்காலத்தில் எப்படியும் ஒரு 'நர்ஸ்' வேலையில் ஒட்டிக்கொண்டு விடலாம் என்கிற நம்பிக்கையில், கனவுகளைச் சுமந்தபடி இப்போது பள்ளி சென்று வருகிறாள்.

கீழ அம்பிகாபுரம், உணவு உறைவிடப் பள்ளியில் பத்தாவது படிக்கும் சதீஷ்குமார், இரவு நேரங்களில் பிவிசி பைப்புகளைச் சுமந்து செல்லும் தட்டு ரிக்‌ஷா ஓட்டி வருகிறான். அதிலிருந்து வரும் வருவாயை வயோதி கத்தந்தை - நோயாளித் தாயாருக்குத் தந்து விடுகிறான். தொடர்ந்து படித்து அதிகபட்சமாக 'இஞ்சினியர்' ஆகிவிடுவது இந்தப் பிஞ்சின் கனவு.

**எங்கள் செயல்பாடுகளைக் கருத்தில் கொண்டு மத்திய அரசு, இந்தியாவில் பிற மாவட்டங்களுக்கு எங்களை முன் மாதிரி மாவட்டமாக பலமுறை அறிவித்துள்ளது.**

இந்த வகை அகிலாக்களையும், சதீஷ்குமார்களையும் திருச்சியில் அதிகமாய்க் காணலாம். இதுபோன்ற நம்பிக்கை விதைகளை மாவட்டம் எங்கிலும் தூவிவிட்டு, அதனைப் பாதுகாத்து வளர்த்து வருகிறது 'சியர்ஸ்' குழந்தைத் தொழிலாளர் சீரமைப்புத் திட்ட அமைப்பு. மேற்கண்ட அகிலாக்களும் சதீஷ்குமார்களும், மாவட்ட நிர்வாகத்தின் கீழ் இயங்கி வரும் அந்த அமைப்பு மூலமாகவே அடையாளம் காணப்பட்டுள்ளனர்.



கடந்த ஏழு ஆண்டுகளாக செயல்பட்டு வருகிறது. குழந்தைத் தொழிலாளர்களை இனம் கண்டு, அவர்கள் பெற்றோர்களிடம் பேசி, சமரசம் செய்து, பிள்ளைகளைப் பள்ளிக்கு அழைத்து வருவதென்பது, பெரும் சவாலாகவே இருந்தது ஆரம்பத்தில். கல்வியறிவின் முக்கியத்

துவத்தை வாய் மொழிப் பிரசாரமாக எடுத்துச் சென்று, அதில் பெரிதும் வெற்றி கண்டுள்ளார்கள் அதன் பணியாளர்கள். ஒன்பது வயது முதல் பதினான்கு வயது வரையிலான குழந்தைத் தொழிலாளர்களை அதன் சீரமைப்புப் பள்ளிகளில் சேர்த்துக் கொள்கிறார்கள்.

பிரைமரி ஒன்று, இரண்டு, மூன்று ஆகிய மூன்று பிரிவுகளில் அவர்களுக்குக் கல்வி வழங்கி, மூன்றாண்டு படிப்புக்குப் பின் அவர்களை ஆறாம் வகுப்பில் மேனிலைப் பள்ளிகளில் சேர்த்து விடுகிறார்கள். அங்கு சேர்த்து விட்டவுடன் தமது கடமை முடிந்ததென சும்மா இருப்பதில்லை அவர்கள். ஓர் ஆண்டுக்கு மூன்று அல்லது நான்கு தடவைகள் அங்கு சென்று, அவர்களைக் கண்காணித்து வருகிறார்கள் குழந்தைத் தொழிலாளர் சீரமைப்புத் திட்டப் பணியாளர்கள்.

குழந்தைத் தொழிலாளர் சீரமைப்புப் பள்ளிகளின் நேரம், அந்தந்தப் பகுதி வேலை வாய்ப்புகளைப் பொறுத்தே அமைக்கப்பட்டுள்ளன. சில பள்ளிகள் மதியம் இரண்டிலிருந்து ஆறு மணி வரை. சில பள்ளிகள் மாலை ஆறு மணியிலிருந்து இரவு ஒன்பது வரை. இப்பொழுது மாவட்ட்ம் முழுவதும் முப்பத்தியேழு பள்ளிகள்.


**கா**மன்வெல்த் நாடுகளின் கூட்டமைப்பில் இந்த ஆண்டு திருச்சி மாவட்டக் குழந்தைத் தொழிலாளர் சீரமைப்புத் திட்டம், பாராட்டுச் சான்றிதழ் பெற்றுள்ளது.

குழந்தைத் தொழிலாளர் சீரமைப்புத் திட்ட இயக்குனர் ராணி பீட்டரைச் சந்தித்தோம்.

"மாவட்ட நிர்வாகத்தின் முழு ஒத்துழைப்புடன் நாங்கள் செயல்பட்டு வருகிறோம். கடந்த ஏழு ஆண்டுகளாக செயல்பட்டு வரும் இத்திட்டத்துக்கு, மாநில அரசின் மால்கம் ஆதிசேஷைய்யா விருது, தொடர்ந்து மூன்று ஆண்டுகளாகக் கிடைத்து வருகிறது. மத்திய அரசு, இந்தியாவில் பிற மாவட்டங்களுக்கு எங்களை முன் மாதிரி மாவட்டமாக பலமுறை அறிவித்துள்ளது. ஒட்டு மொத்தமாய் எங்கள் குழுவுக்குக் கிடைத்த இன்னொரு வெற்றி, இந்த பாராட்டுச் சான்றிதழ்" என்கிறார் ராணி பீட்டர்.

- ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு





உங்கள் **ஹெல்த் டுடே**

ஜனவரி 2003 விலை ரூ.10/-

**மூட்டு மற்றும் எலும்பு நோய்கள் சிறப்பிதழ்**

முதுகுவலி தீர்க்கும் வழிமுறைகள்...

இன்னும் பல தகவல்களுடன்...

**தொழில் முன்னேற்றம்**

ஜனவரி 2003 விலை ரூ.10/-

**தொழில் வாய்ப்புகளை அள்ளி தரும் தொழில் வணிக இதழ்**

கடன் உதவி வழங்க தயாராக இருக்கும் BYST

இன்னும் பல பயனுள்ள விஷயங்களுடன்...

**பில்டர்ஸ் வேர்ல்டு**

ஜனவரி 2003 விலை ரூ.15/-

**ஆண்டுமலர்**

**விற்பனையில்...**

அழகிய **மங்கையர் நாவல்**



மங்கையரின் வசீகர எழுத்தாளர்

# ரமணி சந்திரன்

எழுதிய

**நாளை வரும் நிலவு**

**புத்தம் புதிய நாவல்**

**பெண்களின் நாவல் கொண்டாட்டம்**

## விவேக் பப்ளிகேஷன்ஸ்,

6/84, மல்லன் பொன்னப்பன் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை - 600 005.

போன் : 28487533, 28483163 டெலி்ஃபேக்ஸ் : 28480610

E-mail : vivekpublications@yahoo.com / Website : www.vivekpublications.com

# asanas

ஆசனம், பிராணாயாமம், கிரியை
தியானம், சூரியநமஸ்காரம்,
கண் பயிற்சி - எளிய தமிழில்

**31வது நேரடிப்பயிற்சி**

சனி, ஞாயிறு 2 நாட்கள் மட்டும்

Timings : 7 a.m. to 5.30 p.m.

பயிற்சியின் முடிவில் சான்று வழங்கப்படும்

**சித்த மருத்துவக்கலை (அடிப்படை)**

* நீங்கள் சித்தமருத்துவம் கற்க வேண்டுமா?
* சித்தர்கள் பற்றி தெரிந்து கொள்ள வேண்டுமா?
* 96 தத்துவங்களை எளிதில் புரிந்து கொள்ள வேண்டுமா?
* செரிமான மண்டலத்தை சரியாக புரிந்து கொள்ள வேண்டுமா?
* பிரபஞ்ச இரகசியங்களை தெரிந்து கொள்ள வேண்டுமா?
* நாடிபார்த்து நோய்கள் கூற வேண்டுமா?

ஒரு நாள் பயிற்சி முகாம் !

விபரக்குறிப்பு இலவசம், எழுதுக.


**தீரும் நோய்கள்**

ஆஸ்துமா, சைனஸ், அலர்ஜி, ஈஸ்னோஃபீலியா சர்க்கரை நோய், அதிக இரத்த அழுத்தம், அடி முதுகுவலி, கழுத்து வலி, தலை சுற்று (VERTIGO) ஆண்மைக் குறைவு, கண் பார்வை கோளாறுகள், உடல் பருமன் (தைராய்டு)

**Dr. A.S. ASHOK KUMAR,** Ph.D., (Y.Sc.)

தலைமை யோகாசன சிகிச்சையாளர், சித்தமருத்துவர்

நேரடி சிறப்பு சிகிச்சையும், பயிற்சியும் அளிக்க உள்ளார்கள்



சுயமாக யோகாசனம் கற்க உதவும் அரிய நூல் ஆசிரியரின் ஆரோக்கிய வாழ்வுக்கு வழிகாட்டும் யோகாசனங்கள் (D.Y.T. TEXT BOOK) விலை ரூ.100/- V.P.P. கிடையாது தபாலில் பெற ரூ.20/- சேர்த்து M.O. செய்யவும்.

**INDIAN SCHOOL OF YOGA (REGD.)**

12B/4, Model House Road,
C.I.T. Nagar, (Near Nandanam Signal)
Chennai - 600 035. ✆ : 24322634

**புக் ஷோங்க!**

## ஜெயபாஸ்கரன் கவிதைகள் - ஜெயபாஸ்கரன்




**வே**ப்ப மரத்துக் குயிலுக்காகவும், வீசும் காற்றுக்காகவும் தவறாது வாடகை செலுத்தும் மென்மையான கவிஞர், இலக்கியப் போர்வைக்குள் மூடியிருக்கும் சமுதாய இரும்புத் திரைகளை விலக்க முயற்சிக்கும்போது வார்த்தைகளைச் சம்மட்டி களாக்கி விடுகிறார்.

வழுதி வெளியீட்டகம், எண்.48(1314), 6வது முதன்மைச் சாலை, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை - 600 041. விலை ரூ.50/-

## அழகி (திரைக்கதை) - தங்கர்பச்சான்




**வா**ழ்க்கையைப் பேசுகிற திரைக்கதைகள் இங்கு குறைவுதான். கதையாகிப்போன வாழ்க்கைகளை வடித்துக் காட்டும் சிலவும் அவ்வப்போது வருவதுண்டு. வாழ்க்கையா அல்லது கதையா என்று பிரிக்க முடியாதபடி எழுத்தில் 'அழகி'யை வடித்திருக்கும் தங்கர் பச்சான், வெறும், இயக்குநர் மட்டுமல்ல என்று நிரூபிக்கிறார்.

செம்புலம், 12/50, 5வது தெரு, அச்சுதன் நகர், ஈக்காட்டுத்தாங்கல், சென்னை - 600 097. விலை ரூ.100/-


## திருப்புகழ் விரிவுரை (திருவண்ணாமலை திருக்காளத்தி) கிருபானந்த வாரியார்




**'ச**ந்தக்கவி, கொஞ்சும் தமிழ், சொல்லும் புகழ்' - திருப்புகழ். அதற்கு திருமுருக கிருபானந்த வாரியாரின் விரிவுரை பாலும் தேனும் கலந்து அதில் பழமும் விழுந்தது போல. ரசித்து, அனுபவித்து, உணர வேண்டிய நூல்.

குகஸ்ரீ பதிப்பகம், 107, சிங்கண்ண தெரு, சிந்தாதிரிப் பேட்டை, சென்னை - 600 002. விலை ரூ.130/-

## ஸ்ரீ ஆதி சங்கரரின் விவேக சூடாமணி - மா. சங்கரன்



**ஐ**ந்நூற்று எண்பது சுலோகங்களில் ஆத்ம தத்துவத்தை அடைந்து அனுபவிக்கும் முறையை உபதேசிக்க ஆதி சங்கரர் எழுதிய பிரகரண (விளக்க) நூல். சித்தும் அசித்தும் காட்டி சிவபரத்தே சேர்த்து வைக்கும் நூல். தெளிவான தமிழாக்கம்.

மயூரா பதிப்பகம், ஜி.67/1, மகாத்மாஜி தெரு, ஜி-பிளாக், அண்ணா நகர் கிழக்கு, சென்னை - 600 102. விலை ரூ.40/-

## அபாய மல்லி - இந்திரா சௌந்தர்ராஜன்




**மூ**ன்று கதைகளின் தொகுப்பு. வேகத்தைக் கூட்டிக் கொண்டே போகிற நடையில் வித்தியாசமான கதைக் களங்கள், மூன்றும் வெவ்வேறு சுவைகள்.

திருமகள் நிலையம், 16, வெங்கட்நாராயணா சாலை, தி.நகர், சென்னை - 600 017. விலை ரூ.64/-

## கூடு - பாலகுமாரன்




**'வீ**டு' பற்றிப் புரிந்து, சொல்ல, கூடல் பற்றியும் உணர வேண்டும் எனக் கூடு விட்டுக் கூடு பாய்ந்த ஆதி சங்கரரின் கதை ஒன்றும், பாசுரத்தில் பரந்தாமனையும், வாக்கியத்தில் சிவநேசனையும் வடித்து, சிவவாக்கியராக வாழ்ந்த திருமழிசை ஆழ்வாரின் வரலாறு மற்றொன்றுமென இரு சித்த புருஷர்களின் வாழ்வைப் பற்றிக் கூறும் நூல்.

விசா பப்ளிகேஷன், 16, வெங்கட்நாராயணா ரோடு, தி.நகர், சென்னை - 600 017. விலை ரூ.68/-

- விஸ்வக்

● தேனி முருகேசன், தேனி

*? மாயாவதி பிறந்த நாளின்போது, 'என் மகள் பிரதமராக வருவாள்' என்று வாழ்த்தியிருக்கிறாரே அவர் தந்தை?*

! உ.பி. முதல்வராக இருக்கும்போதே ஐம்பது கோடி வரிப்பணத்தில் பிறந்த நாள் கொண்டாடுகிறார். பிரதமரானால்... 'பிரதமர் பிறந்த நாள் கொண்டாட்ட வரி' என்பதாகத் தனி வரியே விதிக்க நேரும்!

● தேவி, பாபநாசம்

# ஹிந்துத்வா என்பது மண் வாசனையா?

*? மண் வாசனைதான் ஹிந்துத்வா என்கிறாரே இல.கணேசன்?*

! அதனால்தான் அதிக நாள் இங்கே தங்கிய கூபர் பாதிரியாரை ஆர்.எஸ்.எஸ். சகோதரர்கள் அடித்து நொறுக்கிட்டாங்க போல!



• வொர்ஸ்ட் கிளைவ்!

● ஏ.பி. ஹாஜி, சென்னை - 1

*? இன்றைய இந்தியா எப்படி இருக்கிறது..?*

! 'இரண்டே இரண்டு அணுகுண்டு கொடுங்க, இலவசமா பெட்ரோல் சப்ளை செய்யறோம்' என்று லிபியா அதிபர் கடாஃபி வெளிப்படையாகப் பேரம் பேசும் அளவுக்கு..!

● எம்.பாஸ்கர், திண்டுக்கல்

*? யாரைக் கண்டும் எதைப் பற்றியும் எனக்குப் பயமில்லை என்று ஜெ. கூறுகிறாரே?*

! எப்போது எந்த விதமான அறிவிப்பு வருமோ என்று திக்திக் திகிலுடன் இருப்பது நாம்தானே! அம்மாவுக்கு என்ன பயம்?

● க.நா. இராஜேஸ்வரன், மொரட்டுப் பாளையம்

*? தராசுக்கு சினேகாவைப் பிடிக்குமா?*

! சினேகம் பிடிக்கும்!

● வி. சாரதா, நெய்வேலி - 1

*? தேசிய ஜனநாயக கூட்டணியில் அங்கம் வகிக்கும் தி.மு.க. தனியார் மயமாக்கும் கொள்கையை எதிர்ப்பது ஏன்?*

! தி.மு.க. அதை ஒட்டுமொத்தமாக எதிர்ப்தாகக் கூற முடியாது. தராதரம் பார்த்துச் செய்ய வேண்டும் என்கிறது. லாபகரமாக இயங்கும், மக்கள் நலனை அடிப்படையாகக் கொண்ட தேச பாதுகாப்புக்கு அவசியமான அரசு நிறுவனங்களைத் தனியார் மயமாக்குவதைத்தான் தி.மு.க. எதிர்க்கிறது. இது தேசிய ஜனநாயக கூட்டணியின் குறைந்தபட்ச செயல் திட்டத்துக்கு விரோதமானது என்று கூற முடியாது.

● நீலமேகம், சென்னை - 24

*? முறையான முயற்சிக்கு வெற்றியும் உண்மையான உழைப்புக்கு உயர்வும் இல்லாமல் திண்டாடுகிறேன். ஒரு யோசனை ப்ளீஸ்..?*

! காஸ் அடுப்பும் குக்கரும் அரிசியும் இருந்தால் போதாது. பற்ற வைப்பதற்கு லைட்டர் வேண்டும்.

● இரா. சக்கரபாணி, மதுரை - 7

*? அலுவலக உதவியாளனாய் இருந்து*



• வளர்க்க வாழ்த்து!



• பிறந்தநாள் வரி!

படிப்படியாக முன்னேறி மஹாராஷ்டிரா முதல்வராகியிருக்கும் சுஷீல் குமார் ஷிண்டே...?

! அவர் முன்னேறியது போல அவர் தலைமையில் மஹாராஷ்டிரமும் முன்னேற வாழ்த்துக்கள்.

● ஜி.கே.எஸ். மூர்த்தி, கோபி

? 'அன்பே சிவம்' கமல் எப்படி...?


! சர்வதேச தரத்துக்கு நம் நாட்டிலும் ஒரு நடிகர்!

● கே. கணேசன், சென்னை

? இனிமேல் எந்த ரயில் விபத்து நடந்தாலும் அதற்கு ரயில்வே பொது மேலாளரும் மண்டல மேலாளர்களும்தான் பொறுப்பு என்று நிதீஷ் குமார் கூறிவிட்டாரே?



* நட்புடன்...



* ரஜினி யோஜனா!

! பொறுப்பைப் பகிர்ந்தளிப்பதும் பொறுப்பாளி ஆக்குவதும் நல்ல நிர்வாகம் தான். ஆனால் அது மட்டும் விபத்துக்களைத் தவிர்த்துவிடாது. பொறுப்பாளிகள் கூறும் குறைபாடுகளை நீக்கி, அவர்களுக்கு அமைச்சர் முழு ஒத்துழைப்பு கிடைக்கச் செய்ய வேண்டும்.

● லெ.நா. சிவகுமார், சென்னை - 33

? இரண்டாவது முறையாக விண்வெளிப் பயணம் மேற்கொண்டிருக்கும் கல்பனா சாவ்லா...?

! மண்ணிலிருந்து விண்ணுக்குப் போய் வரும் பூமி கிரஹத்து தேவதை; விண்வெளியிலும் ஒரு பெண்ணியவிதை!

□ ரூ.100 பரிசு பெறுபவர் :
ஆர்.ஜி.ஹரி, திசையன்விளை,
நெல்லை மாவட்டம். 627 657

★ ரூ.50 பரிசு பெறுபவர் :
அஜார், 117, எல்டாம்ஸ் சாலை,
சென்னை - 600 018.

# மங்கையர் மலர்

பிப்ரவரி 2003

ஆண்டு மலர்
இரட்டைச் சிறப்பிதழ்!

## அழகுச் சிறப்பிதழ்

- மருத்துவத் தொழில் நுட்பத்தால் தோற்றத்தை மாற்றலாமா?
- மூலிகைகள் தரும் அழகு!



- பர்சனாலிட்டியை வளர்த்துக் கொள்வதும் மேக்-அப் போடுவது போலத்தான்!
- சமையலறை ஃபேஷியல்!

இன்னும் ஏராளமான 'அழகு டிப்ஸ்'கள் வருகிறது!

மங்கையர் மலர், ஈக்காடுதாங்கல், சென்னை - 97


● ஆர்.ஜி.ஹரி, திசையன்விளை ❑

*? வாஜ்பாயே மனது வைத்தால்கூட ஹிந்துத்வா தீயை அணைக்க முடியாது போலிருக்கிறதே?*

! அவர் மனது வைத்தால்தான் முடியும். காட்டுத் தீயை அடக்கிச் சுடராக்கி வழி காட்டும் முயற்சியைக் கைவிட்டு, தண்ணீர் ஊற்றி அதை அணைத்துவிட வேண்டும். அதாவது ஹிந்துத்வா என்ற பெயரில் செய்யப்படும் அக்கிரமங்களுக்கு ஒரு முடிவு கட்ட வேண்டும். தமது கட்சிக்கும் அந்த அமைப்புகளுக்கும் சம்பந்தமில்லை என்ற நிலையைத் துணிந்து தெளிவாக்க வேண்டும்.

● ஆர்.அப்துல் சலாம், திருச்சி - 21

*? சென்னைக் குழாய்களில் ஒரு நாள் விட்டு ஒரு நாள்தான் தண்ணீர் விடப் படுமாமே..?*

! தமிழ்நாட்டில் முன்னேற்றம் இல்லை என்று யாரும் சொல்ல முடியாது. இந்த ஒருநாள் விட்டு ஒரு நாள் தண்ணீர் ஏற்பாடு வழக்கமாக மார்ச் / ஏப்ரலில் ஆரம்பிக்கும். இப்போது ஜனவரிக்கே முன்னேறிவிட்டதே!

● அஜார், தேனாம்பேட்டை ★

*? கங்கை - காவிரி இணைப்புத் திட்டத் துக்கு 'பகீரத யோஜனா' எனப் பெயரிட வேண்டும் என்கிறாரே ரஜினி...? பகீரத யோஜனா என்றால் என்னங்க அர்த்தம்? நல்ல தமிழ்ப் பெயராச் சொல்லக் கூடாதா?*

! பகீரதன் தவம் செய்ததால்தான் தேவ நதியான கங்கை பூவுலகுக்கு வந்தது என்பது புராணம். அதனால் 'பகீரத யோஜனா'. அத் தவம் கடும் முயற்சிகளுக்கு உதாரணமாகி விட்டது. 'பகீரதப் பிரயத்தனம்' என்று சொல்வதுண்டு. மிகுந்த முனைப்பும் ஒருமுக சிந்தனையும் கோரும் பணி என்பதால் பெயர் பொருத்தமே. ஆமாம், இதைத் தமிழ் என்று ஒப்புக் கொள்வதில் உமக்கென்ன யோஜனை?

● எம். ராஜேந்திரன், லால்குடி

*? யாழ்ப்பாணத்தில் விடுதலைப்புலிகள் ரேடியோ ஒலிபரப்பைத் தொடங்கியுள்ள தைப் பத்தி...?*

! அதிபர் சந்திரிகா சுட்டிக் காட்டி யுள்ளது போல், அரசு அவர்களுக்கு விட்டுக் கொடுத்த அளவுக்கு அவர்கள் விட்டுக் கொடுக்கத் தயாராயில்லை. அமைதிக் குத் தரப்படும் விலை மிக அதிகமாகி விடாமல் பிரதமர் ரனில் கவனித் கொள்ள வேண்டும்.

# ஸ்ரீ டிராவல்ஸ்

194 - அ, முதல் மாடி, அண்ணா சாலை, ஆயிரம் விளக்கு, சென்னை - 6.
Ph:28516799, 28513109, 28513122, 55870482 Tata Phone,
E-Mail sritrave@satyam.net.in Web:www.sreetravels.com Mobile:98402 31302

## ஸ்ரீ டிராவல்ஸ் அளித்திடும் அற்புதமான சுற்றுலாக்கள்

**உங்கள் கோடை விடுமுறையை குடும்பத்துடன் குதூகலமாக களித்திட இப்போதே திட்டமிடுங்கள்.**

**Tour No. 1: கேரள சுற்றுலா:** புறப்படும் தேதிகள்: 01.05.2003, 12.05.2003 - சென்னை - திருவனந்தபுரம் - வர்கலா - கொல்லம் - ஆலப்புழா (படகு பயணத்துடன்) - கோட்டயம் - வைக்கம் - மூனாறு - கொச்சி - குருவாயூர் - மலம்புழா - கோயம்புத்தூர் - சென்னை. பயணத்தொகை: ரூ. 4,500/- பயண நாட்கள்: 7

**Tour No. 2: இலங்கை சுற்றுலா *(பாஸ்போர்ட் உள்ளவர்களுக்கு மட்டும்)*** புறப்படும் தேதிகள்: 22.04.2003, 13.05.2003, 25.05.2003 - சென்னை - திருச்சி - தூத்துக்குடி - கொழும்பு - கண்டி - கதிர்காமம் - திருக்கேட்கீஸ்வரம் - திரிகோணமலை - நுவரெலியா - கொழும்பு - தூத்துக்குடி - திருச்சி - சென்னை.
பயண நாட்கள்: இலங்கையில் 6 இரவுகள் / 7 பகல் பொழுதுகள்
பயணத்தொகை : ரூ. 13,900/- திருச்சி - கொழும்பு - திருச்சி (விமானப் பயணம்)
ரூ. 16,900/- சென்னை - கொழும்பு - சென்னை (விமானப்பயணம்)
ரூ. 10,900/- தூத்துக்குடி - கொழும்பு - தூத்துக்குடி (கப்பல் பயணம்)
அனைத்து இடங்களிலும் நட்சத்திர ஓட்டல்களில் தங்கும் வசதிகள், சைவ உணவு, குளிர்பதன பேருந்தில் பயண வசதி மற்றும் அனைத்து வசதிகளுடன்.
சுற்றுலா முடிவில் கொழும்பில் இலங்கையின் இசைக்கலைஞர்கள் பங்குகொள்ளும் அற்புதமான இசை நிகழ்ச்சியும் உண்டு.

**Tour No: 3: அந்தமான் சுற்றுலா:** புறப்படும் தேதிகள்: 25.04.2003, 09.05.2003 - சென்னை - போர்ட்பிளேர் - சென்னை. பயணத்தொகை: ரூ. 12,900/- பயண நாட்கள் : 8
ஒரு வழி கப்பல் மற்றும் ஒரு வழி விமானப்பயணங்கள். போர்ட்பிளேரில் கலை நிகழ்ச்சியும் உண்டு.

**Tour No. 4: டார்ஜிலிங் - கேங்க்டாக் சுற்றுலா:** புறப்படும் தேதிகள்: 01.05.2003, 20.05.2003 - சென்னை - கல்கத்தா - கேங்க்டாக் - டார்ஜிலிங் - சென்னை. பயணத்தொகை: ரூ. 6,500/- பயண நாட்கள்: 10
**ஷில்லாங், கௌஹாத்திக்கு கூடுதல் சுற்றுலா**
ஷில்லாங், கௌஹாத்திக்கு மேலும் 4 நாட்கள் கூடுதல் பயணத் தொகை: ரூ. 3,000/- ஹெலிகாப்டர் பயணத்துடன்

**Tour No. 5: ஹிமாசல பிரதேச சுற்றுலா- I :** புறப்படும் தேதிகள்: 27.04.2003, 15.05.2003
சென்னை - டில்லி - சிம்லா - குலு - மணாலி - ரோடங்பாஸ் - சண்டிகார் - மதுரா - ஆக்ரா - சென்னை.
பயணத்தொகை ரூ. 6,900/- பயண நாட்கள்: 11

**Tour No. 6: ஹிமாசல பிரதேச சுற்றுலா - II :** புறப்படும் தேதிகள்: 07.05.2003, (ஜீப் செலவுகள் உட்பட)
சென்னை - டில்லி - அமிர்தசரஸ் - தர்மசாலா - சிந்த்பூரணி - ஜ்வாலாமுகி - காங்ரா - டல்ஹௌசி - ஜம்முவைஷ்ணவி - மதுரா - ஆக்ரா - சென்னை. பயணத்தொகை ரூ. 6,900/- பயண நாட்கள்: 12

**Tour No. 7: நேபாள சுற்றுலா- II:** புறப்படும் தேதிகள்: 20.05.2003 - சென்னை - கல்கத்தா - ரக்சால் - சிட்வான் - போக்ரா - காத்மாண்டு - கோரக்பூர் - சென்னை. பயணத்தொகை ரூ. 7,000/- பயண நாட்கள்: 10
முக்திநாத் பயணம் செல்ல ரூ. 12,500/- நபர் ஒருவருக்கு.

**Tour No. 8: பக்தி சுற்றுலா: பத்ரி - கேதார் சுற்றுலா:** புறப்படும் தேதிகள்: 22.05.2003 - சென்னை - பூரி - புவனேஷ்வர் - கல்கத்தா - கயா - வாரணாசி - அலகாபாத் - ஹரித்துவார் - ரிஷிகேஷ் - பத்ரிநாத் - கேதார்நாத் - டில்லி - மதுரா - ஆக்ரா - சென்னை. பயணத்தொகை: ரூ.8,500/- பயண நாட்கள்: 14

**Tour No. 9: கைலாஷ், மானசரோவர் புனித பயணம்:** புறப்படும் தேதிகள்: 04.06.2003, 05.07.2003
சென்னை - பெங்களூர் - காத்மாண்டு - மானசரோவர் - கைலாஷ் - காத்மாண்டு - பெங்களூர் - சென்னை.
பயணத் தொகை ரூ. 68,000/- பயண நாட்கள்: 19
கைலாஷ் பயணத்தில் அனைத்து நாட்களும் தரமான தங்கும் வசதிகளுடன் மற்றும் தமிழக உணவு வசதிகளுடன்.
பெங்களூர் - காத்மாண்டு - பெங்களூர் (விமானப் பயணம்). பாஸ்போர்ட் இல்லாதவர்கள் உடனே விண்ணப்பிக்கவும்.

• மிகவும் தரமான தங்கும் வசதிகளுடன் • எல்.டி.சி. வசதி உண்டு • கோடை நெரிசலை தவிர்க்க 60 நாட்களுக்கு முன்னதாகவே முன்பதிவு அவசியம்.

புருவம் உயர்த்தி 'என்ன...?' என்பது போல் பார்த்தாள்.

பதிலேதும் சொல்லாமல் மெல்ல புன்னகைத்தான். அவளும் புன்னகைத்தாள்.

கோபமும், ஆற்றாமையும் இன்னும் மிஞ்சியிருந்தன.

சுந்தர் அவளின் இரு கைகளையும் ஒன்று சேர்த்து, தன் கையில் பிடித்தபடி... மற்றொரு கையால் அவளின் நெற்றியை வருடினான்.

அவ்வளவுதான். சட்டென்று எழுந்து, அவனின் மடியில் படுத்துக் கொண்டு, அவனின் கழுத்தை இழுத்து தன்னோடு இறுக்கிக் கொண்டாள்.

இருவருக்குமே அழுகை பொங்கியதில்... பேச்சு மௌனமொழிக்குள் அமிழ்ந்து கிடந்தது.

முதலில் தன்னைச் சமன்படுத்திக் கொண்டது அஞ்சலி தான்.

"சரி... எந்திரிப்பா. பசிக்கலையா?" என்றாள்.

"பசிக்குதுதான். இப்ப சாப்பாட்டுக்கு எங்க போறது?"

"அப்ப, பாலாவது குடிங்க...!"

"இல்ல அஞ்சலி, உன்னோட பேசணும் போல இருக்கு..."

"எனக்கும் தான், ரெண்டு நாளா உங்கக்கிட்டே பேசணும்னு துடிச்சிக்கிட்டு இருக்கேன்.."

"சரி... வா. பாலை சூடு பண்ணி எடுத்துக்கிட்டு, மொட்டை மாடிக்குப் போலாம். இங்கப் பேசினா, பாரதி முழிச்சுக்கப் போறான்...!"

நிலவு இன்றி நட்சத்திரங்கள் பூத்திருந்த வானம் இதமாயிருந்தது. நிறையப் பேர்கள் ஒன்றாய் உட்கார்ந்து பேசிக் கொண்டிருக்கிறாற்போல் ஒரு நிறைவு, நம்பிக்கை. நிலவு வந்து விட்டாலே தனி ராஜ்ஜியம்தான். வான் முழுக்கத் தன் கையில் எடுத்துக்



# யாரிடம் சொல்வேனடி தோழி! 4

அ. வெண்ணிலா

கொள்ளும். நிலவோடு காய்தல் ஒரு சுகம் என்றால், நட்சத்திரங்களோடு பேசுவது ஆனந்தமானது.

கையில் தம்ளர்களுடன் படியேறி வந்தார்கள் சுந்தரும், அஞ்சலியும்.

கைப்பிடிச் சுவரருகே, சாய்ந்து உட்கார்ந்து கொண்டார்கள்.

மௌனம் வழிந்தது.

யார் முதலில் பேசுவதென்பதும், எங்கிருந்து பேச்சைத் துவக்குவதென்பதுமான குழப்பத்தில் இறுக்கம் நிலவியது.

ஒரு சின்ன மனத்தாங்கலில் கணவன், மனைவிக்குள் ஏற்பட்டு விடுகிற மன இறுக்கம் ஆச்சர்யம்தான். அன்பு, புரிதல், பகிர்வு... எல்லாம் கடந்து, மனசின் நுணுக்கம் உணர அனுபவம் பெற வேண்டியிருக்கிறது.

"அஞ்சலி..!"

"ம்ம்...!"

மேகக் கொத்தொன்று மொத்தமாய் நகர்ந்து போனது.

"கல்யாணத்துக்கு முன்னாடி, ராத்திரி நேரத்தில் முகம் பார்த்துப் பேச எப்படியெல்லாம் அலைஞ்சிருக்கோம்..!"

"அதுவும் பௌர்ணமின்னா, கேட்கவே வேணாம். யார் வீட்டு மாடியில நின்னு நிலா பார்க்கிறதுன்னு வெறியா போட்டி போடுவோமே...!"

"ஆறு, ஆறரைக்குள்ள நிலா வெளிக்கிளம்பறதைப் பார்க்க ஓடின ஓட்டம்... ப்பா.. இப்ப நெனைச்சாலும் சிரிப்பா இருக்கு!"

"சுந்தர்... நாம கடைசியா எப்பப்பா பௌர்ணமி பாத்தோம்..!"

"ம்... போன மாசம்...இல்லையே... அதுக்கு முந்தின மாசம்....?"

"பாத்தியா... நமக்கே மறந்து போயிடுச்சு. எப்படியெல்லாம் வாழணும்னு கனவு கண்டிருக்கோம். அப்படி நம்மளால வாழ முடியுதா...?"

அஞ்சலி கேட்ட கேள்வியின் ஏக்கம் சுந்தருக்குள் சுரந்தது.

"வேணும்னேவா அப்படி நடக்கிறோம் அஞ்சலி...? இல்லையே... காலையில எழுந்து நாம ரெண்டு பேருமே அவசரம் அவசரமா வேலைக்குக் கௌம்பணும். இடையில குழந்தையை வேற பாத்துக்கணும். இதுல நமக்கான நேரம்னு எதுவும் இல்லாம, ஒருத்தருக்கொருத்தர் பேசிக்காம, ஓடிட்டு இருக்கோம்..!"

"ப்ளீஸ்ப்பா... இனிமே நமக்குள்ள என்ன பிரச்னை வந்தாலும், அதுக்காக என்னோட பேசாம மட்டும் இருக்காதப்பா. என்னால தாங்க முடியலை..."

ஒரு விநாடி மௌனமாயிருந்துவிட்டுச் சொன்னாள் அஞ்சலி.

"பேசிக்க முடியலேன்னாக் கூட பரவாயில்லப்பா... பார்வையிலக் கூட ஆறுதல் உணர்த்த முடியும் தெரியுமா? வேலை ஜாஸ்தி இருக்குன்னு சொல்லிக்கிட்டே, இப்படி முகம் பார்த்துச் சிரிக்காமக் கூட இருக்கிறது ரொம்ப வேதனையா இருக்கு..."

வேகமாய் இடை மறித்தான் சுந்தர்.

"சரி... நான் பேசலேன்னா என்னப்பா, நீ பேசினா, சிரிச்சா என்னவாம்...! நீயும் காலையில எழுந்தா, நிமிர்ந்து கூடப் பார்க்காம இங்க ஓடுற, அங்க ஓடுற...!"

"நான் ஏன்ப்பா ஓடுறேன்? நீங்களும் என்னோட சேர்ந்து எல்லா வேலையும் செஞ்சா எவ்வளவு உதவியா இருக்கும்..."

"நா எப்பவாவது நீ செய்யச் சொல்ற வேலைய செய்ய மறுத்திருக்கேனா..?"

"நான் ஏன் கூப்பிட்டுச் சொல்லணும்னு எதிர்பார்க்கறீங்க...? எனக்குத் தெரியு இல்லே. எந்த நேரத்தில



வீட்டில என்ன வேலை இருக்கும்னு. அது மாதிரி நீங்களும் தெரிஞ்சுக்கிட வேண்டியதுதானே...!"

"உனக்குப் பழக்கம். நீ செய்றே. நான் அப்படியா..?"

"நான் கூட இங்க வந்துதானே எல்லா வேலையும் செய்றேன். பொறுப்புனு வந்துட்ட பிறகு, ரெண்டு பேருமே ஏத்துக்கிடத்தானே வேணும்..."

மௌனமாயிருந்தான் சுந்தர்.

"நான் ஏதாவது தப்பாச் சொல்லிட்டேனே....?" அஞ்சலி கேட்டாள்.

"அதெல்லாமில்லை. நமக்குள்ள ஆயிரம் பிரச்னைகள் இருக்கலாம். அதுக்காக நேத்து குமரேசன் வந்திருக்கான். அப்பப் போயி முகத்தைத் தூக்கி வச்சுக்கிட்டுப் போறியே... இது சரியா...?"

"ஸாரிப்பா... அப்படிப் போனது தப்புதான். ஆனா, என்னிக்காச்சும் யோசிச்சுப் பாத்திருக்கீங்களா... நீங்க பாட்டுக்கு எப்பப் பார்த்தாலும் திடீர்னு ஒரு பிரெண்ட்டை கூட்டிக்கிட்டு வந்து சாப்பாடு ரெடி பண்ணுன்னா, நா ஒரு ஆளா என்ன பண்ணுவேன்... பாரதியக் கவனிப்பேனா, இல்லை சாப்பாடு செய்வேனா...?"

"நா என்ன வேணும்னேவா கூட்டிட்டு வந்து ஒனக்கு சிரமம் கொடுக்கிறேன். இப்ப சொல்லிட்டீல்ல, இனிமே பாரு. நா யாரையும் வீட்டுக்கே கூட்டி வர மாட்டேன்..."

"பாத்தீங்களா... இப்படித்தான். எதையும் ஒரு எல்லையோட விளிம்புல நின்னு பேசக் கூடாது. நான் யாரையும் கூட்டி வராதீங்கன்னு சொல்லலை. அப்படி வரும்போது, நீங்களும் கூடமாட வேலை செஞ்சா உதவியா இருக்குமேன்னு சொல்றேன்..."

ஏதோ யோசனைக்குள் இறங்கினான் சுந்தர்.

"என்னப்பா... குடும்பம்னா இவ்வளவு கஷ்டமிருக்கும்னு தெரிஞ்சிருந்தா கல்யாணமே பண்ணிக்காமக் கூட இருந்திருக்கலாம்னு தோணுதா...?" அஞ்சலி கேட்க,

"ச்சே... எனக்கு மட்டும் தான் கஷ்டமா...? உனக்கும்தான்" என்றான் சுந்தர்.

"கஷ்டம் கூடப் பெரிசாத் தெரியலப்பா... நீயே சொல்லுப்பா. நான் புத்தகத்தை கையிலெடுத்துப் படிச்சு எத்தனை நாளாச்சு? படிக்கிறதும், எழுதுறதும் மட்டுமே வாழ்க்கையா இருந்தவ நான். இப்ப எப்படி மாறிட்டேன் பாத்தியா...? என்னோட படிப்பும், எழுத்தும் குறையாம, நம்ம வாழ்க்கை அமையணும்னு நீ தானே அடிக்கடி சொல்லுவே...!" அஞ்சலியின் கண்களோரம் நீர்த் துளித்தது.

"ப்ளீஸ்... அழாதேப்பா. சில விஷயங்கள் நம்ம கை மீறிப் போயிடுது. பாரதிய பாத்துக்கிறதே உன்னோட பெரிய வேலையா இருக்கு. அவன் கொஞ்சம் வளர்ந்துட்டா, ஒனக்கு நிறைய நேரம் கிடைக்கும்ப்பா..."

கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

"சரி... அதை விடுங்க. அங்கே பாருங்களேன்!" அஞ்சலி கை நீட்டிய திசையை கவனித்தான் சுந்தர்.

பனிரிடும் கண்களோடு ஆந்தை ஒன்று மரத்தில் உட்கார்ந்திருந்தது.

"இந்த ஊர்ல கூட ஆந்தை இருக்கு போல..." மெதுவாக அஞ்சலி கேட்க,

"எல்லா ஊர்லயும்தான் இருக்கு. என்ன... நாம தூங்குற நேரத்தில அது முழிச்சிருக்

---

"தரகர்கிட்ட, 'பசை உள்ள மாப்பிள்ளையா பாருங்க'ன்னு சொன்னது தப்பாப் போச்சு..."
"ஏன், என்ன ஆச்சு?"

இறதுனால நமக்குத் தெரியமாட்டேங்குது..." கிசுகிசுப்பாய் சுந்தர் சொல்ல, சிரித்தாள்.

இழே தொலைபேசி மணி அழைத்தது.

"சீக்கிரம் போங்க.. பாரதி எழுந்துடப் போறான்!"

மாடிப்படிகளில் தடதடவென ஓடினான்.

"மெதுவா... பாத்து...!" என்றாள்.

வெளிவராந்தாவினோரமாய் மின்மினிப் பூச்சியொன்று சுற்றிச் சுற்றி வந்தபடியிருந்தது. அதையே வேடிக்கை பார்த்தபடி இருந்தாள் அஞ்சலி.

மாடியேறி மேலே வந்தான் சுந்தர்.

"என்னப்பா... யாரு போன்ல...?"

"நம்ம குமரேசன் தான்!"

"என்னவாம்...?"

"ஒண்ணுமில்லே... அவன் தங்கச்சிக்கு அடுத்த வாரம் நிச்சயதார்த்தம் ஃபிக்ஸ் பண்ணியிருக்காங்களாம். அதுக்கு அர்ஜெண்டா ஐயாயிரம் ரூவா தேவைப்படுதாம். ஏதாவது ஏற்பாடு பண்ண முடியுமான்னு கேக்கிறான்..."

"திடீர்னு கேட்டா நாம எங்கே போயி ஏற்பாடு பண்றது...?" சலித்துக் கொண்டாள்

தணைத்துக் கொண்டான். அவளுடைய கையைப் பிடித்து, விரல் நுனியில் மென்மையாய் ஒரு முத்தமிட்டான்.

மாநில அளவிலான கவிதைப் போட்டி பற்றியும், அந்த அறக்கட்டளையின் பரிசுச் செய்தி வந்த கடிதம் பற்றியும், பெருமை பொங்கக் கூறினாள்.

"கேட்கவே ரொம்ப சந்தோஷமா இருக்கு அஞ்சலி.... எந்தச் சூழலிலும் உன்னோட எழுத்தை நீ விட்டுட மாட்டேங்கிற நம்பிக்கை எனக்கு வந்திருச்சு... வாழ்த்துக்கள்..." என்றான் சுந்தர்.

"எழுத்தில இருக்கிற அளவுக்கு ஆசையும், எதிர்பார்ப்பும் எனக்கு சந்தோஷமான வாழ்க்கையிலேயும் இருக்குப்பா... நாம ரெண்டு பேரும் மனசு ஒத்து வாழ்ற வாழ்க்கையின் வெற்றிதான், என்னோட எழுத்தோட வெற்றியாகவும் நா பாக்கறேன்...!" என்றவள் சற்றே நிறுத்திவிட்டு, சுந்தரின் கண்களை நேராய்ச் சந்தித்தாள்.

"ப்ளீஸ்ப்பா... இனிமே நமக்குள்ள



"போஸ்டர் ஒட்டுகிற ஆசாமி ஒருத்தரைத் தேடிப் பிடிச்சு அழைச்சிட்டுகிட்டு வந்துட்டார்!"

— புன்னகை மன்னன்

அஞ்சலி. சுந்தரின் முகம் இலேசாய் வாடியது.

திடீரென நினைவுக்கு வந்தவளாய் உற்சாகமாய்க் குரலெழுப்பினாள்....

"உங்ககிட்ட ஒரு சந்தோஷமான விஷயத்தைச் சொல்லணும்னு நானும் ரெண்டு நாளா தவியா தவிச்சுக்கிட்டிருக்கேன் தெரியுமா...?"

"சந்தோஷமான விஷயமா..? என்னப்பா சொல்லு..."

"ஆங்... உடனே சொல்லிடணுமா...! ரெண்டு நாளா நான் எப்படியெல்லாம் காத்திருந்தேன் தெரியுமா...?" சிணுங்கியபடி அஞ்சலி கேட்க...

"அதான் என்னன்னு கேக்கிறேனே... இப்ப சொல்லு...!"

"சொல்றேன்... பொறுங்க. எ..ன..க்..கு..."

"உனக்கு?"

"என்னோட கவிதைக்கு..."

"உன்னோட கவிதைக்கு?"

"முதல் பரிசு கிடைச்சிருக்கு!"

"ஐய்ய..!"

அஞ்சலியை சந்தோஷத்தால் சேர்த்

என்ன பிரச்னை வந்தாலும், அதுக்காக என்னோட பேசாம மட்டும் இருக்காதப்பா. என்னால தாங்க முடியலை..." ஒரு குழந்தையைப் போல் குரலெடுத்து விம்மத் தொடங்கினாள்.

"ஏய்... அஞ்சலி... என்னாச்சு... ஏன் அழுறே? ப்ளீஸ்... இப்படி குழந்தை மாதிரி அழுறதை மொதல்ல விடு. பார்... மொட்டை மாடியில நீ இப்படி உக்காந்து அழுறதைப் பாத்து நட்சத்திரங்களெல்லாம் சிரிக்கப் போவுது..." என்றான்.

சட்டென அழுகையை நிறுத்தி... "வவ்வே..." என பழிப்புக் காட்டினாள்.

"அய்யய்யோ... இதுக்கு அழுகையே பரவாயில்லே..." சுந்தர் சொல்ல... செல்லமாய் நெஞ்சில் குத்தினாள் அஞ்சலி.

ஆந்தை சிறகுகளைப் படபடத்தபடியே வேறொரு மரத்திற்குப் பறந்து போனது.

தரை குளிர்ந்து விட்டிருந்தது.

(தொடரும்)

# வாங்கி விட்டீர்களா?

**காமகோடி**

தெய்வீக – பண்பாடு – மாத இதழ்

**2003 பிப்ரவரி இதழ்**

ஆன்மீக
செய்திகளை
புதிய வடிவில் தாங்கி
வரும் உங்கள்
காமகோடியில் . . .



- லிங்க வடிவில் எழுந்தருளியுள்ள ஸ்ரீரங்கநாதப்பெருமான்
- சத்ரு தொல்லை, காரியத்தடை நவக்கிரஹதோஷங்களைப் போக்கும் காட்டுத்திருத்தி ஐயனார்
- பெரியம்மையை விரட்டிய பேச்சியம்மன்
- பிருந்தாவனம் (சத்குரு ஸ்ரீராகவேந்திரர் வரலாறு) – பாலகுமாரன்
- ஸ்ரீசங்கர விஜயேந்திரர் ஜெயந்தி சிறப்புக்கட்டுரை

**காமகோடி மாத இதழ் கிடைக்காத இடங்களுக்கு ஏஜெண்ட்கள் தேவை.**

வெளியிடுவோர்

**கிரி டிரேடிங் ஏஜென்ஸி பிரைவேட் லிமிடெட்**

58/2, டி.எஸ்.வி. கோவில் தெரு,
மயிலாப்பூர், சென்னை 600 004
✆ 24943551, 24953817, 24953823
ஃபேக்ஸ் : 91-44-24953821

email : giritrading@vsnl.com
website : www.giritrading.com



# INSTITUTE FOR PSYCHOTHERAPY & MANAGEMENT SCIENCES

*67, Hemm Villa, 2nd Flr., Jawahar Nagar,*
*Near Rly. Stn., Goregaon (W),*
*Mumbai - 400 062. ✆ 879 0890 / 891*
*Website : www.ipmsmumbai.org*

## அஞ்சல் வழி கல்வி சேர்க்கை அறிவிப்பு

- **எம்.எஸ்.** (ஆங்கிலம் / தமிழ்) (உளநல சிகிச்சை & ஆற்றுப்படுத்துதல்) *M.S.(Psychotheraphy& Counselling)* ... 2 வருடம்
- **பி.ஜி.டி.பி.சி.** (ஆங்கிலம் / தமிழ்) *P.G. Diploma in Psychological Counselling* ... 1 வருடம்
- **பி.ஜி.டி.சி.சி.** (ஆங்கிலம் / தமிழ்) *P.G. Diploma in Career Counselling* ... 1 வருடம்
- **எம்.பி.ஏ.** (ஆங்கிலம் மட்டும்) *M.B.A. (Master of Business Administration)* ... 2 வருடம்

## தகுதி : பட்டப்படிப்பு

விளக்கவுரை மற்றும் விண்ணப்பப்படிவம் ரூ. 50 நேரில் அல்லது M.O. / D.D. மூலம் செலுத்தி பெறலாம்.

## • சிறப்பு அம்சங்கள் •

- இந்தியாவிலேயே எம்.எஸ். அளவில் உளநல சிகிச்சை பயிற்சி அளிக்கும் மிகச்சிறந்த கல்வி நிலையம்.
- பட்ட மேற்படிப்பு பயில்வோரும் அனுமதிக்கப் படுவர்.
- கல்விச் சான்றிதழ்களின் ஜெராக்ஸ் பிரதிகளை மாத்திரம் சேர்க்கைக்கு இணைத்தால் போதுமானது.
- எமது கல்வி நிறுவனம் திறந்த நிலை பல்னாட்டு பல்கலைக்கழகத்தினரால் அங்கீகரிக்கப் பட்டது.
- திறமை வாய்ந்த நிபுணர்களால் தயாரிக்கப்பட்ட பாடத் தொகுப்புகள் வழங்கப்படுகிறது.

## For Admissions Contact :

- **MRS. UMA JAYARAMAN** 36, Ayyappan Street, Off. Patel Road, Vijaya Laxmi Puram, Ambattur, **CHENNAI - 600 053. TEL.: 044-6571479**
- **MR. M. NAGESWARAN** P.No. 28, Meenakshi Hospital Krishna Nagar, **MADURAI - 625 014. TEL.: 0452-681777 / 681920**
- **MRS. K. REVATHI,** 133, Venkataswamy Road West, R.S. Puram, **COIMBATORE - 641 002. TEL.: 0422-540754**
- **MRS. SUJATHA SUDHEENDRA** 51 B, III Floor, Amar Colony, Lajpat Nagar - IV, **NEW DELHI 24. TEL.: 011-621 5718.**
- **MR. C.V. RAVI SHANKAR** 7-1-209/4/B, II nd Floor, Near Satyam Theatre, Ameerpet, **HYDERABAD - 500 016. TEL.:040-375 1298/657 7417.**
- **Mrs. SHAKUNTALA SENGUPTA,** 23/J, Bade Raipur Road, Near Shaktigarh Play Ground, Jadavpur, **KOLKATA - 700 032. TEL.: 033-414 0781 / 414 18 89.**
- **Dr. K. G. VIJAYALEKSHMI,** W.H.I. "VINAYAKAM", T.C. 57/1347, HSRA A-16, Kulathara Junction, Kalady, Karamana - Post, **TRIVENDRUM - 695 002. TEL.: 0471-341213.**

# தாலி இல்லேன்னா விசா இல்லை!



‘ஆஸ்திரேலியாவில் தமிழ் இனம்’ என்ற ஆங்கில நூலை எழுதியிருக்கிறார் பேராசிரியர் கந்தையா. இலங்கையில் பட்டப்படிப்பை முடித்துவிட்டு பட்ட மேற்படிப்பை (மு.வ.விடம் தமிழ் பயில வேண்டும் என்ற ஆசையால் சென்னைக்கு வந்து) பச்சையப்பா கல்லூரியில் தொடர்ந்தவர். லண்டன் பல்கலைக் கழகத்தில் தமிழாராய்ச்சி செய்த இவர், இப்போது வசிப்பது ஆஸ்திரேலியாவில்.

சென்னைப் பல்கலைக் கழகத்தின் ஆதரவுடன் இவர் எழுதியிருக்கும் நூல் பற்றி பேசினோம்.

**இந்த நூலுக்கு இப்போது என்ன அவசியம்?**

ஆஸ்திரேலியா, வந்தாரை வாழவைக்கும் நாடு என்பதில் சந்தேகமேயில்லை. நூற்றுக்கும் அதிகமான நாடுகளிலிருந்து அங்கு குடியேறியிருக்கிறார்கள். இலங்கைத் தமிழர்கள், இந்தியத் தமிழர்கள் இரு பிரிவினருமே இங்கு அதிக எண்ணிக்கையில் இருக்கிறார்கள். ஆஸ்திரேலியாவில் ஆறு மாநிலங்களும் இரண்டு மண்டலங்களும் உள்ளன. எல்லாவற்றிற்குமே சென்று வந்துள்ள நான் அங்குள்ள தமிழர்கள் குறித்த முழுமையான படிவத்தைக் கொண்டு வர வேண்டும் என்று தீர்மானித்தேன்.




**இப்படி ஒரு நூலைத் தமிழில் கொண்டு வராமல் ஆங்கிலத்தில் எழுதியதற்கு ஏதாவது காரணம் உண்டா?**

பல்கலைக் கழக விழாவில்கூட இது பற்றிக் கேட்டார்கள். என்னுடைய முக்கிய நோக்கம் என்பது தமிழ் இனத்தைப் பற்றிய விவரங்களை ஆஸ்திரேலியாவில் உள்ள பிற இனத்தவர்கள் அறிந்து கொள்ள வேண்டும் என்பதுதான். இங்கு ஆங்கிலம்தான் ஆட்சி மொழி. ஆங்கில நூலை அங்குள்ள அமைச்

சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அளிப்பதாக இருக்கிறேன். தவிர தமிழர்களின் சில பழக்க வழக்கங்களை அவர்கள் அறிய வேண்டியது ஒரு விதத்தில் அவசியம். திருமணமான தமிழ்ப் பெண் என்றால் தாலி கழுத்தில் ஏறியிருக்க வேண்டும் என்பதை விசா வழங்கும்முன் உறுதி செய்து கொள்கிறார்கள். தாலி இல்லையென்றால் விசா அளிக்க சம்மதிப்பதில்லை. இலங்கையில் ஜாதகப்படி தாலிப் பொருத்தம் இல்லையென்றால் தாலி இன்றியே திருமணம் நடத்தும் வழக்கம் இருக்கிறது. இதையெல்லாம் அறிந்து கொள்ள இந்த நூல் உதவும். இந்த நூலைச் சென்னையில் வெளியிடுவதற்குக் காரணம் ஒரு பல்கலைக் கழகத்தின் மூலமாக இப்படியொரு நூல் வெளியிடுவது இதுவே முதல் முறை. சென்னை பல்கலைக் கழகத்தின் தமிழ்த் துறைத் தலைவர் ஜெயதேவன் இந்த நூல் வெளியாவதற்கு உதவினார்.

**ஆஸ்திரேலியாவில் உள்ள தமிழர்களின் நிலை என்ன? வேர்களை மறந்துவிடாமல் இருக்கிறார்களா?**

அவர்கள் மதத்தை மறந்துவிடவில்லை. பல கோயில்கள் அங்கு உள்ளன. (டாஸ்மேனியா என்ற சிறு தீவு மட்டும் விதிவிலக்கு). பண்பாட்டை முழுவதுமாக மறந்துவிடவில்லை. திருமணம், பிறந்த நாள் போன்ற தினங்களிலாவது புடைவை கட்டிக் கொண்டு பூ வைத்துக் கொள்கிறார்கள் பெண்கள். ஆனால் மொழியைப் பற்றித்தான் கவலையாக இருக்கிறது. இன்னும் மூன்று தலைமுறைகள் கழித்து, தமிழே பேச முடியாத தமிழர்கள் அங்கு ஏராளமாக இருப்பார்கள். ஃபிஜி, தென்னமெரிக்கா, மொரீஷியஸ் போன்ற நாடுகளில் உள்ளது போல, தமிழ் இறந்துவிடும் என்ற பயமும் ஏற்படுகிறது.

**இலங்கைப் பிரதமர் ரணில் விக்ரமசிங்கேயுடன் நீங்கள் கொண்டிருந்த தொடர்பு குறித்து...**

அவர் கல்வியமைச்சராக இருந்த போது நான் அவருடன் இணைந்து பணியாற்றியிருக்கிறேன். முக்கியமாக மொழி பெயர்ப்புப் பணி. தவிர கல்விச் செழுமை ஆணைக்குழுவின் உறுப்பினராகவும் இருந்திருக்கிறேன். ஆசிரியர் நியமனம், இடமாற்றல் போன்ற பல பொறுப்புகள் எங்கள் குழுவைச் சேர்ந்தவை. ரணில் ஒருமுறைகூட எதையும் சிபாரிசு செய்ததோ, தலையிட்டதோ இல்லை. ஒருமுறை கல்வி மாற்றங்கள் தொடர்பான வெள்ளையறிக்கையை வெளியிட்ட கையோடு, அன்றிரவு என் வீட்டுக்கே வந்து உணவு சாப்பிட்டார். அவ்வளவு எளிமை.

**தாங்கள் அலட்சியப்படுத்தப் படுவதாக ஆஸ்திரேலிய ஆதிபழங்குடி மக்களுக்கு ஆதங்கம் உண்டு. சிட்னி ஒலிம்பிக்ஸுக்கு முன் இது ஒரு போராட்டமாகக் கூட வெடித்தது. இப்போது நிலைமை எப்படி?**

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு நல்லிணக்கத்துக்காக ஆஸ்திரேலிய அரசு பலவித முயற்சிகளை எடுத்தது. நான்கூட அங்குள்ள ஆதிப்பழங்குடி மக்களுடன் தொடர்பு கொண்டேன். ஆனால் அவர்கள் சமரசத்துக்குத் தயாரில்லை. தாங்கள்தான் உண்மையான ஆஸ்திரேலியா என்பதில் தீர்மானமாக இருக்கிறார்கள். ஒரு காலத்தில் ஆஸ்திரேலியா, இந்தியா ஆகியவை ஒன்றாக இருந்தது என்பதிலும், இயற்கை மாற்றத்தால் கடல் இரண்டு பகுதிகளையும் பிரித்தது என்றும் சொன்னால் கோபப்படுகிறார்கள். ஆதிப் பழங்குடி மக்கள் ஒருபுறமிருக்க, இலங்கை மற்றும் இந்தியத் தமிழர்களுக்கிடையே உள்ள வேற்றுமையும் கணிசமாக இருக்கிறது. தனித்தனி பாடசாலைகள். தமிழ் அமைப்புகள்கூட தனித்தனியாகத்தான் நிறுவுகிறார்கள். ஒரு வேளை இலங்கைத் தமிழர்களின் பேச்சு வழக்கு வித்தியாசமாக இருப்பதால் இப்படி இருக்கிறதோ என்னவோ!"

**- குல்லூ**

படம் : **யோகா**

---

"மாமூல் வாங்கப் போறப்ப கைல மாலை எதுக்கு?"

"ஒரு வெள்ளி விழா காவமா மாமூல் வெட்டறேன். ஒரு பதில் மரியாதைகூட இல்லயேன்னு கபாலி காரமா கேட்டுட்டான்!"

- அம்பை தேவா



**AJANTHA SCHOOL OF ARTS**
No. 6, Muthu Nagar, (Near Sundar Thirumana Mandapam)
Poonamallee, Chennai - 600 056.
*Ph : 044 - 26490363*

**தபால் மூலம்**

## ஓவிய ஆசிரியர் பயிற்சி

வரும் நவம்பரில் தமிழ்நாடு அரசுத் தொழில் நுட்பத்தேர்வு (Free hand Outline and Model Drawing - Higher Grade) எழுதி நீங்களும் ஓவிய ஆசிரியர் ஆகலாம். அரசு மற்றும் தனியார், உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளில் பணியாற்றலாம். அடிப்படைச் சம்பளம் ரூ. 4500/- இதர படிகள் சேர்த்து ரூ.7000/- வரை மாதச் சம்பளம். கல்வித் தகுதி SSLC, +2 தேறிய, தவறிய ஆண், பெண் இருபாலரும். நேர்முகப் பயிற்சியும் உண்டு.


உங்கள் முகவரியை ஒரு தபால்கார்டில் எழுதி அனுப்புங்கள் அல்லது தொலைபேசியில் தெரிவியுங்கள்.

**இலவச விவரப்புத்தகம்**
**உங்கள் வீடுதேடி வரும்.**

**SUGUNA**
**MOTORS & PUMPS**

நம்பிக்கை மற்றும் தரம் வாய்ந்த
எலெக்ட்ரிக் மோட்டார்கள்
& பம்புசெட்டுகள்

IS:12225



**சுகுணா ஏஜென்சீஸ்**
(அர்ச்சனா இண்டஸ்ட்ரீஸ்)
160, லிங்கி செட்டி தெரு, சென்னை-600 001.

**25340558 / 25341689**

**ஜெட் பம்ப்ஸ்**

# 14



நீ வரும் நேரம்
தாமதமானால்
பூவா? தலையா?
விளையாட்டு
பூதான் எப்பவும்
விழுகிறதன்பே
நீ வந்து கொஞ்சம்
தலை காட்டு

அந்தத் தொலைபேசித் தொடர்பகத்தில் எனக்கு முன் ஏழு பேர் காத்திருந்தார்கள். மஞ்சள் நிற சட்டையணிந்த நடுத்தர வயதுக்காரரின் கண்கள் சிவந்திருந்தன. வெகு நேரமாய் கண்ணாடி அறைக்குள்ளிருந்து பேசிக் கொண்டிருப்பவளின் வயது இருபத்து ஐந்தைத் தாண்டாது. சில விசும்பலும் சிரிப்பொலியும், விட்டு விட்டுக் கேட்டுக் கொண்டிருந்தன. சிரிப்பொலி கேட்கையில் காத்திருப்பவர்கள் வெறுப்பைக் கண்களில் உமிழ்வதைக் காண முடிந்தது. அவரவர்க்கு ஆயிரத்தெட்டு சோகம், அடுத்தவர் சிரிப்பு எரிச்சலைத் தருகிறது.

நிறைய நாள் பேசாதிருந்த தவிப்பும், சட்டெனத் தொடர்பு கிடைத்த பூரிப்பும் அவளுக்கிருந்தன. 'கண்டிப்பாக வருவீர்களா?' எனக் காதோடு கசிந்த சொற்களைக் கண்ணீராய் மொழி பெயர்த்துக் கொண்டிருந்தாள். எதிர்முனையில் பேசுகிறவருக்காய் காத்திருப்பவள் போல. எங்கள் காத்திருப்பு பற்றிய அக்கறையோ, ஆவலோ அவளுக்கில்லை. பஞ்சமும் பசியும் பெருகப் பெருக, உள்நாட்டு முதுகுகள் வெளிநாடுகளில் மூட்டை சுமக்கப் போய்விட்டன. முதுகை முகம் தாங்கியிருப்பதால், முகத்தையும் தொலைக்கும் கட்டாயம். குரல் சந்தோஷத்தைக் கொப்பளித்தாலும், முகம் வாடிக் கிடப்பதை என்னவென்பது?

பாட்டுப் போட்டாலென்ன
படம் காட்டினாலென்ன
நடந்து போனாலும்
வாகனத்துக்குள் இருந்தாலும்
ஒவ்வொருவர் மனதிலும்
ஒரு லாரி ஓடிக்கொண்டுதான்
இருக்கிறது.

பயணம் தொகுப்பில் சு. பஞ்சாங்கம் எழுதியது. ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்குப் போய்ச் சேருவதே பயணம்.

வாழ்வின் இறுதியில் புனிதத்தைத் தேடுகிற பயணமும், வாழ்வைத் தேடுகிற இளவயது பயணமும் வெவ்வேறு. இரண்டிலும் தெய்வத்தைத் தேடுபவர்கள் ரிஷிகள். எந்தப் பயணமானாலும் தவிர்க்க முடியாதது பிரிவு. பிரிவு, சோகத்தின் கருக்கெழுத்து.

யுகபாரதி

# காதல் பிசாசே!





> நதிக்கரையில் பிறந்த நாகரிகம் காதல் நீரால் கழுவப்பட்டிருக்கிறது. முத்தத்தால் சுத்திகரிக்கப் பட்டிருக்கிறது.


இந்த நூற்றாண்டின் அதீத விஞ்ஞான வளர்ச்சி மனிதனுக்கு வசதிகளையும் பிரிவுகளையும் அதிகப் படுத்திவிட்டன. இ-மெயிலில் குடும்பம் நடத்துகிற எத்தனையோ குடும்பங்கள், வசதிக்காக வாழ்வைத் தொலைத்து விட்டன. குழந்தைகளின் மழலைப் பேச்சை, தொலைபேசியில் கேட்டு சந்தோஷமடைகிற கணவன்கள் பெருகிவிட்டனர். ரொக்கத்திற்குட் பட்டே கனவுகளும் காதலும் கையாளப்படுகின்றன. அந்தப் பெண்ணின் ஆர்வரிப்பும் அவஸ்தையும் சிநேகத்தோடு சம்பந்தப்பட்டவை. இந்த எந்திர வாழ்வு தொடர்பாக ஸ்ரீரங்கம் வி. மோகனரங்கனின் கவிதை ஒன்று

**அடுக்கி வைத்த**
**புத்தகங்களின் நடுவே**
**ஆத்மா**
**வாழ்க்கையை யாரும்**
**பைண்ட் செய்யவில்லை**
**அங்கொன்றும் இங்கொன்றுமாய்**
**சிதறிக் கிடக்கிறது.**

படிக்க வைக்க வசதியில்லாத குடும்பத்தில் பிறப்பது பாவப் பிறப்பு. இளவயதில் தந்தையை இழந்து, நடைமுறைச் செலவுக்கும் இன்னொருவர் கையை எதிர்பார்த்தல் அதனினும் கொடிய பாவம். பன்னிரண்டாவது முடிந்த கையோடு கல்லூரிக்குப் போக இயலாமல் வேலைக்குப் போக வேண்டி வந்தது. உள்ளடங்கிய கிராமத்து இளைஞன் நகரத்துக்கு வந்தான். நகர முகங்கள் அச்சுறுத்தின. கட்டடங்கள் அவன் கந்தலாடையின் வெறுப்பைக் கேலி செய்தன. எல்லாத் துயரை விடவும் ஊரின் பிரிவும், ஒரே ஒருத்தி குடி கொண்ட இதயத்தின் கொதிப்பும், தாங்க முடியவில்லை. தங்கை முறை கொண்ட பெண்ணுக்கு 'அவளை' விசாரித்ததாக இரண்டு வரி எழுதிப் போட்டான். இயல்பான விசாரிப்புப் போல, முதல்முறை ஏற்றுக் கொள்ளப்பட்டது. அடுத்த கடிதம் விசாரணைக்குட்பட்டது. விசாரணைகளால் வீழ்ந்த காதலும் உண்டு. விசாரணையில் விளைந்த காதலும் உண்டு.

இந்த இரவல் விசாரிப்பிலிருந்துதான் ஒவ்வொரு காதலும் உதிக்கிறது. என்னைப் பற்றி என்ன சொன்னாள்(ன்) என்பதைத் தெரிந்து கொள்வதில் துளிர்க்கும் ஆர்வம்; பிரியமாகிவிட அடுத்த விசாரிப்புக்கு ஆலாய்ப் பறக்கும் ஆசைதான். சிகரெட்டைக் காதலுக்கும் உதடு ஊதுகிறது இப்படி.

**தூக்குக் கயிறில்**
**தொங்குவது போல**
**என்**
**உதட்டுக் கயிறில்**
**உனது ஊஞ்சல்**
**என் எச்சில் முத்தம்**
**பட்டு**
**எரிபவளே**
**சிவந்த உன் ஒற்றைக்**
**கண்ணிலிருந்து**
**சிதறி விழுவது**
**சாம்பலா?**
**கண்ணீரா?**



பூர்வீகம் தமிழகமாயிருந்தாலும் சிங்கப்பூரில் வசிக்கும் கருமு. இக்பாலின் இக் கவிதை, இதயக் கயிறால் நம்மை இணைத்துக் காட்டுகிறது. எச்சில் முத்தத்தில் எரிகிறவளின் உச்சி கொண்டையில் ஊசலாடுகிறது கவிதை. விசாரணைக்குட்பட்ட காதலின் நீதியை சாதியும் அந்தஸ்தும் தீர்மானிக்கிறது. படிப்புச் செலவுக்கு வெளியூருக்கு வேலைக்குப் போனவன், ஊர் திரும்ப கடிதத்தால் தண்டனைக்குள்ளாகிறான். காகிதத்தைக் கிழிக்க வேண்டிய சமூகம் அவளை/ அவனைக் கிழித்து விடுகிறது.

காதல் கடிதத்தின் வரிகள் இரத்தத்தால் எழுதப்படுகின்றன. ஆணுக்குப் பெண் பெயரில் வருகிற கடிதம் பிரச்னைக்கு உரியதானால், பெண்ணுக்குப் பெண் பெயரிலேயே ஆண் எழுதிய கடிதம் வருவதுண்டு. பெயர்களைக் கடந்தது காதல். 'அப்படியே நிற்கட்டும் அந்த மரம்' தொகுப்பில் ராஜமார்த்தாண்டன் எழுதுகிறார்.

**சானகியை மனச்சிறையில்**
**கரந்த காதல்**
**உள்ளிருக்குமோவெனத்**
**தேடித் தேடிச் சிறிப் பாய்ந்த**
**ராமபாணங்களென**
**வீசியெறிந்தாய்**
**அக்னிச் சொற்களை**
**என் பெண்ணே,**
**இது கர்ண மனம்,**
**தாரை வார்த்துத் தந்தாலன்றி**
**மாய்ந்து போகாதென்றும்**
**உன் மீதான என் காதல்**

நதிக்கரையில் பிறந்த நாகரிகம், காதல் நீரால் கழுவப்பட்டிருக்கிறது. முத்தத்தால் சுத்திகரிக்கப் பட்டிருக்கிறது. ஆலை சத்தத்தில் அழிந்து போன இதயத்தின் அமைதியை, வறுமைக்காக இழந்து விட்ட ஊரின் அழகை; வயிற்றுப்பாட்டுக்காக காதலைத் தொலைத்து விட்ட மனத்தை, குற்றமென்பதா? குழப்பமென்பதா?

இன்னொரு தொலைபேசித் தொடர்பகத்தில் இன்னொரு பெண். கூந்தலின் நுனியை விரல்களில் இழைத்துக் கொண்டே யாரோ ஒருவருடன் பேசிக் கொண்டிருக்கிறாள். வெட்கம் குழைத்து வண்ணமடித்தது முகம். டாலரில், வளையலில், சுடிதாரின் துப்பட்டாவில் என விரல்கள் சிலிர்த்துச் சிலிர்த்து மலர்ந்தன.

இரண்டடி இடைவெளியில் நிற்பவரின் காதிலும் அவள் பேச்சு கேட்பதில்லை. உரை முடிந்தது. நேரத்தைக் கணக்கிட்டு பணத்தைக் குறிக்கும் கருவி, சிவப்பில் விட்டு விட்டு எரிந்து கொண்டிருந்தது. என் போல சிலரும் வேறு தொடர்பகத்தை நோக்கி வெளியேறினோம். அந்த எண் மாற்றப் பட்டுள்ளது; சரியான எண்ணைத் தெரிந்து கொள்ள, இந்த எண்ணைத் தொடர்பு கொள்ளவும்.

காலம் எண்களைச் சுழற்றிச் சுழற்றி விரல் தேயக் காத்திருக்கிறது. யாருக்கு யார் இடைப்பாரென்பது யாருக்கும் தெரிவதில்லை. யார் யாரோடு பேசிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை ஒருவராலும் யூகிக்க முடிவதில்லை. ஆனாலும், தொடர்கிறது பேச்சு; மலர்கிறது.

(தொடரும்)

பெருவாழ்வும், பேரின்பமும் அளிக்கும் புனித க்ஷேத்ரமான இராமேஸ்வரத்தில், அன்னதானம் செய்து புண்ணிய பலனைப் பெறலாம்!

# பரிகாரத்தலமாக விளங்கும் இராமேஸ்வரத்தில் மகா சிவராத்திரியன்று நெய் தீபமேற்றி அன்னதானம் செய்வோம் வாருங்கள்!

**ஜெகத்குரு காஞ்சிஸ்ரீ பரமாச்சார்யார் அனுக்கிரகத்துடன் பெருவாழ்வும், பேரின்பமும் அளிக்கும் புனித க்ஷேத்ரமான இராமேஸ்வரத்தில் நெய் தீபமேற்றி அன்னதானம் செய்வதில் நீங்களும் பங்குகொள்ள அன்புடன் அழைக்கிறோம்!**

பேரன்புடையீர்! வணக்கம். அருள்மிகு ஸ்ரீ இராமநாதசுவாமி தங்களுக்கு அனைத்து நலன்களையும் தந்தருளப் பிரார்த்திக்கிறோம்.

பன்னிரெண்டு ஜோதிர்லிங்க ஸ்தலங்களுள் ஒன்றான இராமேஸ்வரத்தில் ஸ்ரீ பர்வதவர்த்தினி சமேத ஸ்ரீராமநாதசுவாமி உடனிருந்து அருள்பாலிக்கிறார். மூர்த்தி, தீர்த்தம், தலம் மூவகையாலும் இராமேஸ்வரம் சிறப்புற்று சிவவிஷ்ணு ஸ்தலமாக பிரகாசிக்கிறது. மாங்கல்ய தோஷம், புத்திர தோஷம், செவ்வாய் தோஷம், நாகதோஷம் போன்ற எல்லாவிதமான தோஷங்களுக்கும் பரிகாரத்தலமாக இராமேஸ்வரம் விளங்குகிறது. இத்தகைய சிறப்புமிக்க புண்ணிய க்ஷேத்ரமான இராமேஸ்வரத்தில் நேரில் சென்று நெய் தீபமேற்றி அன்னதானம் செய்ய இயலாத அன்பர்களுக்காக, "ஸ்ரீ அன்னபூரணி அன்னதான ஸேவா டிரஸ்ட்"மூலம் அன்னதானத்திருப்பணி நடைபெறுகிறது. புண்ணியபூமி இராமேஸ்வரத்தில் ஏழைகளுக்கும், அடியார்களுக்கும் அன்னதானம் அளிக்கும் பணியிலும், குடும்பம் நலம் பெற நெய் விளக்கேற்றும் பணியிலும் நாமும் பங்குகொண்டோம் என்ற ஆத்ம திருப்தியை அடைய இது ஒரு சிறந்த வாய்ப்பாகும்.


★ தங்கள் சார்பாக நெய் தீபமேற்றி அன்னதானம் செய்ய தங்களால் இயன்ற நன்கொடையை அனுப்பலாம்.
★ ரூ.500/- அனுப்பும் ஆன்மீக அன்பர்களுக்கு, 'ஆன்மீகம்' மாத இதழ் ஒரு ஆண்டிற்கு அனுப்பி வைக்கப்படும்.
★ ரூ.1000/- அனுப்பும் ஆன்மீக அன்பர்களுக்கு, 'ஆன்மீகம்' மாத இதழ் இரண்டு ஆண்டுகளுக்கு அனுப்பி வைக்கப்படும்.
★ ரூ.5000/- அனுப்பும் ஆன்மீக அன்பர்களுக்கு, 'ஆன்மீகம்' மாத இதழ் பத்து ஆண்டுகளுக்கு அனுப்பி வைக்கப்படும்.

அன்னதானத்திற்கும், நெய் தீபம் ஏற்றுவதற்கும் நன்கொடையை அனுப்புவோர், திருமண நாள், பிறந்த நாள் மற்றும் திதி நாள் மேலும் தாங்கள் எதை நினைத்து அன்னதானம் செய்ய விரும்புகிறீர்கள் என்பதைத் தெரிவித்தால் அதன்படி தாங்கள் விரும்பும் மாதத்தில் அமாவாசை அன்று இராமேஸ்வரத்தில் நெய் தீபமேற்றி அன்னதானம் செய்கிறோம். அன்னதானத்திற்கு நன்கொடையாக ரூ.1000, ரூ.5000 அனுப்பும் ஆன்மீக அன்பர்களுக்கு இராமேஸ்வரத்தில் பூஜிக்கப்பட்ட **'கோடி தீர்த்த' சொம்பும், வலம்புரி சங்கும்** ஸ்ரீ பர்வதவர்த்தினி சமேத ஸ்ரீ இராமநாதசுவாமி வண்ணப்படமும், சிறிய அளவில் சிவபுராண புத்தகமும் அனுப்பி வைக்கப்படும்.

★ ரூ.5000/- அனுப்பும் ஆன்மீக அன்பர்களுக்கு **இராமலிங்க தீபம்** அனுப்பி வைக்கப்படும். மேலும் ஒவ்வொரு மாதமும் அமாவாசை அன்று இராமேஸ்வரத்தில் நெய் தீபம் ஏற்றி அன்னதானம் செய்து பத்து வருடங்கள் "ஆன்மீகம்" மாத இதழ் தங்களுக்கு அனுப்பி வைக்கப்படும். மேலும் தாங்கள் விரும்பும்போது சந்ததியினரின் முகவரிக்கும் மாற்றம் செய்து தருகிறோம். ஆன்மீக அன்பர்கள் ஒவ்வொருவரின் பூஜை அறையும் புனிதம் பெறவேண்டும் என்ற எண்ணத்துடன் ரூ.5000 செலுத்துபவர்களுக்கு 338 பக்கங்களுடன் கூடிய பெரிய அளவில் உள்ள "ஸ்ரீமத் இராமாயணம்" புத்தகத்தை (தமிழில்) அனுப்பி வைக்கிறோம்.

குடும்பத்தில் தாய் தந்தையர்கள், மூதாதையர்களுக்கு இராமேஸ்வரத்தில் நேரில் சென்று 'தர்ப்பணம்' செய்ய முடியாதவர் களுக்காக, சாஸ்திரிகளைக் கொண்டு "ஸ்ரீ அன்னபூரணி அன்னதான ஸேவா டிரஸ்ட்" மூலம் தர்ப்பணம் செய்யப்படுகிறது. பித்ருக்களைக் குறித்து இராமேஸ்வரத்தில் செய்யப்படும் தர்ப்பணம் செல்வம், கீர்த்தி, ஆயுள், ஸ்வர்க்கம் முதலிய நன்மைகளை அளிக்கும். எதிரிகளை விலக்கும். தன் வம்சம் தழைத்தோங்கச் செய்யும். மறைந்த முன்னோர்களுக்கு தர்ப்பணம் செய்ய ரூ.750/- அனுப்பும்போது யாருக்கு தர்ப்பணம் செய்ய விரும்புகிறீர்களோ அவரின் பெயர், திதி மற்றும் கோத்ரம் போன்ற விபரங்களையும் அவசியம் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம். மூர்த்தி, ஸ்தலம், தீர்த்தம் ஆகிய மூவகையாலும் சிறப்பு வாய்ந்த இராமேஸ்வரத்தில் தர்ப்பணம் செய்து கிடைத்தற்கரிய பேற்றைப் பெற்று க்ஷேமமாக வாழ அழைக்கிறோம்.

இராமேஸ்வரத்தில் அமாவாசையன்று அன்னதானம் செய்ய விரும்பும் ஆன்மீக அன்பர்கள் சார்பாக நெய் தீபம் ஏற்றுகிறோம். தாங்கள் என்ன வேண்டுதலுக்காக தீபம் ஏற்ற வேண்டும் என்பதையும், உங்கள் பெயர், நட்சத்திரத்தையும் குறிப்பிட்டு எங்களுக்கு எழுதி அனுப்பினால் அதன்படி அமாவாசையன்று தீபம் ஏற்றி தங்களுக்கு பிரசாதம் அனுப்பி வைக்கப்படும். தீபமேற்றும் பணியிலும், அன்னதானப் பணியிலும் ஈடுபட விரும்பும் ஆன்மீக அன்பர்கள் தங்கள் நன்கொடையை Cheque/D.D/M.O மூலம் (Sri Annapoorani Annadhana Seva Trust, Chennai - 4) என்ற பெயருக்கு எடுத்து கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பி வைக்கவும். பெருவாழ்வும், பேரின்பமும் அளிக்கும் புண்ணிய க்ஷேத்ரமான இராமேஸ்வரத்தில் அன்னதானப் பணியும், தீப வழிபாட்டுப் பணியும் தெய்வீகப்பணியாக தழைத்திட உதவுமாறு அன்புகூர்ந்து வேண்டுகிறோம்.



ஸ்ரீ பர்வதவர்த்தினி

நன்கொடைகளுக்கு 80 G பிரிவின்படி வரிவிலக்கு உண்டு.


*Cheque/D.D./M.O அனுப்ப வேண்டிய முகவரி:*

## ஸ்ரீ அன்னபூரணி அன்னதான ஸேவா டிரஸ்ட்

SRI ANNAPOORANI ANNADHANA SEVA TRUST (Regd.)
68, Nadu Street, (Opp: Sri Kapaleeswarar Temple), Mylapore, Chennai - 600 004.
Tel: 24959302 Fax: (044) 7102308 E-mail: sivasiva@vsnl.net


ஸ்ரீ இராமநாதசுவாமி

குழந்தையில்லாத குறையை நீக்கி நல்ல புத்திரனைப் பெற்றெடுத்து மகிழ தீப வழிபாடு செய்வது சிறந்தது!



**நி**யூயார்க்கிலிருந்து கலிபோர்னியாவுக்குள் நடுவே ஏதோ கோளாறு நடந்திருக்கிறது. டயட் கன்ட்ரோல், சரியான உணவு என்று தேடித் தேடி அமெரிக்கர்கள் அநியாயத்துக்கு குண்டாகிப் போய், டயபடீஸ், ஹைப்பர்டென்ஷன், ஹார்ட் பிராப்ளம் என்று ஏகப்பட்ட பிரச்னைகளில் சிக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

சகலத்தையும் சர்வ அலட்சியமாகவே எடுத்துக் கொண்டு ஐஸ்க்ரீம், கோக்குடன் சுற்றும் அமெரிக்கர்கள், நம்மூர் போலீஸ் போல தொப்பையும், தொந்தியும், வற்றாத நோய்களுமாகத் தவிக்கிறார்கள்.

காரணம்? யுஎஸ்டிஏ (U.S. Department of Agriculture)க்காக ஹார்ட்வர்ட் மெடிகல் யூனிவர்சிடி பத்து வருடங்களுக்கு முன்னால் வடிவமைத்த 'டயட் பிரமிட்'தான். இன்னின்ன உணவு இத்தனை அளவுக்குச் சாப் பிட்டால்தான் சரியான ஆரோக்கியம் இருக்கும் என்று டாக்டர் வால்டர் வில்லட்

**நம்மூர் தொப்பைகளும் உடல் பருமன்காரர்களும் கொஞ்சம் யோசிக்க ஆரம்பித்தால் நல்லது!**

# விரணயக்




தலைமையில் வடிவமைத்த 'டயட் பிரமிட்'.

மீன், உருளை, பால், காய்கறி வகை, எண்ணெய் என்று கொழுப்பு உள்ளவற்றை ஒரு அளவாக எடுத்துக் கொண்டால் ஹார்ட்டுக்கு நல்லதுதான்.

ஆனால் மாவுப் பொருட்கள் (carbohydrate) உள்ள விஷயங்கள் தான் படு டேஞ்சரானதாக மாறிப் போயிருக்கிறது.

மாவுப் பொருளால் சேருகிற கலோரி செலவழிக்கப்படவில்லையென்றால், அது குளுக்கோஸ் வேகத்தில் கரைந்து, உடம்பில் அதிகமாகி, இன்சுலின் சுரப்பதைத் தடுத்து விடுகிறது. டயாபடீஸ் மளமளவென்று டெவலப் ஆகி, ஆளை ஒரு வழி பண்ணி விடுகிறது. டயபடீஸ் ஆரம்பித்தால் மற்ற நோய்க்கெல்லாம் மெயின் கேட் திறந்த மாதிரிதான்!



73743 பேரை இந்த ஆராய்ச்சிக்காக சோதனை செய்திருக்கிறார்கள்.

ஏற்கெனவே வடிவமைத்த 'டயட் பிரமிட்டை' ரீ மாடல் பண்ணிப் பார்த்தால், ஓரளவுக்குத்தான் சரி பண்ண முடிந்ததாம்!

கடைசியில் 'வெறும் டயட் மட்டும் இந்தக் கோளாறை சரி பண்ண முடியாது' என்று ஒவ்வொரு உணவு வகையினாலும் எவ்வளவு கலோரி உடம்பில் சேருகிறதென்று கணக்குப் பண்ணி, உடற்பயிற்சிக் கூடத்திடம் சரணடைந்திருக்கிறார்கள்.

அதுக்கும் ஒரு டேபிள் ரெடியாக்கி விட்டார்கள். ஒரு மணி நேரம் சும்மா உட்கார்ந்தால் எண்பது கலோரிதான் செலவாகிறது. நடந்தால் 325 கலோரி, பளு தூக்கினால் 215 கலோரி, டான்ஸுக்கு 395 கலோரி, ஏரோபிக்ஸுக்கு 505 கலோரி, என்று செலவாகும் கலோரியைக் கணக்குப் பார்த்துப் பிரச்னையைத் தீர்க்கலா

# கட்டுங்கப்பா!

மென்று முடிவெடுத்திருக்கிறார்கள்.

அட்லீஸ்ட் அரை மணி நேரமாவது மணிக்கு நாலு மைல் வேகத்தில் நடக்கணுமாம்!

'சுறுசுறுப்பா இருக்கறதுதான் ஒரே வழி. வேற வழியே இல்லை' - என்பதைக் கொள்கையாகப் பரப்ப ஆரம்பித்திருக்கிறார்கள்.

நம்மூர் தொப்பைகளும் உடல் பருமன்காரர்களும் கொஞ்சம் யோசிக்க ஆரம்பித்தால் நல்லது!

- தேவநாதன்

# கோடிக் கையெழுத்து! கொந்தளிக்கும் பிரச்னைகள்!



**வைகோ**



• முருகானந்தம்

வைகோ கைதைக் கண்டித்து ம.தி.மு.கவால் பெறப்பட்ட கையெழுத்து இயக்கம், மற்றக் கட்சிகளில் பிரச்னைகளைக் கிளப்பியிருக்கிறது.

ம.தி.மு.க.வின் தலைமைக் கழக நிர்வாகிகள், பல கட்சித் தலைவர்களிடம் கையெழுத்து வாங்கும் பொறுப்பை எடுத்துக் கொண்டார்கள். சோ. பாலகிருஷ்ணனும், ஈ.வி.கே.எஸ். இளங்கோவனும் கையெழுத்துப் போட்டது, அவர்களது பதவிக்கு வேட்டு வைத்துவிடும் அளவுக்குப் போய் நிற்கிறது.

''வைகோ கைது செய்யப்பட்டதும் அதைச் சரியெனச் சொல்லி அறிக்கை விட்டவர் இளங்கோவன். அப்படியிருக்க, இப்போது கைதைக் கண்டித்து எப்படி கையெழுத்துப் போடலாம்? எங்கள் தலைவர் ராஜீவைக் கொன்ற எல்.டி.டி.ஈ.யின் தீவிர ஆதரவாளர் வைகோ. இதை எப்படி எங்களால் மறக்க முடியும்?'' என்று கேட்கிறார் தமிழ்நாடு காங்கிரஸின் பொதுச் செயலாளர் முருகானந்தம்.

சமீபத்தில் நடந்த நிர்வாகிகள் கூட்டத்தில் இந்தப் பிரச்னையை இவர் கிளப்ப, ஏக ரகளை!

''பொடா சட்டத்தை அடிப்படையிலேயே எதிர்க்கிறது காங்கிரஸ். அப்படியிருக்க, கண்டித்து கையெழுத்துப் போட்டதில் என்ன தவறு? இதனால் வைகோவின் செயல்களுக்கு ஆதரவளித்ததாக அர்த்தம் கொள்ளக்கூடாது. தீவிரவாதத்துக்கு அவர் ஆதரவளித்தது நிரூபிக்கப்பட்டால், அவரைத் தண்டிக்க வேறு சட்டங்கள் இருக்கின்றன'' என்கிறது இளங்கோவின் தரப்பு.

''மேலிடம் சொன்னதால் போட்டோம்'' என்று சோ.பா.வும் இளங்கோவனும் சொன்னாலும், மேலிடம் ''எங்களுக்குத் தெரியாது'' என்று கைவிரித்து விட்டதாம். இப்போது மேலிடத்துக்கு இவர்களை எதிர்த்து ஏகப்பட்ட மனுக்கள். இப்படி மனுக்களை அனுப்புபவர்கள், ஜெ.வின் ஆதரவுள்ள காங்கிரஸ்காரர்கள் என்கிறார்கள் இளங்கோவன் தரப்பினர்.

**கா**ங்கிரஸ் கலாட்டா இப்படி என்றால், தி.மு.க.வில் வேறு வகையான உணர்வினைக் கிளப்பியிருக்கிறது கையெழுத்து இயக்கம். வைகோவை ஜெயிலில் சென்று பார்த்ததே ஸ்டாலின் தரப்புக்குப் பிடிக்கவில்லை. கைதுக்கு எதிராக, படிவத்தில் கலைஞர் கையெழுத்துப் போட்டதை கண்டித்துப் பேசுகிறார்கள் இளைஞரணிப் பிரமுகர்கள்.

''எங்கள் கூட்டணியைச் சட்டமன்றத் தேர்தலில் பலவீனப்படுத்தியவர் வைகோதான். அவரை நம்ப முடியாது'' என்றார் ஒரு சீனியர் பிரமுகர். 'தொல்காப்பியப் பூங்கா' வெளியீட்டு விழாவின்போது, அறிவாலய வளாகத்துக்குள்ளேயே ம.தி.மு.க கையெழுத்து வேட்டையில் ஈடுபட்டதை, இளைஞரணிப் பிரமுகர்களால் ஜீரணிக்க முடியவில்லை.


''அ.தி.மு.க பிரமுகர்களும், தொண்டர்களும்கூட கையெழுத்திட்டிருப்பதாகச் சொன்னார் ம.தி.மு.க அணித் தலைவர் எல். கணேசன். 'இது உண்மையா?' என்று கண்டறியும்படி அ.தி.மு.க தலைமை உத்தரவிட்டிருக்கிறதாம்!

— கௌசி

படங்கள்: ராஜன்



# S.V.முதியோர் இல்லம்



## Charitable Trust (Reg)

இங்கு முதியோர்களுக்கு இலவச மருத்துவமனை, ஆரம்பிக்கப்பட்டு அனைவரையும் தனித்தனியாக பரிசோதனை செய்து, உடல் ஆரோக்கியம் கண்காணிக்கப் படுகிறது. படுத்த படுக்கையில் உள்ள முதியோர்கள் அனைவரையும் 24 மணி நேரமும் டாக்டர்களும், நர்சுகளும், உதவியாளர்களும் கவனித்துக் கொள்கிறார்கள். எல்லா எமர்ஜென்சி உபகரணங்கள் உள்ளன.

மனச்சிதைவு, மனவளர்ச்சி குன்றிய முதியோர்கள் மற்றும் எல்லா வயது ஆண்/பெண் நோயாளிகளுக்கென்று தனி இல்லம் மருத்துவ வசதியுடன் செயல்பட்டு வருகிறது.

எல்லா வயது உட்பட்ட அதிக பட்ச மனநோயால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு (ஆண், பெண் இருபாலரும்) சிறப்பு பாதுகாப்பு வசதியுடன் முற்றிலும் இலவச மருத்துவ வசதியுடன் தனித் தனி இல்லம் செயல்படுகிறது.

உங்கள் பிறந்த நாள் மற்றும் சிறப்பு நாட்களில் நீங்கள் அளிக்கும் ஒரு சிறிய நன்கொடைத் தொகை எங்கள் இல்லத்தில் உள்ள முதியோர்கள் மருத்துவ வசதிக்கு பயன்படுத்துவதுடன், அவர்கள் வாழ்க்கையை காப்பாற்றிய நல்லாசி உங்கள் குடும்பத்திற்குக் கிடைக்கும் மிகப் பெரிய பரிசாகவும் அமையும்.


***முதியோர் சேவை பெரியது!***

நன்கொடைக்கு வருமானவரி விலக்கு (80G, Income Tax Excemption) உண்டு

# S.V. HOME FOR AGED

## Charitable Trust (Reg)

**# 50 / 88, Panchali Amman Kovil Street, (Near Arumbakkam Post Office)**
**Arumbakkam, Chennai - 600 106 Tel. Off: 2475 5700, 2475 1356.**



## வேத சாஸ்திர ரக்ஷணத்திற்கு ஓர் வேண்டுகோள்.

அத்வைத வித்யாசார்ய மஹாராஜா ஸாஹேப்
ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதர் புண்யஸ்மரண ஸமிதி (Regd)
89, (பழைய 42) காமாக்ஷி ஜோஸியர் தெரு, கும்பகோணம்-612 001.
E-mail : vedagdps@sancharnet.in - Website : www.geocities.com/gdpskmu


☎ : (0435)
Off : 425948
Fax : 423777
Patasala : 422866

"வேதாத்யயனம் செய்யும் பாக்யமில்லாதவர்கள், வேதாத்யயனம் செய்துவரும் குழந்தைகளை போஷித்து ரக்ஷிப்பதன் மூலம் ஓரளவாவது தனது கடமையை நிறைவேற்ற முடியும். ஒரு வேதக் குழந்தையின் படிப்பு, பராமரிப்பு செலவை ஒரு குடும்பம் எடுத்துக்கொண்டால், பேருபகாரமாக இருக்ககும்" என்று காஞ்சி ஸ்ரீ மஹாஸ்வாமிகள் உபதேசித்துள்ளார்கள். அவரின் மூதாதயர்களான ஸ்ரீ நாகமாம்பா ஸமேத பகவான் ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதர் அவர்களால் கி.பி. 1542-ல் ஸ்தாபிக்கப்பட்டு தொடர்ந்து 460 ஆண்டுகளாக நடந்துவரும் ராஜா வேத காவ்ய பாடசாலையை மேற்படி ஸமிதியானது தாய்போல் இயங்கி காப்பாற்றி வருகிறது. தற்பொழுது 120 மாணவர்களுக்கு 12 வேத, சாஸ்திர அத்யாபகர்கள், புராதனமான குருகுல முறைப்படி ரிக் வேதம், கிருஷ்ண, சுக்ல யஜுர் வேதம், ஸாம வேதத்தை போதித்து வருகிறார்கள். இப்புனித பாடசாலையை ரக்ஷிக்க கீழ்கண்ட திட்டங்களில் அனைவரும் பங்குகொண்டு ஸ்ரீ வேத மாதாவின் அனுக்ரஹத்தால் ஸகல ஸ்ரேயஸ்களையும் அடைய வேண்டுகிறோம். *புதிய பாடசாலை கட்டிட நிர்மாணப்பணி துவங்கப்பட்டு நடைபெற்று வருகிறது. நன்கொடை வரவேற்கப்படுகிறது.*

| தங்கள் நன்கொடைக்கு U/S 80-G பிரிவின்படி வருமான வரி விலக்கு உண்டு<br>திட்ட விபரங்கள் | ஒரு முறைக்கான நன்கொடை தொகை (One Time) | நிரந்தர வைப்பு நிதி 'Corpus Fund' |
|---|---|---|
| ஒரு வேளை ஸமாராதனைக்கு (பகுதி தொகை) | Rs. 500 | Rs. 5000 |
| அமாவாஸ்யை (or) பௌர்ணமி (or) க்ருஷ்ண (or) சுக்ல பக்ஷ த்வாதசீ ஸமாராதனைக்கு<br>[Please choose one specific (the above said) day of a particular month in a year for Samaradhana] | Rs. 1,500 | Rs.15,000 |
| ஒரு வேதம் பயிலும் மாணவனின் பராமரிப்பு ஒரு மாத செலவு ரூ.1000/- | Rs. 12,000 P.A | Rs. 1 Lakh |

**Cross** செய்யப்பட்ட **D.D.**-ஐ **A.V.M.S.G.D.P.S. Samithi** என்ற பெயரில் அனுப்பக் கோருகிறோம்.

# சுவர்



எஸ். ஷங்கரநாராயணன்

அவர் என் அலுவலகத்துக்குப் புதிதாய் மாற்றலாகி வந்திருந்தார். புது இடம், மாற்றம் என்பதெல்லாம் உற்சாகமான விஷயங்கள் அல்ல. ஏனெனில் அவர் மாற்றலாகி வந்தது, தண்டனை அடிப்படையில்.

நான் இந்த அலுவலகத்திலேயே வேலை பார்த்து வருகிறேன். எந்த ரசாபாசமான சிக்கல்களையும் ஏற்படுத்தாதவன். ஒருவர் தண்டனை என்று இங்கே வருகிறார் மாற்றலாகி. நான் இங்கேயே இருக்கிறேன். எங்கள் இருவரிடத்திலும்... என்ன வித்தியாசம் பாராட்டுகிறது இந்த நிர்வாகம்?

அதிலும் நான் மாற்றல் கேட்டுக் கொண்டிருக்கிறேன், என் வீட்டுப் பக்க அலுவலகத்தில். வயதான அம்மா, குழந்தைகள் சிறியவை... என்று மாற்றி மாற்றி பிரச்னைகளை எனக்கே பயமாய் இருக்கும் அளவு பூதாகாரப்படுத்தி கண்ணீர்க் கடிதங்கள் தந்து வருகிறேன்... இதுவரை மாற்றல் கிடைக்கவில்லை. தண்டனை என்று ஒரு நபரை அவர் வீட்டுக்குப் பக்கத்திலேயே போடுகிறது நிர்வாகம்!

எனக்கு மாற்றல் தராதது என்னை நிர்வாகம் தண்டனைக்குட்படுத்தியது போலிருக்கு...

அவர் தோளுக்கு மிஞ்சியவர். எல்லாரும் அவரைப் பெயர் சொல்லியழைக்காமல் தோழர் என்கிறார்கள். தண்டனையைப் பெரிய கௌரவம் போல அவர் பேசினார். நிர்வாகத்திடம் தண்டனைப் பெறாதவன் மனுசனா என்பது போலப் பேசினார். எனக்காக அவர் தண்டனை பெற்றாற் போலப் பேசினார். ஆகவே அவருக்கு நான் கட்டுப்பட்டவன்.

வேலை நேரத்திலும் வெளியேயும் அவர், சதா தன் வாழ்க்கை, பாதி பிறரைச் சார்ந்து சிந்தித்தே, பிறருக்காக வாழ்ந்தே போய் விட்டதாக அலுத்துக் கொண்டார். அதில் ஓர் ஆவேசமான பெருமிதம் இருந்தது. அதை அவர் அக்குள் கட்டையென ஊன்றிக் கொண்டவர் போலவே எனக்குப் பட்டது. அதை எடுத்துவிட்டால் பொத்தென அவர் விழுந்து விடக் கூடும் என்று எனக்குப் பயமாய் இருந்தது. தன் குரலைத் தானே கேட்க அவருக்கு ரொம்பப் பிரியமாய் இருந்தது போலும்.

> "அப்ப வேலைக்குப் போகாத பெண்ணை சில பேர் பைத்தியம் மாதிரிக் காதலிக்கிறானே?"

அரசு அலுவலகம் என்றாலும் எங்கள் பணி ஒய்

வற்றது. வேலை ஓய்ந்தாற்போல இருக்கும். திடுதிப்பென்று கோடை மழை போல வேலை கொட்டி முழக்கி விடும். அப்போது நம் தோழருக்கு டீ ஞாபகம் வரும் எனச் சொல்ல வேண்டியதில்லை. நாங்கள் அவர் வேலையையும் சேர்த்துச் செய்ய வேண்டியிருக்கும். மாற்றல் வேண்டிக் கெஞ்சினாலும், எங்களுக்கு நிர்வாகம் செவி சாய்க்காதது ஒருவித தண்டனை என்றால், இப்படி மாங்குமாங்கென்று

# ஒண்ணு, சித்திரம் இரண்டு!

வேலை செய்வது, அதுவும் தண்டனை போலத்தான் இருக்கும்.

"ஆமாங்க தோழர். நம்ம



அலுவலகத்தில் வேலை அதிகம்தான். மேலும் ஆள் தேவை. நிர்வாகத்திடம் கேட்டுப் பெறுவோம். போராடுவோம்'' என்றார் என்னிடம் தோழர் உணர்ச்சி பூர்வமாக டீக் கடையில். 'சரி' என்றபடி நான் டீக்கான சில்லரையைப் பாக் கெட்டில் தேடினேன். தோழர் சில்லரை தருவார்தான். அவரிடம் எப்போதுமே சில்லரை இருப்பதில்லை. மடிப்புக் கலையாத உடுப்புக்குள், மடிப்புக் கலையாத கரென்சித் தாள்களை வைத்திருப்பதில் அவருக்குப் பிரியம் அதிகம்.

மேலும் ஆள் தேவை என்று தோழர் சொன்னது ஆச்சரியமாய் இருந்தது எனக்கு. ஏனெனில் அவரே இங்கே மேலதிகமான ஒரு நபராக வந்தவர்தாம். 'இனியும் ஒரு நபர் கேட்கலாம், போராடலாம்' என்று இவரே சொல்வது கிடைக்கும் என்று நம்புவது ஆச்சரியமாய் இருந்தது எனக்கு.

மொத்தத்தில் நிர்வாகம் வேறு ஆளும் தரப் போவதில்லை, எங்களுக்கு விடிவு காலமும் இல்லை என்பது மட்டும் தெளிவா கப் புரிந்தது. அவரைத் தனியே அழைத்து வந்து, டீச் செலவை ஏற்றுக் கொண்டது தான் கண்ட பலன். அவனவன் லாகிரி வஸ்து சிகெரெட் என்று செலவழிக்கிறான். நான் பரவாயில்லை.. மன ஆறுதலுக்கு என்று இப்படி ஏதாவது சமாதானம் வேண்டித்தானே இருக்கிறது.

நான் அதிகம் பேசாதவன். கொஞ்சம் நாகரிக பாவனைகள் உள்ளவன். அடுத்தவர் மனத்தைச் சிறிதும் காயப்படுத்துவது எனக் குப் பிடிக்காது. பொதுவாக யார் என்ன பேசினாலும், பிடித்தாலும் பிடிக்காவிட் டாலும் கேட்டுக் கொள்வேன், ஒரு புன்ன கையுடன், மௌனமாக.

இந்த என் பொறுமையே எனக்குப் பிரச்னையாகிவிட்டது. நண்பர் மற்றவரை விட என்னிடத்தில் வந்து நிறையப் பேச ஆரம்பித்திருந்தார். அவரை நான் வெகுவாக உள் வாங்கிக் கொள்வதாய், தன்னுடைய வாரிசென, எதிர்காலத் தயாரிப்பென, அவர் முடிவு செய்து விட்டாற் போலிருந்தது.

பிடிக்காத விஷயம் இருந்தால் அதை எதிர்த்து தைரியமாகப் பேசவும் போரா டவும் தயங்கக் கூடாது. தோழர் சொல்வது உண்மைதான்.

என் பிரச்னைகள் நிர்வாகத்தோடு அல்ல...

பொருள் முதல் வாதம் சார்ந்த நீண்ட விளக்கங்களை அவரிடம் நான் கேட்டிருக்

> ''ஊருக்குள்ளே ஒருத்தர் பாக்கியில்லாம எல்லார்கிட்டயும் கைமாத்து வாங்கிட்டேன்.''
> ''அதனால ஊரை விட்டு ஓடிடலாமான்னு பார்த்துச் சொல்லணுமா?''
> ''அது ஒண்ணும் வேண்டாம்! நீர் ஒரு நூறு ரூபாய் கைமாத்து கொடும்! உம்மை மட்டும் விட்டு வைப்பானேன்?''
> – பெ. கலாசாமி

கிறேன். வியர்க்க வியர்க்க அவர் பேசுவார். கீழ்ப் பணியாளர்களை அழைத்து அடிக்கடி தண்ணீர் கேட்டுக் குடிப்பார். பெண்ணியம், மனித நேயம் குறித்து எனக்கு அநேக சந்தே கங்கள் இருப்பதைப் போலவும், அதைத் தீர்த்து வைப்பது தன் கடமை போலவும், அவர் பேசலானார். சாப்பிடும் இடத்தில் கூடத் தனியே என்னை விடுவதில்லை. எனக்கு எப்போது வேண்டுமானாலும் சந் தேகங்கள் வரலாம் அல்லவா? விளக்கம் தர அவர் அருகில் இல்லாவிட்டால் எப்படி?


நான் என் மனைவியிடம் ''நாளை லேர்ந்து மதியச் சாப்பாடு இன்னும் கொஞ் சம் அதிகம் வை பவானி'' என்றேன்.

இதில் சுவாரஸ்யமான விஷயம் ஒன்று ஏற்பட்டது. சுவாரஸ்யம் எனக்கல்ல - அவ ருக்கு. இந் நாட்களின் பழக்கத்தில் நான் அவரிடம் ஓரளவு சகஜசுமுகம் பாராட்ட ஆரம்பித்திருந்தேன். நண்பருக்கு உற்சாகம் கரை புரண்டு ஓட ஆரம்பித்துவிட்டது.

''உலகம் வெறும் பொருள் சார்ந்தது மாத்திரமே என்று எப்படிச் சொல்கிறீர்கள் தோழர்'' என்று நான் ஒருநாள் அடாடா, கேட்டு விட்டேன். டீக்கடை அருகில் இருந்த பெட்டிக்கடையில் வாட்டரி ரிசல்ட் பார்த்தபடியே அவர் புன்னகையுடன் என்னைத் திரும்பிப் பார்த்துப் புன்னகைத் தார். அவர் முகமே அப்போது அறிவொளி வீசிப் பிரகாசித்தது. ''அது நல்லா கவனிச்சா அப்படித்தான் வரும்... வள்ளுவரே என்ன சொல்லீர்க்காரர்... பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லை..!'' தான் தனது மட் டத்தில் இருந்து எனக்காக இறங்கி வந்த பாவனை அதில் இருந்தது.

''நான் என் மனைவியை நேசிக்கிறேன். இதுல என்ன பொருளாதார முக்கியத்துவம் இருக்கு?''

''ஆ நல்ல விஷயம். நான் உங்களைக் குறை சொல்கிறாப் போலவோ, குத்திக் காட்டுகிறாப் போலவோ, காயப் பட்டுவிடக் கூடாது தோழர்'' என்று என்னை முன் னெச்சரிக்கை செய்தார் அவர். சரி, என்கி



றாப் போல நான் தலையாட்டுகிறேன்.

"உங்க மனைவி வேலைக்குப் போறாங்கல்ல தோழர்?"

"ம்"

"ஒரே அலுவலகம் நீங்களும் அவங்களும்..."

"ம்"

"உங்களது காதல் திருமணம்..."

நான் தலையாட்டினேன்.

"ஆ" என்று நண்பர் கையில் உற்சாகமாகக் குத்திக் கொண்டார்.

"வெளிப்படையாச் சொன்னா... இதுவே உங்க மனைவி வேலைக்குப் போகலைன்னா இவரைக் காதலிச்சிருக்கவே மாட்டீங்க..."

"நான் மௌனமாய் இருந்தேன்... ஆ, நான் யோசிக்க ஆரம்பிக்கிறேன். அவர் கருத்துகளால் என் சிந்தனையைச் சீவி முடிந்து சிங்காரிக்கிறார். அவர் பீடா போட்ட முகம் பூரித்துக் கிடந்தது.

"அப்ப வேலைக்குப் போகாத பெண்ணைச் சில பேர் பைத்தியம் மாதிரிக் காதலிக்கிறானே?"

"நல்ல கேள்வி" என்று மீண்டும் என்னைப் பாராட்டினார்.

"அவன்கூட பெண்ணை ஒரு வேலைக்காரி, வீட்டு வேலைகள் அவள் செய்ய, தான் நிர்வாகம் செய்கிற பாவனை உள்ளவன் தானே? பெண்ணை ஒரு சொத்தாகவே, தன் கைச்சொத்தாகவே அவன் காண்கிறான்... ஆண் வழி சமூகத்தின் சாபக்கேடு இது... இந்த உலகத்தில் அடிப்படையில் ஒரு சுயநலம் எல்லாத்திலயும் ஒட்டிக்கிட்டு இருக்கு... நான் உங்களைக் குறை சொல்றதா தயவு செஞ்சு எடுத்துக்கக் கூடாது தோழர். தேவை சமதர்ம சமுதாயம், அதற்குத் தேவை மனித நேயம்..."

"மனிதநேயம்னா என்னங்க தோழர்?" என்று கேட்டேன் அவரிடம், அலுவலகத்தில் வேலைகள் இருந்தன. சீக்கிரம் போக வேண்டும். நான் போகும்வரை என் வேலையைச் சக ஊழியர் ஒருவரைப் பார்த்துக் கொள்ளும்படி சொல்லிவிட்டு வந்திருந்தேன்.

"மனிதனை, சக மனிதன் எனப் புரிந்து கொள்வது. அவன் உரிமைகளை மதிப்பது. அவனைப் பற்றி அக்கறை எடுத்துக் கொள்வது..."

"ம்" என்றேன் நான். விட்டால் அவர் அடுக்கிக் கொண்டே போகக்கூடும்.

"விட்டுக் கொடுத்து, ஒருவரை ஒருவர் சகித்துக் கொண்டு வாழ்வது?" என்றேன் நான்.

"ம்...ம்..." என்றார் உற்சாகமாய்.

"அப்படிச் செய்தால் அதில் அடிப்படையில் ஒரு சுயநலம் இருக்குன்றீங்களே?" என்றேன் நான்.

"புரியல" என்றார் அவர் புகையிலையை வாயில் ஒதுக்கிக் கொண்டபடியே.

"சக உயிர்களிடத்தில் நிபந்தனையற்ற அன்பு வை... ஆன்மிகமும் அப்படித்தானே சொல்லுது தோழர்."

"ஆன்மிகம் பாவனை செய்யுது..." அவர் பெரும் விவாதத்துக்குத் தயாராய் இருந்தார். எனக்கு வேலையிருந்தது.

"மனைவியை ஒரு சாமானியன் வேலைக்கு அனுப்பினால் அது பொருள் முதல் வாத அடிப்படையில்... சரியா...?"

"ம்" என்றார் அவர்.

"அதையே நீங்க அனுப்பினா அது அவளுக்குப் பெண்ணுரிமை தருவது" என்றேன் நான்.

"அது அப்டியில்லங்க தோழர்.. விஷயம் என்னென்னா...?"

"நான் முடிச்சிர்றேன். நான் என் மனைவியை வண்டில அலுவலகத்துக்குக் கொண்டு விட்டால், அது பொருள் முதல் வாதம். நீங்க கொண்டு விட்டா மனித நேயம்..."


"ஆ... நீங்க ரொம்ப எளிமையா எங்களைக் கொச்சைப்படுத்திப் புரிஞ்சிக்கறீங்க" என்றார் அவர்.

"பொருள் முதல் வாதத்துக்கு நேர் எதிரம்சம் மனித நேயம். அதாவது மனிதநேயம்ன்றது... ஓரளவு தனி மனிதன் சார்ந்தது. ஆன்மிகம் சார்ந்தது. அதை நீங்க யோசிக்கறாப்ல தெரில தோழர். ஒரே உறைல இரு கத்திகள் வைக்க முடியாது. வாங்க போலாம். எனக்கு வேலை யிருக்கு" என்றேன் நான்.


"அட அதை விடுங்க... ரிசல்ட் என்னாச்சி?"

"ஒரு நம்பர்ல போச்சு ஒரு லட்சம்" என்று வருத்தப்பட்டார் அவர்.

எனக்கும் வருத்தமாய் இருந்தது அவரைப் பார்க்க. ○











# விடை நீக்கினால் விடைகள்!

கட்டத்தில் உள்ள 'விடை' எழுத்துக்களை (அதாவது வி, டை ஆகிய எழுத்துக்களை) நீக்கிவிட்டால், கீழே உள்ள குறிப்புகள் உணர்த்தும் விடைகளை, சுலபமாகவே கண்டுபிடிக்க முடியும். முயற்சி செய்யுங்களேன். (சும்மா எஃபெக்டுக்காக சினிமா நட்சத்திரங்களின் படங்கள். மற்றபடி விடைக்கும் அவற்றிற்கும் சம்பந்தம் இருக்க வேண்டும் என்பதில்லை)

1. விக்ரம் அடிக்கடி சுமக்க வேண்டி வந்தது
2. ஜெமினி என்பது இதுதானே
3. மும்தாஜின் மகன் எனலாம்
4. சிவாஜியின் கையில் இந்த அம்மனின் வீரவாள்
5. ஷாம் என்றால் இந்தியில் இதுதான்
6. மயில்சாமி கோபத்தோடு நின்ற ஊர்
7. முரளி எப்போதும் இவர் கையில்
8. பானுப்ரியா என்று இவரைக் கூறலாம்

- ஜி.எஸ்.எஸ்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| வி | ம் | டை | வே | வி | மா | லை |
| ஔ | ன | க | டை | தா | வி | டை |
| ர | து | வி | ண் | டை | ள | வி |
| ங் | மி | டை | னி | ண | வி | ம் |
| க | வி | வா | டை | வி | ன் | டை |
| சி | ப | வி | க | ம | ல் | வி |
| ப் | வி | ப | ழ | னி | டை | வி |

**விடைகள்** : 1. வேதாளம் 2. மிதுனம் (ராசி) 3. ஔரங்கசிப் 4. பவானி 5. மாலை 6. பழனி 7. கண்ணன் (முரளி - புல்லாங்குழல்) 8. கமல் (தாமரை - சூரியனுக்குப் பிடித்தது)

Sri Ramajayam

## SRI MEENAKSHI TRAVELS DELHI (Regd.)

No.5-A/77, W.E.A., Karol Bagh, New Delhi - 110 005. Phone : 011-2572 6891 / 2582 0291 Mobile : 98102 71676

**Madras Office : K.Govindan, SRI MEENAKSHI TRAVELS DELHI,** Malligai Apartments, Plot No.17, Ragavendra Nagar, Parthiban Street, Ullagaram, (Near Nanganallur), Chennai - 600 091. Phone : 044 - 2242 1840 Mobile : 98401 05300

வட இந்திய புனித யாத்திரைகள் மற்றும் உல்லாச சுற்றுலாக்கள்

| இடங்கள் | புறப்படும் தேதி | பயண நாட்கள் | தில்லியிலிருந்து கட்டணம் (நபர் ஒன்றுக்கு) |
|---|---|---|---|
| **சிம்லா (Simla)**<br>சிம்லா, குப்ரி, குல்லு, மணாலி, ரோத்தங்பாஸ், சண்டிகர், குருக்ஷேத்ரம் | 20.4.2003<br>28.4.2003<br>10.5.2003 | 6 | 3,500/- |
| **பத்ரிநாத் (Badrinath)**<br>பத்ரிநாத், ஜோஷிமட், ஹரித்துவார், ரிஷிகேஷ், ஆக்ரா, மதுரா, பிருந்தாவன் | 10.5.2003<br>23.5.2003<br>1.6.2003 | 7 | 4,000/- |
| **கேதார்நாத் - பத்ரிநாத் (Kadarnath-Badrinath)**<br>கேதார்நாத், பத்ரிநாத், ஜோஷிமட், ஹரித்துவார், ரிஷிகேஷ், ஆக்ரா, மதுரா, பிருந்தாவன் | 9.5.2003<br>23.5.2003<br>1.6.2003 | 9 | 4,700/- |
| கைலாஷ் மானசரோவர் | 25.5.2003 | 20 | 90,000/- |

தில்லியிலிருந்து வசதியான டீலக்ஸ் பஸ் (2 x 2). தென்னிந்திய பிராமணர்களால் தயாரிக்கப்படும் காபி, சாப்பாடு, யாத்திரையின்போது தங்குமிடம் யாவும் மேற்கண்ட கட்டணத்தில் அடக்கம். LTC வசதியுண்டு. யாத்திரைக்கு முன்பும் பின்பும் தில்லியில் தங்குவதற்கு கட்டணம் தனி. மாருதி கார், வேன், டாடா சுமோ, பஸ் ஆகியவைகளும் கிடைக்கும். தில்லி லோக்கல், ஜெய்பூர், ஆக்ரா, மதுரா, ஹரித்வார், ரிஷிகேஷ், வைஷ்ணோதேவி, முக்திநாத், காசி, அலகாபாத், கயா போன்ற சுற்றுலா இடங்களுக்கும் எங்களை அணுகவும். குரூப்பாக வருபவர்களுக்கு அவரவர் வசதிக்கேற்ப பயண ஏற்பாடுகள் செய்து தரப்படும்.

**Tmt. Vedavalli Srinivasan,** Mylapore, Chennai - 600 004. Ph : 044-2495 0530
**R. Kesavan, Kalyanapuram,** Thanjavur, Phone : 04362 - 262686 / 261910

---

ஹம்சவேணி

# ஜோதிட சித்த மருத்துவ மாந்திரீக நிலையம்

## வால்பாறை Dr. V.T. ஈஸ்வரன் PhD, USA.,

### ஜோதிட சித்த மருத்துவ மாந்திரீக வல்லுநர்

நெ.3, C.G.V.நகர், பேரூர் ரோடு, குமாரபாளையம் (P.O) (LIC பஸ் ஸ்டாப் அருகில்), E.B.பின்புறம், செல்வபுரம், கோவை - 26. செல் : 98430 - 94169. ✆ 0422 - 2347131.

**ஜோதிடம் பார்க்கவும், ஜாதகம் கணித்து தரவும்**
**சித்த மருத்துவம் மூலம் தீராத நோய்களுக்கு சிகிச்சை பெறவும்**

★ மனநிலை கோளாறு
★ குடும்ப ஒற்றுமை
★ தற்கொலை எண்ணம்
★ பூர்வீக சொத்து பெறவும்
★ கடன் தொல்லை
★ எதிரி தொல்லை
★ செய்வினைக் கோளாறு
★ வழக்குகள் தீரவும்
★ ஆண் / பெண் வசியம் பெறவும்
★ திருமணம் தடை நீங்கவும்
★ குழந்தை பாக்கியம் பெறவும்
★ ஆண் / பெண் வரன் பெறவும்



Dr. V.T. ஈஸ்வரன்
PhD, USA.,

ஜோதிடம், மாந்திரீகம், ராஜவசியமை, ரசமணி, யந்திரம் மூலிகை ரட்சை, இவை மூலம் பயன் பெறவும் பயிலவும் அணுகவும்

**அணுகுவீர் பயன்பெறுவீர்**


பிரதிவாரம் வெள்ளி தோறும் காலை 7.00 - 7.30 மணிக்கு ராஜ் டிஜிட்டல் பிளசிலும், பிரதிவாரம் சனி தோறும் மாலை 4.00 - 4.30 மணிக்கு விண் டிவியிலும் Dr. V.T. ஈஸ்வரன் பேசுகிறார். காணத்தவறாதீர்கள்.

# சினிமாவில் பாட்டு அவசியமா?

நடிகை ஷபானா ஆஸ்மியின் கணவரும் இந்தி, உருது கவிஞருமான ஜாவித் அக்தர் கடந்த வாரம் சென்னை ஐ.ஐ.டி.யின் 'சாரங்க்'கை துவக்கி வைக்க வந்திருந்தார். மாணவர்கள் சளைக்காமல் அவரிடம் கேள்விகள் கேட்க அவரளித்த பதில்களின் ஒரு பகுதி இங்கே.

**ஆங்கிலத்துக்கு அளவுக்கதிகமான முக்கியத்துவம் கொடுப்பதால்தான் இந்திய மொழிகள் போதிய முன்னேற்றம் அடையவில்லை என்கிறார்களே?**

ஜெர்மனி, பிரான்ஸ் போன்ற நாடுகளில் பயிற்றுமொழி அவரவர் தாய்மொழிதான். ஆங்கில மீடியம் அங்கு கிடையாது. ஆனால் மருத்துவம், பொறியியல் என்று உலகின் அத்தனை விஷயங்களும் நுணுக்கமாக அவர்களது தாய்மொழியிலேயே கிடைக்கின்றன. அந்த நிலை இங்கு வந்த பிறகு தாய்மொழிதான் பயிற்றுமொழியாக இருக்க வேண்டும் என்று நாம் கூறலாம். தவிர பல மொழிகள் கொண்ட இந்தியாவுக்கு ஓர் இணைப்பு மொழியாகவும் ஆங்கிலம் செயல்படுகிறதே.



**இந்தித் திரைப்படங்களில் இப்போது இடம் பெறும் பாடல்களை உங்களால் ரசிக்க முடிகிறதா?**

இவற்றைப் 'பாடல்கள்' என்று நீங்கள் கூறுவதே எனக்கு ஆச்சர்யத்தைத் தருகிறது. கவிதை என்பது அடுக்கு மொழியும் தாளக்கட்டும் மட்டுமல்ல. ஆனால் ஒன்று. ஒருவன் பொதுவாகவே ஆரோக்கியக் குறைவாக இருந்தால், நாளடைவில் அவனது ஆரோக்கியமான சில உடல் உறுப்புகளும்கூட பழுதடைந்துவிடும். இன்றைய திரைப்பாடல்கள் கூட சமூகம் பழுதடைந்து போனதன் ஒரு குறியீடாகத்தான் எனக்குத் தெரிகிறது. தவிர போன தலைமுறைக்காரர்களுக்கு இருந்த மொழி அறிவு, இந்தத் தலைமுறைக்கு இல்லையே. என்றாலும் மிகச் சமீபத்தில் அறிமுகமாகியிருக்கும் சில இயக்குனர்கள் நம்பிக்கை அளிப்பதாக இருக்கிறார்கள்.

**திரைப்படத்தில் பாடல்கள் அவசியமா?**


ஹாலிவுட்டின் ஆக்ரோஷமான ஆக்ரமிப்பைத் தாக்குப் பிடித்து நிற்பது இந்திய சினிமாக்கள்தான். இந்தியாவைப் பொருத்தவரை திரைப்படம் தோன்றுவதற்குப் பல நூற்றாண்டுகள் முன்பிருந்தே, பாடல்களின் பங்கு கணிசமாக இருந்துள்ளன. தொன்மையான சமஸ்கிருத நாடகங்களில்கூட இடையே பாடல்கள் இடம் பெறுகின்றன. எனவே நம் திரைப்படங்களில் பாடல்கள் இடம் பெறுவது குறித்து நாம் அவமானப்படத் தேவையில்லை. பொருத்தமாகவும் இனிமையாகவும் அவை இருந்தால் போதும். என்றாலும், வருங்காலத்தில் பாடல்களே இல்லாத திரைப் படங்களும் அதிக அளவில் உருவாகும். அது எனக்கு வருத்தத்தை ஏற்படுத்தும் விஷயம்தான்.

**எந்த வகைத் தூண்டுகோல்களால் சிறப்பான கவிதைகள் உருவாகும்?**

மக்கள் நிச்சயம் ரசிப்பார்கள் என்ற எண்ணத்திலோ, இதற்கு விருது கிடைக்கும் என்ற நோக்கத்திலோ எழுதப்படும் எந்தக் கவிதையும் சிறப்பானதாக இருக்காது. சுற்று முற்றும் பாருங்கள். நல்லவை கெட்டவை இரண்டுமே கண்ணில் படும். அன்பு, வெறுப்பு போன்ற இருவகை உணர்வுகளுமே சிறந்த கவிதைக்குத் தூண்டுகோலாக அமையும்.

- ஜி.எஸ்.எஸ்.

படம் : ஸ்ரீஹரி



மதுரை
இசைப் பிரியர்களுக்கு
இனிய விருந்து

# மதுரை கர்னாடிக் மியூசிக் புக் சென்டர்

**(MUSIC BOOKS WORLD)**

அனைத்து கர்னாடிக் மியூசிக் புத்தகங்களும் வெஸ்டர்ன், தமிழிசை புத்தகங்களும், ஸ்லோக ஸ்தோத்திரங்களும், அனைத்து தெய்வப் பாடல்கள் மற்றும் கர்னாடிக் மியூசிக் கிளாஸிக்கல் கேஸட்டுகள், ஸ்தோத்திரப் பாடல் கேஸட்டுகள், மியூசிக் தெரபி கேஸட்டுக்களும் கிடைக்கும் ஒரே இடம்.

## மதுரை கர்னாடிக் மியூசிக் புக் சென்டர்

**(Music Books World)**

81/1. சர்வோதயா மெயின் ரோடு.
(சிவகாசி நாடார்கள் மெட்ரிக்குலேஷன்
& மேல் நிலைப்பள்ளி சமீபம்)
தியூ எல்லீஸ் நகர். மதுரை 625010
Ph: 2606412 (R) Cell : 98431 - 27078

இசைப்பயிற்சி வகுப்புகளும் நடைபெறும்



# SEA BRREEZE & FATHIMAA HOSTEL

தூய்மை, பசுமை கொண்ட மேட்டுக்குப்பம் பகுதியில் குறைந்த மாதக் கட்டணத்தில் சைவ உணவு, மருத்துவ உதவியாளர், வாகனப் பொழுது போக்கு வசதிகளோடு முதியோர் இல்லமும்.

சகல வசதிகள் கொண்ட தனிக் கட்டிடத்தில் உழைக்கும் மகளிருக்கான விடுதியும் செயல்படு கிறது. பொது அறை, தனி அறை வசதிகளும் உண்டு.


முதியோர் இல்லத்தில் நடமாட முடியாதவர் களையும் சேர்த்துக் கொள்கிறோம்.

## ஸீ ப்ரீஸ் முதியோர் இல்லம், பாத்திமா உழைக்கும் மகளிர் விடுதி,

பாத்திமா டிரஸ்டு (பதிவு)
3/251 வி.பி.ஜி. அவென்யூ,
மேட்டுக்குப்பம், துரைப்பாக்கம்,
பழைய மகாபலிபுரம் சாலை,
சென்னை - 96.
Ph : 24963949 & 24960878 Cell : 98412-97887

மானுட சேவைக்குப் பேதமில்லை






**ESTD. 1955** ஸ்ரீ Ph : 0431-2706823, 2704312 Cell : 98940 - 31964

**நன்றி மறவாத யாத்ரீகர்கள் துணை**

எமது யாத்திரையில் வருபவர்கள் பெரும்பாலும் எங்களது முந்தைய யாத்திரைக்குப் போய் வந்தவர்களிடம் எமது சர்வீஸில் போஜனம், உபசரிப்பு, பாதுகாப்பு சௌகர்யங்கள் எப்படி உள்ளது என்பதை விசாரித்து தெரிந்து கொண்ட பிறகே எங்களிடம் பதிவு செய்து கொள்கிறார்கள்.

16நாட்கள் கொண்ட **காசியாத்திரை 13.3.2003ம்** தேதி சென்னையிலிருந்து காலை 5.30 மணிக்கு சென்னை ஜம்முதாவி எக்ஸ்பிரஸ் மூலம் ஒரு 3 டயர் கோச் புறப்பட்டு டில்லி, ஆக்ரா, மதுரா, அரித்வார், ரிஷிகேஷ், அலகாபாத், கயா, புத்தகயா, காசியிலிருந்து அதே கோச் சென்னைக்கு வந்து சேர்கிறது. காபி, டிபன், பிராமணாள் போஜனம் உள்பட நபருக்கு கட்டணம் ரூ. 8750/- இந்த யாத்திரையில் திருச்சி, திருவண்ணாமலை, திருநள்ளாறு, சென்னை, ராயபுரம், மாம்பலம், தக்கோலம், சிவகாசி, புதுக்கோட்டை, அவலூர்பேட்டை, ஈரோடு, கோவில்பட்டி முதலிய ஊர்களில் இருந்து அன்பர்கள் சேர்ந்துள்ளனர்.

**3.4.2003ம்** தேதியிலும் **13.9.2003ம்** தேதியிலும் **15** நாட்கள் கொண்ட குஜராத், ராஜஸ்தான் மாநில **பஞ்சதுவாரகை யாத்திரை** ஆரம்பமாகிறது. ரயில்-பஸ்-காபி,டிபன் போஜனம் உள்பட நபருக்கு ரூ. **6975/-**

**19.4.2003ம்** தேதி **12** நாட்கள் கொண்ட **காசி, காட்மாண்ட், பசுபதிநாத் நேபாள் யாத்திரை** சென்னையிருந்து பிற்பகல் 5.30 மணிக்கு வாரணாசி எக்ஸ்பிரஸில் டிக்கெட்டுகளை ரிசர்வ் செய்து புறப்படுகிறது. நேராக காசி, காசியிலிருந்து ஸ்பெஷல் பஸ்மூலம் நேபாள் போய், மீண்டும் காசிக்கு வந்து வாரணாசி எக்ஸ்பிரஸ் மூலம் சென்னைக்கு திரும்புகிறது. ரயில்கட்டணம் 2x2 பஸ் கட்டணம், காபி, டிபன் போஜனம் உள்பட ரூ. 6575/-

**11.5.2003ம்** தேதி **20** நாட்கள் கொண்ட **பத்ரிநாத்- கேதார்நாத், காசி யாத்திரை** சென்னையிலிருந்து காலை 5.30 மணிக்கு ஒரு தனி 3 டயர் கோச் சென்னை ஜம்முதாவி எக்ஸ்பிரஸ் மூலம் புறப்பட்டு டில்லி, ஆக்ரா, மதுரா, பிருந்தாவனம், அரித்வார், கேதார்-பத்ரிநாத், ரிஷிகேஷ்-அரித்வார், காசி, அலகாபாத், திரிவேணி, கயா, புத்தகயா, காசி, சென்னைக்குத் திரும்புகிறது. ரயில்கட்டணம், காபி, டிபன், போஜனம் உள்பட நபருக்கு கட்டணம் ரூ. **9750/-** அரித்வாரிலிருந்து பத்ரிநாத், கேதார்நாத், போய் வரும் பஸ் சார்ஜ் தங்கும் ஜாகை வசதியுடன் ரூ. **2750/-** தனி. வராதவர்கள் கட்ட வேண்டாம். நமது கோச்சிலேயே தங்கலாம். வழக்கமான போஜன வசதி உண்டு. முக்கிய குறிப்பு புண்ய க்ஷேத்திரங்களுக்கு வரும் எமது யாத்ரீகர்கள் எங்களிடம் கட்டண சலுகையை எதிர்பார்க்க வேண்டாம் என்று அன்புடன் தெரிவித்துக் கொள்கிறோம். மேமாத யாத்திரைக்கு தற்போது டிக்கெட்டுகள் பதிவாகிறது.

# ஸ்ரீ நாமகிரி டிராவெல் சர்வீஸ் Regd.

34, A/2, அக்ரஹாரம், மேலசிந்தாமணி, திருச்சி-2. போன் : 2704312, 2706823
Prop. K.E. நம்பிள்ளை Organizers. N.K. சேகர், N. கங்காதரன்



# குறையொன்றுமில்லை

அத்விதியமாய் விளங்கும்படியான பரப்ரும்ம ஞானம் நமக்குப் பூரணமாய் ஏற்பட வேண்டும். இதற்கு நமக்கு ஆசார்ய சம்பந்தம் மிக அவசியம் என்பதையும் புரிந்து கொள்ள வேண்டும். சுவாமி தேசிகன் சொல்கிறார்:

'நானே ஒரு விஷயத்தைப் புரிந்து கொள்ளாவிட்டால், இதரர்களுக்கு எப்படிப் புரிய வைப்பதாம்...? மனத்திலே ஒரு விஷயம் பற்றி சந்தேகம் வந்துவிட்டதானால், இதராளுக்கு நாம் எப்படித் தெளிவிக்க முடியும்?'

பிரமை ஏற்பட்டு மற்றவர்களுடைய அறிவையும் கெடுத்தவர்கள் ஆவோம். அதனால்தான் குரு அவசியம் என்றது. நல்ல முறையிலே ஆசார்யர்களிடத்திலே அடிபணிந்து, சிரவணம் பண்ணினால் ஒழிய, வேதாந்த விஷயங்களெல்லாம் பிடிபடாது. புத்தகத்தைப் பார்த்துப் பாடம் பண்ண வேண்டுமானால் ஒன்றும் பிடிபடாது. அந்தச் சமயத்திலே புரிகிற மாதிரி இருக்கும். ஆனால் அப்புறம் ஒன்றும் தோன்றாது! நடுக்காட்டிலே கொண்டு விட்ட மாதிரி இருக்கும். ஆகவேதான், மெய்யறிவைக் கொடு என்று பிரார்த்திக்கிறது சமகம். 'ஏகமான அந்தப் பரம்பொருளை அறியும் மெய்யறிவைக் கொடு' என்கிறது.

'திஸ்ரஸ்சமே' என, மூன்றாக உள்ள விஷயத்தையும் சமகம் வேண்டுகிறது.

மூன்று என்றால் யார்...? பிரும்மா, விஷ்ணு, மஹேஸ்வரன் என்று அர்த்தம்.

பிரும்ம ரூபத்திலே இருந்து பகவான் தம்மைப் பகுத்துக் கொண்டு, ருத்ர ரூபியாகவும் இருக்கிறான்; பிரும்ம ரூபியாகவும் இருக்கிறான்; விஷ்ணு ரூபியாகவும் இருக்கிறான்.

நமோ ஹிரண்ய கர்ப்பாய
ஹரயே சங்கராயசா...
வாசுதேவாய தாராய...
என்று விஷ்ணு புராணம் கொண்டாடுகிறது.
முனியே நான்முகனே முக்கண்ணப்பா!

**தேவராய் நிற்கும் அத் தேவும் அத் தேவரில்**
**மூவராய் நிற்கும் முது புணர்ப்பும், யாவராய்**
**நிற்கின்றது எல்லாம் நெடுமால் என்று ஓராதார்**
**கற்கின்றது எல்லாம் கடை.**

– இப்படி இவனைத் திருமழிசை ஆழ்வாரும் கொண்டாடுகிறார்.

ஆண்டாள் அடித்துச் சொல்கிறாள். 'திரடம் திரடம்' என்று வேதத்திலே கனம் சொல்கிற மாதிரி அவன் 'மாயன்' என்பதை அடித்துச் சொல்கிறாள்:


மாயனை, மன்னும் வடமதுரை மைந்தனை. 'மாயனை' என்று பலமுறை சொல்லாமல் ஒரே 'மாயனை'யில் நிறுத்திவிடுகிறாள் ஆண்டாள். நிறுத்துகிறபோதே அழகாய் இருக்கிறது. 'மாயனை' என்பதிலேயே, அத்தனை மாயா சேஷ்டிதங்களும் அடங்கிப் போய்விடும். 'எல்லாம் மாயம்; உன்னைப் புரிந்து கொள்வது ரொம்பக் கஷ்டம்' என்று ஆகிவிடுகிறது.

'புகழோம், பழியோம்' என்றார் நம்மாழ்வார், பெரிய திருவந்தாதியிலே.

எம்பெருமானை நாம் புகழ்வது என்று ஆரம்பித்தால் அது மொத்தம் பழிச்சொல்லாகிவிடும். நாம் புகழ்வது என்பது எம்பெருமானுடைய பெருமைக்கு ஈடாகிவிட முடியுமா! என்ன சொல்லி அவனைப் புகழ்வது!

உலகிலே ஸ்தோத்திரம் என்பது இரண்டு விதமானது – இருப்பதை சொல்லிப் புகழ்வது; இல்லாததை ஏறிட்டு, 'இந்திரன், சந்திரன்' என்று ஒருவரை ஸ்தோத்திரம் பண்ணுவது. பகவத் விஷயத்திலே இது இரண்டுமே முடியாது என்கிறது சாஸ்திரம். பகவானிடத்திலே என்ன இருக்கிறது என்று சொல்ல முடியுமா...? இல்லாததை ஏறிட்டுச் சொல்ல முடியுமா? இரண்டுமே முடியாத காரியம். அவன் எல்லாவற்றுக்கும் அப்பாற்பட்ட நிலையிலே இருக்

முக்கூர் லக்ஷ்மிநரசிம்மாச்சார்யார்





''சின்னஞ்சிறு குழந்தைகளுக்காக வித்தியாசமான முறையில் ஒரு பாவர் பத்திரிகை துவங்கப் போறேன் சார். உங்க ஆசீர்வாதம் வேணும்...''

''என் மனமுவந்த தாலாட்டுக்கள்!''

— பெ. கலாசாமி

கிறான்.

கேனோபநிஷத் அதைச் சொல்கிறது:

யார் 'அந்த எம்பெருமானை இன்னும் நான் உணரவில்லை' என்று சொல்கிறாரோ, அவர்தான் உண்மையிலேயே அவனை உணர்ந்திருக்கிறார். 'பகவானைக் குறித்து ஒன்றும் எனக்குத் தெரியாது; நான் அஞ்ஞானி' என்று சொல்பவர்கள்தான் அவனை உண்மையில் தெரிந்து கொண்டவர்கள் ஆவார்கள்!

— இந்த கேனோபனிஷத் விஷயத்தைத் தான் சுருக்கி 'புகழோம்; பழியோம்' என்று சொன்னார் ஆழ்வார்.

அவனைப் புகழாமல் இருந்து விட்டால் பழியாமல் இருக்கலாம்!

சுவாமி தேசிகன், வரதராஜ பஞ்சாஷத் என்ற ஸ்தோத்திரத்திலே என்ன சொல்கிறார்...?

"வரதா! தேவாதி ராஜா! உன் பிரபாவத்தை என்னாலே சொல்ல முடியுமா? இருந்தாலும் பேசுகிறேனே — ஏன் பேசுகிறேன் என்றால், அந்த வாத்ஸல்யம் பேச வைக்கிறது. எம்பெருமானாகிய உன்னுடைய காருண்யம்தான் பேச வைக்கிறதேயொழிய, அவன் பெருமையை யாரால் அடக்க முடியும்? பேச முடியும்?... சொல்லுக்கு அப்பாற்பட்டவன் அவன்!"

சொல்லுக்கு அப்பாற்பட்டு, சிந்தனைக்கு அப்பாற்பட்டு, மனத்துக்கு அப்பாற்பட்டும் நிற்கும்படியான அவனை உள்ளபடி கண்டவர் யார்...?

யாருமோர் நிலைமையனென அறிவரிய எம்பெருமான்;

யாருமோர் நிலைமையனென அறிவெளிய எம்பெருமான்.

— நம்மாழ்வாருடைய இந்த வாக்கை ரொம்ப அழகாக நாம் கவனிக்க வேண்டும்.

— இவன் இப்படிப்பட்டவன் என்று ஒருவராலும் அறிய இயலாத இயல்புடையவன்;

— இவன் எப்படிப்பட்டவன் என சிலரால் அறியப்படக் கூடியவன்.

— இப்படி இரண்டு அர்த்தமும் வருகிறது. அறிவதற்கு அரியவனே எவ்வாறு அறிவதற்கு எளியவனாகவும் இருக்க முடியும்?

இப்படி இரண்டு விதமாகவும் சொன்னால் மூளை குழம்பாதா...?

குழப்பமே வேண்டாம்! — அவனிடத்திலே பக்தி இல்லாதவர்களால் தெரிந்து கொள்ள முடியாது; பக்தி உள்ளவர்களால் — அவன் திருவடியைப் பற்றியவர்களால் தெரிந்து கொள்ள முடியும். அவ்வாறு பற்றியவர்களுக்கு அவன் தன்னையே காட்டித் தருகிறான்.

அடி பணிபவர்களுக்கு எளியவன்; அடி பணியாதவர்களுக்கு அரியவன் என்பதனாலேதான், ஹிரண்ய கசிபுவுக்கு அறிவரிய எம்பெருமானாகவும், பிரஹலாதனுக்கு அறிவெளிய எம்பெருமானாகவும் காட்சி தந்தான்.

குழந்தை பிரஹலாதன் அழகாகச் சொன்னான்:

'எங்கே இருக்கிறான்? என்று கேட்கிறீர்களே அப்பா, அவ்வாறு கேட்கும் உங்களுக்குள்ளேயே இருக்கிறான். நீங்கள் கேட்கிற கேள்வியின் ஒலியிலேயே இருக்கிறான்!'

ஹிரண்ய கசிபு, பகவானை இல்லை என்றவன்! ஆனால் அவனுள்ளேயும் பகவான் இருக்கிறான். பரம பக்தியோடு பேசுகிற பிரஹலாதனிடத்திலேயும் இருக்கிறான்! ஆனால் என்ன வித்தியாசம் எனில், ஹிரண்யகசிபுவின் உள்ளே இருந்தாலும், அவன் அதை உணராத வண்ணம் இருக்கிறான். பிரஹலாதன் உணரும் வண்ணம் அவனிடத்திலே உறைகிறான்.

எங்கும் பரவி அந்தர்யாமியாய் இருக்கும்படியான பரமாத்மா, ஹிரண்ய கசிபுவினிடத்திலும் இருக்கிறான் என்பது சத்தியம்.

**ச**ஹஸ்ரநாமத்திலே, பின்னாலே ரொம்ப அழகான ஒரு திருநாமம் வரும்:

விஜிதாத்மா விதேயாத்மா சத்கீர்த்தி:

# கல்கி

அடுத்த இதழுடன்...




கல்யாணம் தொடர்பான கலர்புல் இலவச இணைப்பு!
எதிர்பாருங்கள்!


சின்னஸம்சய:

சம்சயத்தையெல்லாம் போக்கக் கூடியவன் அவன் என்று உபநிஷத் சொல்கிறது.

இந்த ஹ்ருதயத்திலே எத்தனையோ சந்தேகங்கள். ஆசார்யர்கள் சொல்வதை நாம் நம்ப வேண்டும். அப்படி ஆகுமா இப்படி ஆகுமா, என்று சந்தேகப்பட்டுக் கொண்டே இருக்கலாகாது. அவ்வாறு சந்தேகப்படுகிறவனைப் பார்த்து பகவானே சொல்கிறான்:

சம்சயாத்மா வினச்யதி!

வெறுமே ஒருத்தன் சந்தேகப்பட்டால் அவன் நாசத்தைத்தான் அடைவான். விச்வாசம் வேண்டாமா...?

சம்சய, அக்ருதா ஞான, விபரீத ஞான தோஷங்கள் எல்லாம் இல்லாமல், நல்ல விஷயங்களை கிரஹிக்க வேண்டும். வேறான முறையிலே கிரஹிக்கக் கூடாது.

ஆசார்யர் விளக்கம் சொல்லிக் கொண்டே வருகிறபோது, கோணலாக ஓர் அர்த்தம் தோன்றும். அவர் சொல்கிற அர்த்தத்துக்கு நேர் விரோதமான, விபரீதமான அர்த்தம் தோன்றும். அப்படியெல்லாம் நாம் அர்த்தம் பண்ணிக் கொள்ளக் கூடாது. அவர் என்ன சொல்கிறார் என்பதை, நன்கு தெளிந்து, கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும். பிரச்ன மதியாக உடனே புரிந்து கொள்ளும் ஆற்றலுடன் திகழ வேண்டும்.

இதுதான் ருஜு புத்தி என்று பெயர். அவ்வாறு இல்லை என்றால் அது அருஜு.

ஆர்ஜவம் என்கிற குணம் ரொம்ப முக்கியம். பகவானிடத்திலே அது விசேஷமாக இருக்கிறது.

ஆகையினால் இந்த இடத்திலே, நல்ல முறையிலே, தெளிந்த ஞானத்தோடு கிரஹித்தல் அவசியம்.


விஜிதாத்மா விதேயாத்மா _ என்று இரு நாமங்களைச் சேர்த்துத்தான் உச்சரிக்கிறோம்.

இதற்கு என்ன பொருள்?.....

ஆதி சங்கர பகவத்பாதாள் ஒரு விதமாகப் பதம் பிரித்துப் பொருள் சொன்னார்.

பராசர பட்டர் என்கிற ஆசார்யர் பகவத் குண தர்பணம் என்கிற பாஷ்யத்திலே வேறு விதமாகப் பதம் பிரித்துப் பொருள் சொன்னார்!

(வளரும்)



# பகல் கனவு?

நியூஜிலாந்து சுற்றுப் பயணத்துக்கு முன்பு, இந்திய கிரிக்கெட் அணி வெற்றி நடை போட்டபடி இருந்தது. அண்மையில் அந்த அணி இங்கிலாந்து சென்றபோது, நல்லவேளை, மிதமான சீதோஷ்ணமும், நல்ல பிட்சுகளும் நமக்குச் சாதகமாக அமைந்தன. டெஸ்டுகளில் முதலில் தோல்வியைச் சந்தித்தாலும், பிற்பகுதியில் அபாரமாக விளையாடி, நம்மவர்கள் விளையாட்டு வீரர்கள் தான், கோழைகளல்ல என்று நிரூபித்தார்கள். நாட்வெஸ்ட் ஒரு நாள் பந்தய வரிசையிலோ அற்புதமான வெற்றி. டெஸ்டுகளில் உலகில் சிறந்த பாட்ஸ்மன் டெண்டுல்கரா, டிராவிடா என்ற புதுக் கேள்வியை எழுப்பிய உபதலைவர் ராகுல், ஒரு நாள் பந்தயத்தில் ஒரு புதிய அவதாரமெடுத்தார். (அவரை விக்கட் கீப்பிங் பளுவைச் சுமக்க வைத்த இந்திய அணி, அதன் மூலம் பாட்ஸ்மென் எண்ணிக்கையை ஏழாக அதிகரித்துக் கொண்டது). வீரேந்திர ஷேவாகோ கேட்கவே வேண்டாம், தமது அதிரடி சாகசச் செயல்களால் கிரிக்கெட் பிரியர்களை மயக்கினார். சில அவசரக் குடுக்கை விசிறிகளும், விமர்சகர்களும் அவரை மற்றொரு சச்சின் என்று வருணிக்கத் தொடங்கினர். இளைஞர்கள் யுவ்ராஜ் சிங்கும், முகம்மது கைஃபும் முதிர்ந்த அனுபவசாலிகளின் விவேகத்துடனும், இளரத்தத்தின் வேகத்துடனும் செயல்பட்டு தோல்வியை வெற்றியாக மாற்றினர். இருவருமே ஃபீல்டிங்கில் இந்தியர்களுக்கு அறிமுகமில்லாத புதிய எல்லைகளைத் தொட்டார்கள். தங்கள் சீனியர்களையும் உசுப்பி விட்டார்கள். (அதற்கு முன்னால் டெஸ்டுகளில் பதினேழு வயது பார்த்திவ் படேலின் விக்கெட் காக்கும் திறமை உலகத்தையே வாய் பிளக்க வைத்தது.)



சில ஆண்டுகளாகவே இந்திய அணிக்கு உலகத்தில் சிறந்த பாட்டிங் அணி என்ற முத்திரை உண்டு. அது முற்றிலும் உண்மையில்லை என்றாலும், பாட்டிங்குக்குச் சாதகமான பிட்சுகளில் நமது ஆட்டக்காரர்களுக்கு நிகர் யாருமில்லை. 2001ல் கொல்கத்தாவில் ஆஸ்திரேலியாவுக்கெதிராக நமது அணி புரிந்த மாயாஜாலம், இந்தியாவும் ஒரு கிரிக்கெட் வல்லரசாக மாற வாய்ப்புண்டு, என்று உலகத்தையே நம்ப வைத்தது. (அன்று ஈடன் தோட்டத்தில் பிரதான மந்திரவாதியாகப் பிரகாசித்த விவிஎஸ் லக்ஷ்மன் இன்று உலகக் கோப்பை அணியில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை) இங்கிலாந்தில் இந்த நம்பிக்கை வலுப்பட்டது. மேல்நாட்டு விமர்சகர்களும் 2003 உலகக் கோப்பையை வெல்ல இந்தியாவுக்கு நல்ல தகுதிகள் உண்டு என்று பேச ஆரம்பித்தார்கள்.

ஆனால் இன்றைய நிலைமையென்ன? நியூஜீலந்தில் நமது அணி குப்புற விழுந்து மண்ணைக் கவ்வியது. ஸ்டீபன் ப்ளெ








# வி. ராம்நாராயண்

மிங்கின் கிவி படையினர் குறி மாறாத, கட்டுப்பாடும் புத்திசாலித்தனமும் நிறைந்த வேக, மித வேகப் பந்து வீச்சில் தாங்கள் யாருக்கும் சளைத்தவர்களில்லை என நிரூபித்தார்கள். பந்து பக்கவாட்டில் நகர ஆரம்பித்தால், நமது நட்சத்திர பாட்ஸ்மெனுக்கு சிம்ம சொப்பனம் என்பது நிரூபணமாயிற்று. டெஸ்டுகளில் வாங்கிய சக்கை உதை, ஒரு தின வரிசையிலும் நமது மனோ நிலையை பாதித்தது. ஷேவாக், ஸ்ரீநாத், யுவ்ராஜ் சிங் மற்றும் ஜகிர்கான் தவிர யாரும் ஸ்கோரரை (ரன் விக்கெட் கணக்கர்) அதிகம் தொந்தரவு செய்யவில்லை. உலகக் கோப்பைக்கு ஒரே மாதம் இருக்கும் தருவாயில், நமது வீரர்கள் மனக் கவலையுடன், நம்பிக்கை தகர்ந்த நிலையில் ஊருக்குத் திருப்பினார்கள்.

ஆனால் இந்திய விசிறி இலேசுப்பட்டவரல்ல. அவருக்குத் தெரியும் தென் ஆப்பிரிக்கா நியூஜீலந்தல்ல, உலகக் கோப்பை, இரண்டு நாடுகளுக்கு மத்தியிலான போட்டியல்ல என்று. தென் ஆப்பிரிக்காவில் நல்ல பிட்சுகள் அமைய நல்ல வாய்ப்புண்டு. சுபாவமாகவே அங்குள்ள பிட்சுகள் பந்து எகிறுவதை ஆதரித்தாலும், பக்கவாட்டில் அவ்வளவு விஷமம் செய்யவிடாது. மேலும் போலருடன் நட்பு கொண்ட பிட்சுகள் தயாரித்து 100 - 120 என்று இன்னிங்ஸ் ஸ்கோர்கள் அமையும்படி செய்தால், யாரும் உலகக் கோப்பை பந்தயங்களைப் பார்க்க வரமாட்டார்கள். ஏனென்றால் பார்வையாளர்களைப் பொறுத்தவரை அவர்கள் சிறந்த போலர்களையும் பாட்ஸ்மெனிடம் அடி உதை வாங்கும் பலி ஆடுகளாகவே காண விரும்புவார்கள்!

நம் எல்லோருக்கும் தெரியும் இந்திய அணியின் தலைசிறந்த பலம் அதன் பாட்டிங் திறமைதானென்பது. அது இப்பொழுது ஆட்டம் கண்டிருந்தாலும்








# நாஸர் உசேனுக்குச் சிறை?



• நாஸர் உசேன்

● முதன்முறையாக ஆப்பிரிக்காக் கண்டத்தில் கிரிக்கெட் உலகக் கோப்பை நடக்கவிருக்கிறது. இப்போதெல்லாம் பல நாடுகளை உற்சாகப்படுத்தும் வகையிலும் - அதைவிட முக்கியமாக வணிக நோக்கிலும் - ஒன்றுக்கும் மேற்பட்ட நாடுகளில் உலகக் கோப்பையை நடத்துவது வழக்கமாகிவிட்டது. அந்த விதத்தில் தென்னாப்பிரிக்காவில் மட்டுமல்லாது ஜிம்பாப்வே, கென்யா ஆகிய நாடுகளிலும் போட்டி நடைபெற உள்ளது. என்றாலும் மிகப் பெரும்பாலான மற்றும் முக்கியப் போட்டிகள் தென்னாப்பிரிக்காவில் தான்.

● சிக்கல்களில் சிக்கிக் கொண்டு தன்மீது படிந்த கறைகளை நீக்கிக் கொள்ள முடியாத நிலையில் இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் கேப்டன் அசாருதீன் என்ன செய்கிறார்? இடிந்துபோய் உட்கார்ந்து விடவில்லை. ஹைதராபாதில் பெரிய ஜிம் ஒன்றை நடத்தி வருகிறார். நிர்வாகத்தில் தீவிரப் பங்கேற்கிறார் மனைவியும் முன்னாள் நடிகையுமான சங்கீதா பிஜ்லானி. இந்த உலகக் கோப்பையில் எந்த அணி வெல்லும் என்ற கேள்விக்கு அசார் அளிக்கும் விடை 'ஆஸ்திரேலியா'.

அவரவர் வீட்டுக்குப் போய் களைப்பாறி மனதைத் தேற்றிக் கொண்டு திரும்பும் நமது வீரர்களுக்கு, உலகக் கோப்பை ஒரு புதிய பயணமே. பழசை மறக்க அவர்களுக்குத் தேவை நல்ல பிட்சுகளும், ஓரிரு வெற்றிகளும்தான்.

நமது போலர்கள் இப்போது மனோபலத்துடன், நம்பிக்கையுடன் உலகக் கோப்பையை எதிர்நோக்குவார்கள், முக்கியமாக நமது வேகப் பந்து வீச்சாளர்கள். ஸ்ரீநாத்தும், ஜஹீர்கானும் 'டாப் – பார்மில்' இருக்கிறார்கள். மற்றவர்களும் அவர்களுக்கு நல்ல கை கொடுக்கும் நம்பிக்கை எழுகிறது. ஆனால் நியூஜிலாந்தில் பிட்சுகளும், சுற்றுப் புறமும் அளித்த உதவி, தென் ஆப்பிரிக்காவில் கிடைப்பது துர்லபம். மேலும் அனில் கும்ப்ளேவும், ஹர்பஜன் சிங்கும் சுழற்பந்து வீச்சாளர்கள் – அவர்கள் அங்குள்ள,



• யுவராஜ்

அதிகம் பந்து திரும்பாத, பிட்சுகளில் கூடுதல் முயற்சி செய்ய வேண்டியிருக்கும். திறமைசாலியான முரளி கார்த்திக் இடம் பெறாதது ஒரு பெரிய குறைதான்.

கடைசியாக ஃபீல்டிங்குக்கு வருவோம். இன்றைய அணிகளிலேயே, இந்தப் பகுதியில் பின் வாங்கிய அணிகள் இந்தியாவும் பாகிஸ்தானும்தான். இளைஞர்கள் இன்று அற்புதமாக பீல்டிங் செய்தாலும், இந்திய அணியில் சீனியர் சிட்டிஸன்ஸ் சற்று கூடுதலாகவே இருக்கிறார்கள். ராகுல் டிராவிட், விக்கெட் கீப்பர் பணி செய்யும் பரிசோதனையும், இப்போது ஒரு கேள்விக் குறியாக இருக்கிறது. வகையான சந்தர்ப்பங்களில் அவர் கோட்டை விடுவாரா? விக்கெட் கீப்பிங் பணி அவரது பாட்டிங்கை பாதிக்குமா? பார்த்திவ் படேலைச் சேர்த்துக் கொண்டால் அணி சீர் குலையுமா?

1983ல் நாம் உலக சாம்பியன் ஆனபோது அதை யாரும் எதிர்பார்க்கவில்லை. மேற்கண்ட காரணங்களுக்காக, நாம் இப்போதும் பகற்கனவு காண வேண்டாம். ஆனால் சூப்பர் சிக்ஸ்–ல் இடம் பெறுவோமா என்ற கேள்விக்கு பதில் காண முயலுவதில் தவறில்லை. அதாவது போன உலகக் கோப்பையைப் போலவே, இம்முறையும் பங்கேற்கும் மொத்த அணிகளிலிருந்து ஆறு அணிகள் 'சூப்பர் ஸிக்ஸ்' என்ற இரண்டாவது சுற்றுக்குத் தகுதி பெறும். நமது பகுதியில்

● "எனக்கு இதை ஜீரணிக்கவே சிரமமாக இருக்கிறது" என்று வருத்தப்பட்டிருக்கிறார் ஜடேஜா. அவர் ஒன்றும் கடப்பாறையை முழுங்கிவிடவில்லை. 1992, 1996, 1999 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற உலகக் கோப்பைப் பந்தயங்களில் தொடர்ந்து பங்கு பெற்றவர் அவர்.

இங்கிலாந்து கேப்டன் நாசர் உசேனுக்கு உலகக் கோப்பை போட்டிகளின் முதல் தினத்தன்று ஜிம்பாப்வேயில் காத்திருப்பது பெரும் வரவேற்பா அல்லது சிறைத் தண்டனையா என்பது தீர்மானிக்கப்படவில்லை! ஜிம்பாப்வேயின் பிரதமர் முகாபேவோடு தாம் கை குலுக்கப் போவதில்லை என்று அறிவித்திருக்கிறார் நாசர் உசேன். இதை ஒரு விளம்பர ஸ்டண்ட்டாக முகாபே வருங்காலத்தில் பயன்படுத்தக்கூடும் என்று காரணம் கூறுகிறார். ஆனால் ஜிம்பாப்வேயில் சமீபத்தில் உருவான சட்டப்படி, பிரதமரை அவமதிப்பது கிரிமினல் குற்றம்! சிறைத் தண்டனை நிச்சயம்! என்ன நடக்கப் போகிறது? இதற்கும் பெட்டிங் இருக்குமோ?

● இங்கே ஆளாளுக்குப் போட்டிகளை அறிவித்து முதல் பரிசு 'உலகக் கோப்பையை நேரில் காண்பதற்கு நுழைவுச் சீட்டு' என்று அறிவித்திருக்கிறார்கள். இந்தப் போக்கை உடனடியாக நிறுத்திக் கொள்ள வேண்டும் என்று எச்சரிக்கை செய்திருக்கிறார் சர்வதேச கிரிக்கெட் குழுவின் முக்கிய அதிகாரிகளில் ஒருவரான அலி பாஷர். என்ன காரணம் என்பது யோசித்தால் விளங்கிவிடுமே.

- ஆதர்ஷ்

• அசார்



நமக்கெதிரான போட்டியைத் தாண்டி, நம்மால் அந்த இரண்டாவது சுற்றை அடைய முடியுமா?

நமது பகுதியில் இடம் பெறும் இங்கிலாந்து, ஆஸ்திரேலியா மற்றும் பாகிஸ்தான், மூன்றுமே பலம் வாய்ந்தவை. ஆஸ்திரேலியா, பாக். பற்றி நமக்கு நன்றாகவே தெரியும், எவ்வளவு திறமைசாலிகள் என்று. ஆனால் இங்கிலாந்தை கிள்ளுக்கீரையென நினைத்து விட வேண்டாம். அந்த அணி எப்போதுமே உலகக் கோப்பையில் சிறப்புடன் விளையாடும் அணி. அண்மையில் அந்த அணியில் நல்ல சுறுசுறுப்பான, திறமை வாய்ந்த இளைஞர்கள் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். (வெள்ளையர் மொழியில் சொன்னால்) திருமணப் பெண்ணாக இதுவரை மண மேடையில் உட்காரா விட்டாலும், பெண்ணின் தோழியாக அமரும் சாமர்த்தியம் கொண்ட அணி. எச்சரிக்கை: இங்கிலாந்து ஜாக்கிரதை!

இந்தியாவுக்கு சூப்பர் சிக்ஸில் இடம் பெற கிட்டத்தட்ட 40 – 60% வாய்ப்புகள் உண்டு என்று நம்புகிறேன்.

இதுவரை நடந்த உலகக் கோப்பை பந்தயங்களில் 1975, 1979ல் நடை பெற்ற முதலிரண்டு போட்டிகளில் எதிர்பார்த்தபடி மேற்கிந்தியத் தீவுகள் அணி வென்றது என்றால், அதற்குப் பிறகு ஒவ்வொரு முறையும் எதிர்பாராத கறுப்புக் குதிரைகளே வெற்றி பெற்று வருகின்றன. கடைசி உலகக் கோப்பையில் ஃபேவரேட் ஆஸ்திரேலியா ஜெயித்தாலும், சற்றே தட்டுத் தடுமாறிய பிறகுதான் ஸ்டீவ் வா கோப்பையைப் பெற்றுக் கொண்டார். இம்முறையும் ஆஸ்திரேலியாதான் ஃபேவரேட், அவர்களுக்கு மிக அருகில் தென் ஆப்பிரிக்கா. ஸ்ரீ லங்காவை யாரும் இலேசாக நினைக்க வேண்டாம். ஆனால் அவர்கள் பகுதியில் பலத்த போட்டி – ஸ்ரீலங்கா, தென் ஆப்பிரிக்கா, நியூஜிலாந்து மற்றும் வெஸ்ட் இண்டீஸுக்கு இடையே; எந்த மூன்று அணிகள் இரண்டாவது சுற்றில் இடம் பெறும் என்பது பெரிய சஸ்பென்ஸ் தான்.

இந்த உலகக் கோப்பையில் வெஸ்ட் இண்டீஸ் பழையபடி பிரமாதமாக ஆடுவார்களா? என்னைக் கேட்டால், ஆமாம் என்று தைரியமாகச் சொல்லா விட்டாலும், அவ்வாறு நடக்க வேண்டும் என்று ஆசைப் படுவேன். ஏனென்றால் அது ஒரு கவர்ச்சிகரமான அணியாக உருப்பெற்று வருகிறது. லாரா, ஹூப்பர், சர்வான், சாமுவல்ஸ் கேல், ஹைண்டஸ், சந்தர் பால், டில்லன், ஜேக்கப்ஸ் அற்புதமான நட்சத்திர அணி!

அட்டை, படங்கள்: சாரி

# கனவல்ல; நிஜம்!

**விமர்சகர்கள் வேண்டுமானால் 'பகல் கனவு' என்று சொல்லலாம்... உலகக் கோப்பை, 'கனவல்ல; நிஜம்' என்கிறார் ஜோதிடர் கே.பி.வித்யாதரன்!**

"ஃபுட்பாலுக்கான கிரகம் சனி, டென்னிஸுக்குச் சந்திரன், கிரிக்கெட்டுக்கு சுக்கிரனும் செவ்வாயும், இந்த இரண்டும் வலுவா இருக்கறவங்கதான் கிரிக்கெட் விளையாடுபவர்களாகவோ ரசிப்பவர்களாகவோ இருப்பாங்க. நம்ம கேப்டன் கங்குலி ஏழரை சனியில பிறந்தவர். அந்த சனியே அவருக்கு ராஜயோகம் தரும். குரு திசை கோதண்டத்துல இருக்கறதால அவருக்குச் சாதனைகளை நிச்சயம் கொடுக்கும். மற்ற தோல்விகளை இந்த வோர்ல்டு கப்ல அவர் சரி பண்ணிடுவார். இவர் ராசிதான் வீரேந்திர ஷேவாக்குக்கும். ஆனா ராகுல் திராவிட் தான் இந்த வோர்ல்டு கப்லயும் நல்லா சோபிக்கப் போறாரு. ராகுல் மட்டும் கேப்டனா இருந்தா நிச்சயமா இந்திய அணி உலகக் கோப்பையை வெல்லும். இதுல சந்தேகமே இல்லை. மீன ராசிக்காரரான அவருக்கு இது நல்ல டைம். இந்திய அணியில சச்சின், யுவராஜ், ஹர்பஜன், ஸ்ரீநாத், ஜாகிர்கான் இவங்களும் நிறைய ஆச்சர்யப்பட வைப்பாங்க.

பிப்ரவரி 12, 15, 19 தேதிகள்ல நடக்கற மேட்சுகளில் இந்தியா சந்தேகமே இல்லாம வெற்றி பெறும். இங்கிலாந்து உடனான போட்டிதான் எப்படி வேணும்னாலும் மாற லாங்கற நிலையில இருக்கு. இருந்தாலும், இந்தியா இறுதியாட்டம் வரை வர்றதுல எந்தச் சந்தேகமும் இல்லை. இந்தியாவை இறுதியில எதிர்த்து நிற்கப் போறது ஆஸ்திரேலியாதான். அந்த அணி கேப்டன் ரிக்கி பாண்டிங்குக்குக் கும்ப ராசி. இப்போதைய நிலைமையில அவருக்கு நல்ல வாய்ப்பு இருக்கு. வழக்கமா ஃபைனல்ல நம்ம வழுக்கி விழற மாதிரி, இந்த முறையும் ஆகுறதுக்கு வாய்ப்பு இருக்கு. மத்தபடி ஃபைனல் நடக்கற நேரமும் மைதானமும்தான் இறுதி வெற்றியை முடிவு செய்யப்போகிறது."

**ரிக்கி பாண்டிங்**

| | | | |
|---|---|---|---|
| | | கேது | சனி |
| குரு சந்திரன் | ராசி | | |
| | | | |
| சூரியன் புதன் சுக்ரன் / ல | செவ்வாய் ராகு | | |

**கங்குலி**

| | | | |
|---|---|---|---|
| | | சந்திரன் சனி / ல | சூரியன் சுக்ரன் |
| | ராசி | | புதன் செவ்வாய் கேது |
| ராகு | | | |
| குரு | | | |



• கே.பி.வித்யாதரன்



• ரிக்கி பாண்டிங்

- அப்பு

படம் : வெங்கடேஷ்




—கதிர்
புத்தகக் கண்காட்சியில்...
கடையயவே காலி பண்ணிட்ட போலிருக்கு
அப்பா! என்ன கூட்டம்! என்ன கூட்டம்!
எந்த ஸ்டால்ல அவ்வளவு கூட்டம்?
எனக்கும் ஒரு ஸ்டாலுக்குப் போய்ட்டு வர அரைமணி நேரமாகுது.
பஜ்ஜி ஸ்டால்லதான்
என்ன தானிருந்தாலும்... புக்ஸை விட பஜ்ஜிக்குத்தான் வாசனை ஜாஸ்தி
நீ நேரா அங்கதானே போயிருப்பே...
...எல்லாருக்கும் அறிவுப் பசினா, உனக்கு வயித்துப் பசி!
இப்பதானே வயத்துல ஆரம்பிச்சிருக்கு. இனிமேதான் படிப்படியா மேல ஏறி அறிவுப் பசியா மாறும்.
இவன் வாங்கியிருக்கற புக்ஸ் பாத்தீங்களா?


# நடக்குமென்பார்; நடக்கும்!



**மேஷம் :** சமையல் எரிவாயு, கெரசின், திடீர் விலை ஏற்றம்போல, உங்கள் வாழ்விலும் அந்தஸ்து, மதிப்பு உயரும் நேரம் வந்துவிட்டது. ராசிநாதன் செவ்வாய் ஆட்சி பெற்று, 8ல் கேதுவுடன் கூடி குரு பார்வையும் பெற்று சஞ்சாரம் செய்வதால், எடுத்த காரியங்களை எப்பாடுபட்டாவது நிறைவேற்றி விடுவீர்கள். புதிய முயற்சிகள் அனுகூலமாகும். சுயதொழில், வியாபாரம் இந்த வகையில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். தேவைக்கேற்ப பணவசதி உண்டாகும். இயந்திரம், இன்ஜினியரிங், இன்டஸ்ட்ரீஸ், ரியல் எஸ்டேட், உலோகம், தோல் பொருள் போன்றவை அனுகூலம் தரும்.



**ரிஷபம் :** ஈராக் மீது தாக்குதல் 'கவுண்ட் டவுன்' துவக்க ஆயத்தமாகியிருக்கும் அமெரிக்காபோல, நீங்களும் உங்கள் எதிரிகள் மீது தாக்குதல் நடத்தத் தயாராவீர்கள். இதனால் உத்தியோகம், தொழிலில் உள்ள மறைமுக எதிரிகள் ஓடிப் போவார்கள். வெற்றிக் கனி உங்கள் மடியில்! 7ல் ஆட்சியாக செவ்வாய் கேதுவுடன் குரு பார்வையும் பெற்று, ராசிநாதன் திகழ்வதால், உடல் ஆரோக்கியம் மேன்மை அடையும். சில்லரை தாராளமாகப் புரளும். கொடுக்கல், வாங்கல் தக்க சமயத்தில் கை கொடுக்கும். பயணத்தில் கொஞ்சம் எச்சரிக்கையும், பாதுகாப்பும் தேவை.



**மிதுனம் :** மேட்டூர் அணைக்கு அதிகரிக்கும் நீர் வரத்துப் போல, வறண்டிருந்த உங்கள் கஜானாவும் கலகலவென நிரம்பும். அதற்கான முயற்சிகளில் நீங்கள் தைரியமாக ஈடுபடுங்கள். குரு, தன வாக்குஸ்தானத்தில் சஞ்சாரம் செய்வதால், சுப காரியங்கள் நடக்க சந்தர்ப்பம் அமையும். திருமண முயற்சி கூடி வரும். குடும்பத்தில் விருந்து, உபசாரம், நண்பர்கள், உறவினர்கள் வருகை ஏற்படும். எதிர்பார்த்துக் காத்திருந்த நல்ல செய்தி வந்து சேரும். உடன் பிறந்தவர்கள் அனுகூலமாக இருப்பார்கள். பெண்களுக்கு, மகிழ்ச்சியான பலன்களே உண்டாகும். சாதுக்கள், மகான்கள் தரிசனம் நன்மை தரும்.



**கடகம் :** 'ஸ்கேனிங்' சர்ச்சைக்குள் சிக்கிக் கொண்டிருக்கும் நடிகை குஷ்பூ போல, நீங்களும் ஏதாவது வீண் விவகாரத்தில் மாட்டிக் கொள்ளும் அபாயமிருக்கிறது. எனவே, கடுமையான வார்த்தைகளுக்குத் தடா போடுங்கள். எதிலும் எப்போதும் நிதானம் தேவை. சுய தொழில் புரிபவர்கள் அபிவிருத்தி அடைவார்கள். அரசுப் பணியாளர்கள் முன்னேற்றம் காண்பார்கள். அரசியல்வாதிகளின் மதிப்பு, செல்வாக்கு உயரப் பெறுவார்கள். புதியவர்களின் அறிமுகம் கிடைத்தால், கவனமாகப் பழகவும். 7ம் இடத்தில் குரு பார்வை என்பதால், தாமதமடைந்த சுப காரியங்கள் இப்போது கூடிவரும்.



**சிம்மம் :** சன் டி.வி. ரேட்டிங்கில் 'மெட்டி ஒலி'க்கும், 'அண்ணாமலை'க்கும் மூச்சு முட்ட போட்டி நடப்பது போல, உங்கள் உத்தியோகத்திலும் கடுமையான போட்டி நிலவும். ராசிநாதன் சூரியன் 6ம் இடத்தில் அமர்ந்து குரு பார்வையும் பெற்று உலவுவதால், எல்லா வகையிலும் தைரியத்துடன் செயல்பட்டு வெற்றி காண்பீர்கள் கவலை வேண்டாம். கலைத் துறையைச் சேர்ந்தவர்களுக்கு முன்னேற்றமான காலம். பொன், வெள்ளி, ஆபரணம் ஆகியவை ஆதாயம் கொண்டு வரும். பெண்களுக்கு உற்சாகமான வாரம்.




**கன்னி :** 'புது வீடு.. புது காரு.. பிரமாதம்... கலக்கறே சந்துரு' மாதிரிதான் இந்த வாரம் நீங்களும் கலக்கப் போறீங்க. ராசிநாதன் 4ம் இடத்தில் சஞ்சாரம். அந்த வீட்டின் அதிபதியான குரு, 11ல் உச்சம் பெற்று வக்கிர கதியில் சஞ்சாரம் செய்வது என்ன சாதாரண அமைப்பா? பிரமாதமில்லையா! எனவே.. பணவசதி, பிரபு, தனவான்கள் தொடர்பு, எதிரிகள் ஓட்டம், சுதந்திரமான செயல்பாடு, வியாபார மேன்மை, என தொட்டது துவங்கும், பட்டது ஜெயிக்கும்.




பாடல் ஆசிரியையாக அவதாரம் எடுத்திருக்கும் கவிஞர் இளம்பிறைக்கு (தனுசு) எடுத்தக் காரியத்தில் வெற்றி உண்டாம்.

**அக்னி சர்மா பக்கம்**


**ஜனவரி 29 முதல் பிப்ரவரி 4 வரை**



**துலாம் :** 'இனிமே என் ரேஞ்சே தனி' என்று வானளாவப் போய்க் கொண்டிருக்கும் தங்கத்தின் விலை போல, துலாம் ராசிக்காரர்களும் மேலே... மேலே... முன்னேறி, புகழேணியில் ஏறிக் கொண்டே இருப்பீர்கள். குறிப்பாக, உத்தியோக விஷயத்தில் தடைபட்டு வந்த பல விஷயங்களில் சிக்கல் தீர்ந்து விடும். சக ஊழியர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். மருத்துவம், ரசாயனம், உலோகம், தோல் வகைப் பொருள்கள், எலக்ட்ரானிக்ஸ், ஆயத்த ஆடை இனங்கள், லாபம் அள்ளும். கருத்து வேறுபாடு காரணமாகப் பிரிந்து போனவர்கள் மனம் மாறி ஒன்று சேருவார்கள்.



**விருச்சிகம் :** பிளாஸ்டிக் குடங்களுடன் அலைய ஆரம்பித்திருக்கும் சென்னை வாசிகள் போல, நீங்களும் வாழ்க்கையில் மேன்மை தேடி அலைய ஆரம்பித்திருப்பீர்கள். உங்கள் கிரக சஞ்சாரம் சிறப்பாகவே உள்ளது என்பதால், கவலை வேண்டாம். முக்கியஸ்தர்களின் தொடர்பால் முன்னேற்றம் ஏற்படும். குறிப்பாக, உத்தியோகம் சம்பந்தமாக நல்ல திருப்பங்கள் உண்டாகி, அதனால் சந்துஷ்டி, பொருளாதார அபிவிருத்தி, வாக்கு சாதுர்யம் எல்லாமே சித்திக்கும். சட்டம், இராணுவம், காவல் துறைகளைச் சேர்ந்தவர்கள் செயற்கரிய காரியங்களைச் செய்து சாதனை படைப்பார்கள்.




**தனுசு :** 'அன்பே சிவம்' வெற்றியால், ஆக்ஸிஜன் ஏற்றியது போல சுறுசுறுப்பாக இருக்கும் கமல்ஹாசன் போல, நீங்களும் துறுதுறு திலகமாக உற்சாகம் காண்பீர்கள். எடுத்த காரியம் யாவற்றிலும் வெற்றி, தேவைக்கேற்ற பண வசதி, தெய்வ பலம் ஆகியவை உண்டாகும். 6ம் இடத்தில் சனி உலவுவதால், எதிரிகள் அடங்கிப் போவார்கள். சுய தொழில், வியாபாரம் செய்பவர்கள் முன்னேற்றம் காண்பார்கள். பழைய பாக்கி, கடன் போன்றவை பைசலாகும். பெண்களுக்கு சாதகமான பொருள் சேர்க்கை உண்டாகும்.



**மகரம் :** வாஜ்பாய் வீட்டுக்கு மேல பறந்து பயமுறுத்திய விமானம் போல, உங்கள் வாழ்விலும் சில திருப்பங்கள் நேர்ந்து பதற்றப்பட வைக்கும். கிரக வழிபாடு செய்து, தான தருமங்களில் ஈடுபட்டால், மன அமைதி கிடைக்கும். ராசியில் உலவும் சூரியனை குரு பார்ப்பதால் அரசு விவகாரம் அனுகூலமாகும். தெய்வ பலம் கூடும். மேலதிகாரிகளின் அரவணைப்பான ஆதரவு கிடைக்கும். புதிய உத்தியோகம் சம்பந்தமாக நீங்கள் எடுக்கும் முயற்சிகள் யாவும் கைகூடும். வெளியூர், வெளிநாட்டிலிருந்து சுபச் செய்திகள் வந்து உற்சாகப்படுத்தும்.



**கும்பம் :** சாத்தப் படுக்கை மோசடி வழக்கில் ஏடாகூடமாகச் சிக்கியுள்ள பிரபலங்கள் போல, நீங்களும் அரசாங்க வழக்கு வியாஜ்ஜியங்களில் சிக்கிக் கொள்ளக் கூடும். உஷார்! ஜீவனஸ்தானாதிபதி செவ்வாய் ஆட்சி பெற்று, குரு பார்வை ஏற்பட்டுள்ளதால் உத்தியோக வகையில் உற்சாகமான சூழ்நிலை அமையும். எதிரிகள் விலகிப் போவார்கள். புதிய பொறுப்புகள் ஏற்படும். பதவி உயர்வு, இடமாற்றம் ஏற்படலாம். கூட்டுத் தொழில் மேன்மை அடையும். குடும்பத்தில் மகிழ்ச்சி, ஒற்றுமை, அதிகரிக்கும். மாணவர்களுக்கு உகந்த காலம்.



**மீனம் :** தினம் தினம் குறைந்து கொண்டே வரும் செல்ஃபோன் கட்டணம் போல, உங்கள் உடல்நலப் பிரச்னைகளும் குறைந்து கொண்டே வரும். குருபலம் வேறு பூர்ணமாகப் புன்னகைக்கிறதா? அப்புறம் என்ன? குடும்பத்தில் குதூகலம் ததும்பும். விருந்து, உபசாரம், விளையாட்டு, கேளிக்கைகளில் ஆர்வம் உண்டாகும். திருமணம், கிரகப் பிரவேசம் போன்ற சுப காரியங்கள் நடக்கும். ஞானமார்க்கத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். உடன் பிறந்தவர்களால் அனுகூலம் உண்டாகும். பூர்வீகச் சொத்துச் சிக்கல் தீரும்.



# நித்தம் ஒரு கலாட்டா!

**நை**யாண்டி தர்பார், அரிகிரி அசெம்ப்ளி ஸ்டைலில் ராஜ் டீ.வியில், "டேக் இட் ஈஸி". இதில் பங்கேற்று கலகலப்பாகப் பேசி கலாய்க்கிறவர் நடிகை ஊர்வசி!

"இதை ரொம்ப ஈஸியாகப் பண்ணிவிடலாம்னு நினைச்சு தான் தலையாட்டினேன். ஆனால், அதில் நுழைந்த பிறகுதான் தெரியுது, அது அவ்வளவு ஈஸியில்லைனு. இதுவரை நான் பேட்டிகள் கொடுத்திருக்கிறேன். இந்த நிகழ்ச்சியில் நான் மத்தவங்களைப் பேட்டிகாண முடியுதே! இதுவே எனக்கு ரொம்பப் பிடிச்ச விஷயம். பிடிச்ச விஷயத்தைச் செய்தா கஷ்டம் தெரியுமா என்ன?" என்கிறார் ஊர்வசி.

அனுராதா ரமணன், அருணா சாய்ராம், சாரதா நம்பி ஆரூரன், வஸந்த், ஹரீஷ் ராகவேந்திரா, விஜய் சிவா என்று ஊர்வசி சந்திக்கப் போகும் விருந்தினர்கள் பட்டியல் ரொம்ப நீ.........ளம்!

"இவர்களிடம் கேட்க புதுசா என்ன இருக்கு?"

"தெரிந்த மனிதர்களோட தெரியாத முகங்களை வெளிப்படுத்தறது தான் நோக்கம். குண்டக்க மண்டக்க கேள்வி கேட்கணும். ஆனால், விருந்தினரை அவமானப்படுத்துவது மாதிரியோ தர்மசங்கடத்தில் ஆழ்த்துவது போலவோ இருக்கக் கூடாது. வர்றவங்களும் ஜாலியாக இருக்கணும். பார்க்கிறவங்களும் ரசிக்கணும்."

"விதவிதமான செட் அப்பில் வந்து அசத்தப் போகிறீர்களாமே?"

"ஆமாம்! மைக்கேல் மதன காமராஜன், மாயாபஜார் போன்ற படங்களில் நான் செய்த வித்தியாசமான கேரக்டர்களுக்குரிய காஸ்டியூமில் வந்து கலக்கப் போகிறேன். குடுகுடுப்பைக்காரர், ரௌடி, துப்பறியும் நிபுணர் என்று தினம் ஒரு கலாட்டாதான்! இதில் என்ன ஒரு கஷ்டம் என்றால், ஒரு நாளுக்கு ஐந்து நிகழ்ச்சிகள் வரை ஷூட்டிங். எனவே ஐந்து செட் அப்களில் தோன்ற, விதம்விதமாய் மேக் அப், காஸ்டியூம் போட வேண்டியிருக்கும்.

— பாரதி

வீட்டின் அழகு கதவில் தெரியும் !


Now Flat Buyers insist on

# MAYURAM

## TIMBER DOORS



because




Contact:

**MAYURAM TIMBER & GENERAL TRADING CORPN.**

H.O.: 83, G.S.T.Road, Chennai - 45. ☎:236 8297/238 1281.

Showroom: 13, Rameswaram Road, T.Nagar, Chennai - 600 017. ☎: 434 5207



Agsar
www.agsar.com
உங்கள் எண்ணங்களுக்கேற்ற
பல வண்ணங்களில்
USE NO HOOKS
NETT WT. 25 Kg.
MADE IN INDIA
SUPER
Agsarcem
Waterproof Cement Paint
• நீரிலிருந்து சுவர்களுக்கு பாதுகாப்பு
• நிலையான தரம் • 30க்கும் மேற்பட்ட நிறம்
• நியாயமான விலை • பாசி படியாது மங்காத நிறம்
அக்ஸார் பெயிண்ட்ஸ் பிரைவேட் லிமிடெட், 509A, ஜார்ஜ் ரோடு, தூத்துக்குடி–3.